# கொர்நேலியு – ஓர் உண்மையான தனித்துவம் வாய்ந்த நபர்

## Cornelius - A Truly Unique Individual

Byron Nichols

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில் கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு விசேஷித்த மனிதன் நமக்கு அறிமுகமாகிறார். இந்த மனிதனைக்குறித்து உங்களுக்கு கொஞ்சம் ஞாபகம் இருந்தால், அதை நீங்கள் மறுபடியும் நினைவுப்படுத்துவது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஒருவேளை, நீங்கள் இதுவரை கொர்நேலியுவை சந்திக்காதவர்களாக இருந்தால், அவரை நீங்கள் ஓர் உற்சாகமூட்டும் நபராகக் காண்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**யார் இந்த கொர்நேலியு? ( வசனங்கள் 1 - 2 )**

இந்த மனிதன் ரோம ராணுவத்தில் நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். அதாவது, நூறு ராணுவ வீரர்களுக்கு இவன் தளபதியாக இருந்திருக்கிறான். இரண்டாம் வசனத்தை நாம் படிக்கும்போது, முதல் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஒரு கிறிஸ்தவ தலைவரைப் பற்றிய வரலாற்றைப் படிப்பதாக நீங்கள் உணர்வீர்கள். ஆம், இந்த கொர்நேலியு மிகுந்த பக்தியுடன் தேவனுக்குப் பயந்த வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுடைய வீட்டார் அனைவரும் கூட தேவனுக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதற்குக் காரணம், கொர்நேலியு அவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் தான். இந்த மனிதன் ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்.

இத்தனைக்கும் இந்த கொர்நேலியு ஒரு யூதனல்ல. ஆனால், யூதர்கள் மத்தியில் வாழ்ந்தார். செசரியா பட்டணத்தில் வாழ்ந்த சில யூதர்களுடைய தேவ பக்தி இவரை அதிகமாக ஈர்த்திருக்கிறது. ஆகவே, இவரும் அவர்களைப் போலிருக்க ஆசைப்பட்டார்.

**கொர்நேலியுவின் தரிசனம் ( வசனம் 3 - 8 )**

தரிசனத்தில் தேவதூதனைக் கண்டு, அவனுடைய குரலைக் கேட்டது கொர்நேலியுவுக்கு ஒரு புதுமையான அனுபவமாகத்தான் இருந்திருக்க வேண்டும். நான்காம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி, அவர் தேவதூதனைப் பார்த்துப் பயந்ததில் எந்த ஆச்சரியமுமில்லை! அவருடைய ஜெபங்களும், தர்மங்களும் கவனிக்கப்படாமல் இல்லை.

மேலும், தேவதூதன் கொர்நேலியுவைப் பார்த்து " நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி, நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் " என்று அறிவித்தான். 11 ஆம் அதிகாரம் 14 ஆம் வசனம் "நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் " என்று தேவதூதன் கொர்நேலியுவிடம் சொன்னதாக நாம் பார்க்கிறோம். இங்கே, கொர்நேலியு ஒரு நல்ல மனிதனாக இருந்த போதிலும் அவர் இரட்சிக்கப்படவில்லை என்று நாம் காண முடிகிறது.

**பேதுருவின் தரிசனமும், செசரியாவுக்கான அழைப்பும் ( வசனங்கள் 9 - 23 )**

மோசேயின் பிரமாணம் சம்மந்தமாக பேதுருவுக்கு எவைகள் போதிக்கப்பட்டதோ, எவைகளை பேதுரு பல வருடங்களாக விசுவாசித்தாரோ அவைகளை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்று பேதுருவை ஏற்றுக்கொள்ளவைப்பதற்கு மற்றுமொரு அற்புதம் அவசியபட்டது.



அப்போஸ்தலர் 2 : 38, 39 வசனங்களில் பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு செய்த மாபெரும் பிரசங்கத்தில் எல்லோரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிக்கப்படுவீர்கள் என்று பிரசங்கித்தார். ஆனால், பத்தாம் அதிகாரத்தில் இரட்சிப்பு எல்லோருக்கும் உண்டு என்பதை இவர் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

**பேதுரு கொர்நேலியுவை சந்திக்கிறார் ( வசனங்கள் 24 - 33 )**

கொர்நேலியு சுயநலமற்றவராக இருந்தார். ஏனென்றால், தேவன் இரட்சிப்பின் திட்டத்தை தம்முடைய விசேஷித்த தாசர் மூலமாக கொர்நேலியுவுக்கு அறிவிக்க திட்டமிட்டிருந்தபோது, அவர் தன்னுடைய குடும்பத்தாரும், நண்பர்களும் அந்த இரட்சிப்பின் செய்தியை கேட்க விரும்பினார்.

மேலும், இங்கே கொர்நேலியு பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தது அவருடைய தாழ்மையை வெளிப்படுத்துகிறது. ( வசனங்கள் 25, 26).

வசனம் 33 ல், வேதாகமத்தில் காணும் மிகச்சிறந்த அறிக்கைகளில் ஒன்றை நாம் காணலாம் – " தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான் "

**பேதுருவின் செய்தி ( வசனங்கள் 34 - 43 )**

இந்த சந்திப்பில் யார் அதிகமாக பயனடைந்தது? பேதுருவா அல்லது கொர்நேலியுவா? என்பதில் எனக்கு நிச்சயமில்லை. 34, 35 வசனங்களில் பேதுரு சுவிசேஷம் எல்லோருக்குமானது என்பதைக் காண்கிறார்! தொடர்ந்து அவர் எப்படி யூதர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அதே போல் புறஜாதிகளும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவித்தார்.

**பரிசுத்த ஆவியும், புறவினத்தாரும் ( வசனங்கள் 44 - 48)**

இங்கே மற்றுமொரு அற்புதம் நடக்கிறது, வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள், இதற்கு முன்பு இப்படிப்பட்ட அற்புத சம்பவம் அப்போஸ்தலர்களிடத்தில் பெந்தெகொஸ்தே நாளில் சம்பவித்தது.

இது தேவன் புறஜாதிகளை அங்கீகரித்தார் என்பதற்கான தேவனுடைய வெளிப்பாடாக இருந்தது, எனவே, பேதுரு 47 ஆம் வசனத்தில் இப்படிக் கேட்டார் " நம்மைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு

எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா " என்று. அதன் பின்பு, பேதுரு அவர்கள் ஞானஸ்நானம் பெறும்படி கட்டளையிடுகிறார் ( வசனம் 48 ). கொர்நேலியுவும் அவன் வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியானவராலே பற்பல பாஷைகளைப் பேசினாலும் கூட அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை. எனவேதான், பேதுரு அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெறும்படி கட்டளையிட்டார்.

**நமக்குக் கிடைக்கும் சில பாடங்கள்**

**சத்தியத்தின்படி வாழுங்கள்...**

நம்மை யார் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது ஒருபோதும் நமக்குத் தெரியாது. கொர்நேலியு சத்தியத்தின்படியான வாழ்க்கையினால் மற்றவர்களால் காணப்பட்டு, அறியப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.

**சத்தியத்தை போதியுங்கள்...**

சத்தியம் போதிக்கப்படாமல், வெளிப்படுத்தப்படாமல் இருந்தால் அது அறியப்படாமல் போய்விடும்.

**சத்தியத்திற்கு கீழ்ப்படியுங்கள்...**

சத்தியம் வாழப்படுவதற்கு சாட்சியாக உள்ளவர்களும். சத்தியம் போதிக்கப்பட்டவர்களும் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், அதற்கு, அதாவது சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**நல்ல குணம்...**

நல்ல குணம் இரட்சிப்புக்கு சமமானதாக இருக்க முடியாது. கொர்நேலியு மிகவும் நல்ல மனிதனாக இருந்திருக்கிறான். ஆனால், இரட்சிப்புக்கான தேவனுடைய கட்டளை களுக்கு கீழ்ப்படியவில்லை. அதனால்தான் அவரும், அவருடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெறும்படியாக கட்டளையிடப்பட்டார்கள். அது ஓர் ஆலோசனை அல்ல, தெரிந்து கொள்ளு தலுமல்ல. மாறாக, ஒரு கட்டளையாக இருந்தது. ஆகவே, அது இரட்சிப்புக்கு அவசியமாக இருந்தது.

**இரட்சிப்பு சம்மந்தமாக தேவனே ஆளுகை செய்யட்டும்**

இந்த கொர்நேலியு ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்தார். இருந்தபோதிலும், தேவன் தம்முடைய தாசனாகிய பேதுருவைக் கொண்டு இந்த நல்ல மனிதனுடைய கீழ்ப்படிதல் முழுமை பெறவில்லை என்று போதித்தார். நாம் தேவனுடைய வார்த்தையை உண்மையாகப் போதிக்கிறோம் என்று நிச்சயப்படுத்திக்கொண்டு இளைப்பாற வேண்டும், இரட்சிப்பு சம்மந்தமான முடிவுகளில் தேவனே ஆளுகை செய்யட்டும். இந்த ஆளுகை நித்தியம் வரை நீடிக்கும்.

# எலும்பிடமிருந்து

## From Bones

E.Z.S. RAJANAYAGAM

பரிசுத்த வேதாகமம், வேறு யாருக்கும் தராத ஒரு சிறப்பை யோசேப்புக்குத் தானமாகத் தந்திருக்கிறது. இச்சிறப்பில், இவனுக்கு நிகராக வேறு யாரையும் குறிப்பிட முடியாது. இயேசுவானவரின் வாழ்க்கையோடு, ஒப்பிட்டுப் பேசும்படியான வாழ்க்கை இவனுக்கு மாத்திரமே சொந்தம். ஆம், அவர்களிருவருக்கும் இடப்பட்ட பெயரிலிருந்து அந்த ஒற்றுமை ஆரம்பமாகிறது. இருவருமே, இரட்சிப்பு என்ற ஒரே பொருளையுடைய பெயரைக் கொண்டவர்கள். இருவருமே தங்கள் தகப்பன்மார்களுக்கு மிகவும் பிரியமாயிருந்தவர்கள். இருவருமே தங்கள் சகோதரர்களுக்கு உதவும்படியாக, தகப்பன்மார்களால் அனுப்பப்பட்டவர்கள். இருவருமே தங்கள் சகோதரர்களாலே, பகைக்கப்பட்டு, வெள்ளிக்காசுக்கு விற்கபட்டவர்கள். இருவருமே, தங்களுக்குத் தீங்கிழைத்த சகோதரர்களுக்கு இரட்சகர்களாக மாறியவர்கள். இந்தளவு இயேசுவின் வாழ்க்கையோடு ஒப்பிடும் தகுதி வேறு யாருக்காகிலும் உண்டா?

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த யோசேப்பு, தான் மரிப்பதற்கு முன்பாக, தன் சகோதரரை நோக்கி, **தேவன் உங்களை சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்று சொல்லி யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான்** (ஆதி. 20 :25) என்றுள்ளது. ஒருவேளை, நம்முடைய பார்வையில், சொத்துப்போன மனிதனின் எலும்பு, ஓர் அற்பமான பொருளாக இருக்கலாம். ஆனால், அந்நாட்களில், வாழ்ந்த இஸ்ரவேல ருடைய வாழ்க்கையில், அது அற்பமானதாகக் கருதப்படவில்லை. எப்படியெனில், தாங்கள் அடிமைகளாக, அடி, உதைப்பட்டு அல்லல்படும் வாழ்க்கை வாழ்ந்தாலும், அந்த எலும்புகளை சுமார் 300 ஆண்டுகள் பாதுகாத்து வைத்திருந்தனர். அவசர கோலத்தில் எகிப்தை விட்டுப் புறப்பட்ட அந்த நேரத்தில் கூட எலும்புகளை உரிய இடத்திற்கு கொண்டு வந்து அதைப் பத்திரமாக அடக்கம் செய்திருக்கிறார்கள்...".( யோசு.24 : 32 ) ஆகவே,

இந்த எலும்புகளை மையமாக வைத்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**I. முதற்பாடம் - விசுவாசம்**

யோசேப்பின் எலும்பைக் கொண்டு நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதற்பாடம் " விசுவாசம் ".

விசுவாசத்தின் விளக்காகத் திகழும் எபிரெயர் 11-ம் அதிகாரம் இவ்விதம் சொல்கிறது. **"விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்பு களைக் குறித்து கட்டளை கொடுத்தான் ".** ( 11 : 22 ) இந்த வசனத்தைக் கவனித்தால், " விசுவாசத்தினாலே " தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இது, யோசேப்பு தனது அந்திய காலத்தில் உணர்ச்சிவசப்பட்டுச் சொல்லிய வார்த்தைகள் அல்ல. மாறாக, தேவன் மீது அவன் கொண்டிருந்த ஆழ்ந்த விசு வாசத்தின் வெளிப்பாடு. இன்னும், அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கையின் அடையாளம். அது மாத்திரமல்ல, தன்னுடைய பிதாக்க ளோடு தானும் போய்ச் சேரவேண்டுமென்று அவன் கொண்டிருந்த ஆசையின் அறிகுறி.

யோசேப்பு கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்திருக்கிறார்கள். ஒரு வேளை தலைமுறை மாறினாலும், யோசேப்பின் எலும்பைப் பற்றிய உண்மை மாறாமல் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. புதிய சந்ததியார் யோசேப்பின் எலும்பைப் பார்த்து, அதைக் குறித்து விசாரிக்கும் போதெல்லாம், ஓர் உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அது, " இந்த எகிப்து தேசம் நமக்குச் சொந்தம் அல்ல. தேவன் ஒரு நாளில் நம்மைச் சந்திப்பார். நிச்சயமாகவே நாம் எகிப்தை விட்டுப் புறப்படுவோம் " என்பதே அவ்வுண்மை. தேவனுடைய நேரடி வெளிப்பாடும், மோசேயின் பிரமாணங்களும் இல்லாத அந்தக் காலகட்டத்தில் தேவன் மீது நம்பிக்கை கொள்ள இந்த எலும்புகள் கண்டிப்பாக அவர்களுக்கு உதவியிருக்க வாய்ப்புண்டு.

II **இரண்டாம் பாடம் - மன்னிப்பு :**

அப்படி அவன் யாரை மன்னித்தான் என்று கேட்கிறீர்களா? உங்களுக்கே நன்றாகத் தெரியும். எதற்கும் ஓரளவு சொல்லுகிறேன்.

தன் தகப்பனுக்குப் பிரிய மகனாக, ஏகபோக செல்வாக்கோடு வளர்ந்து வந்த யோசேப்பு, சதிகார சகோதரர்களால் கொடுமையாக நடத்தப்பட்டு, ரூபனின் தயவால் படுகுழியில் தள்ளப்பட்டு, யூதாவின் புண்ணியத்தால் மீதியானியரின் கையில் விற்கப்பட்டு, எகிப்துக்கு ஒருவழியாய்ப் போய் சேர்ந்தான். அங்கு அப்பாடா என்று போர்த்திபாரின் வீட்டு விசாரணைக்

காரனாக இருந்தபோது, வெறிகொண்ட தன் எஜமானியால் பொய்ப்பழி சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் தள்ளப்படுகிறான். இப்படி அவன் சிறைச்சாலையில் போதுமான அவகாசத்துடன் தன் நாட்களைக் கழித்த போது, அவனுடைய எண்ணங்களெல்லாம் எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள். அப்படியே, பின்னோக்கிச் சென்றிருக்கும். தான் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததற்கான அடிப்படை என்னவென்று சிந்தித்திருப்பான்.

அப்பொழுது அவனுடைய எரிச்சலெல்லாம் யார்மீது திரும்பியிருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? ஒருவேளை சிறைவாசத்துக்கான காரணம் போர்த்திபாரின் மனைவியாக இருந்தாலும், இதற்கெல்லாம் வித்திட்டவர்கள் தன் சகோதரர்கள் தானே என்று அவர்கள் பக்கமே அவன் பார்வை போயிருக்கும். நாமாக, இருந்திருந்தால், அச்சமயத்தில் என்ன எண்ணியிருப்போம்? எப்படி நினைத்திருப்போம்? என்றாவது ஒரு நாள் வரும், அப்பொழுது அவர்களைப் பழிவாங்காமல் விடமாட்டேன் என்று ஒரு சபதத்தை மேற்கொண்டிருப்போம். இன்னும், சொல்லப்போனால் அந்தநாள் எப்பொழுது வருமென்று ஆவலோடு காத்திருந் திருப்போம். அப்படித்தானே?

ஆனால், இந்த யோசேப்பு என்ன செய்தான் தெரியுமா? கானானில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக, தானியம் கொள்ள, யாக்கோபின் புத்திரர் எகிப்துக்கு வந்தபோது, அங்கே அதிபதிக்கு அடுத்த ஸ்தானத்திலிருந்த சொப்பனக்காரனாகிய யோசேப்பை வணங்கி, தங்கள் குடும்பம் பற்றிய சில தகவல்களைச் சொன்னார்கள். அப்பொழுது, **ஒருவன் காணமற்போனான்** (ஆதி. 42 : 13) என்று யோசேப்பிடமே சொல்கிறார்கள். நானும், நீங்களும் ஒருவேளை அந்த இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம். ஏன்டா என்னிடமே கதை சொல்கிறீர்களா என்று முன் நடந்தவைகளை விபரமாக விளக்கி, நெஞ்சு நோகத் திட்டித்தீர்த்து, ஓடிப்போய் விடுங்கள் என்று விரட்டியிருப்போம். ஆனால், இவன் அப்படியெல்லாம் எதுவும் செய்யவில்லை.

அருமையான தேவனுடைய பிள்ளையே, மேற்சொன்ன பகுதி யோசேப்பின் மன்னிக் கும் பண்பை பளிச்செனக் காட்டுகிறதா இல்லையா? யோசேப்பின் செயல்பாட்டை முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் சம்பவத்தோடு, ஓரளவு ஒப்பிடலாம் தானே. ஆம், மூர்க்க வெறி கொண்டு, தன்னைக் கொல்வதற்குக் கல்லெறிந்தவர்களைப் பார்த்து, **ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்** என்று சொன்னானே (அப். 7 : 60). கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்றிருந்த மோசேயின் காலத்துக்கு முந்தின காலத்திலேயே, எப்படியொரு மன்னிக்கும் குணாதிசயம் இந்த யோசேப்புக்கு இருந்திருக்கிறதென்று எண்ணிப்பாருங்கள்.

## III. மூன்றாம் பாடம் - தேவன் சொன்னது நடக்கும்

யோசேப்பின் எலும்பின் மூலமாக, நாம் கற்றுக்கொள்ள முடிகிற மூன்றாவது பாடம். தேவன் சொன்னது எதுவோ அது நடக்கும் என்பது.

தேவன் நிச்சயமாக, வாக்குத்தத்தம்பண்ணின தேசத்துக்கு அழைத்துச் செல்வார் என்று யோசேப்பு முதலாவது நம்பினான். பிறகு, தன்னுடைய எலும்பைப் பற்றி இஸ்ரவேலரிடத்தில் பேசி அதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையூட்டினான். தன்னுடைய எலும்புகளைக் குறித்து, இஸ்ரவேலரிடத்தில் அவன் ஆணையிடுவித்துக் கொண்டதினாலே அவர்கள் குடியிருக்கிற எகிப்துதேசம் அவர்களுக்கு சொந்தமல்ல என்ற கருத்தை அழுத்தமாகவும், ஆழமாகவும் அவர்கள் மனதில் பதியவிட்டான். ஆகவே, அவர்கள் எப்பொழுதெல்லாம் யோசேப்பின் எலும்பைப் பார்த்தார்களோ அப்பொழுதெல்லாம் **தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறிய தீரும்** என்று நம்ப வாய்ப்பு கிடைத்தது.

வாக்குமாறாத நம்முடைய தேவன், ஒருவேளை ஆண்டுகள் முந்நூறு உருண்டோடியிருந்தாலும், சந்ததிகள் சில கடந்து போயிருந்தாலும் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைக்கவே நினைத்து, மோசேயைக் கொண்டு யோசேப்பு ஆணையிடுவித்துக் கொண்டபடியே நிறைவேற்றினார்.

எனக்கருமையான வாசக அன்பர்களே, உயிரற்ற யோசேப்பின் எலும்பைப் பார்த்தபோதெல்லாம், இந்த எகிப்து நமக்குச் சொந்தமல்ல, தேவன் ஒரு நாளிலே வாக்குத்தத்தம் செய்த கானானுக்கு கொண்டு போவார் என்று எண்ணியதைப்போல ஜீவனுள்ள வார்த்தைகளைப் பெற்றிருக்கும் நாம், இந்தப் பூமி நமக்குச் சொந்தமல்ல என்று நினைக்கிறோமா? அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு சொல்லும் போது **நம்முடைய குடியிருப்போ, பரலோகத்திலிருக்கிறது அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் ".** ( பிலி. 3 : 20 ) என்றல்லவா சொல்லுகிறார். நாம் இந்த பூமி நிரந்தரம் என்று இன்னும் நினைத்துக் கொண்டிருப்போமானால் நாம் தேவனுடைய வார்த்தைகளை அவமதிக்கிறவர்களாகவே இருப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது நம்பிக்கையற்றவர்களாகவே இருப்போம்.

ஆரம்பத்தில் அற்பமாகக் கருதப்பட்ட எலும்பின் மூலமாக நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் பயனுள்ளதாக இருந்திருக்குமென நம்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| கொர்நேலியு - ஓர் உண்மையான ... | Byron Nichols | ... 1 |
| எலும்பிடமிருந்து | E.Z.S. Rajanayagam | ... 5 |
| கிறிஸ்தவத்தின் சாராம்சம் | Jerry Bates | ... 11 |
| முறையிடுதலும், முறுமுறுப்பும் | Louis Rushmore | ... 15 |
| ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம்... | J.C. Choate | ... 18 |
| விசுவாசிகள் எப்படி... | P.C. Philemon Rajah | ... 22 |
| செத்த ஈக்கள் | B. Arjunan | ... 26 |
| மௌன பாவம் | E.Z. Selvanayagam | ... 30 |
| பாவத்தின் பக்க விளைவுகள் | Benny Martin | ... 34 |
| **தேவன்** | **God** | |
| முரணானவைகளை ... | Cecil May,Jr. | ... 38 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word Of God** | |
| பழைய ஏற்பாடு இன்றும் | E. Clande Gardner | ... 40 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் | Jimmy Clark | ... 44 |
| **சபை** | **The Church** | |
| கர்த்தருடைய சபை வாரத்தின்... | Roy. H. Laxier | ... 47 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| தவறு எப்போதும் தவறு தான் | Selected | ... 51 |
| மார்க்கத்தைப் பிரசங்கித்தல் | E. Clande Gardnet | ... 53 |

| | | |
|---|---|---|
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| ஆத்தும ஆதாயத்தில் பொறுமை | Dale Grissim | ... 57 |
| அது அன்பற்றதாகும் | Justin Hop Kins | ... 59 |
| ஜீவ அப்பம் | Mike Freland | ... 63 |
| ஆத்துமாக்களைக் குறித்து... | Leah Hopkins | ... 65 |
| **ஆராதனை** | **Worship** | |
| பாடிக் கீர்த்தனம் பண்ணி | T. Pierce Brown | ... 70 |
| கர்த்தருடைய பணத்தைக் ... | Royce Frederick | ... 72 |
| கர்த்தருடைய பந்தி | Ardron Hinton | ... 75 |
| போவதா அல்லது ... | Jerry A. Jenkins | ... 77 |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian living** | |
| வாழ்க்கை நெருக்கடி | Tom Holland | ... 79 |
| ஆவிக்கேற்றபடி நடப்பதில் ... | Jim Poland | ... 81 |
| மரிக்கும் இயல்பு | Tim D. Shoemaker | ... 83 |
| சொந்த ஜனம் | Wayne Barrier | ... 86 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| பிரச்சினைக்குரிய இல்லங்கள் | Hardeman Nichols | ... 88 |
| திருமணம்... கர்த்தருக்குள் | Dan R. Owner | ... 91 |
| தகப்பன்மார்கள் தங்கள் ... | Bill Richardson | ... 94 |
| இவ்வுலகில் நமக்கு வீடு இல்லை | Curtis Camp | .. 96 |
| **கிறிஸ்தவ வாழ்க்கை** | **Christian Living** | |
| நான் ஆராதிக்க தவறியபோது | J.A. MCNUTT | ... 99 |
| யார் அவர் | Royer Rush | ... 100 |
| நீங்கள் இந்த மலைநாட்டைச் ... | Jeff Archey | ... 102 |
| உன் கால்நடையை சீர்தூக்கிப்பார் | John Smith | ... 104 |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Biblical History** | |
| சப்பீராள், ஓர் உதிர்ந்த மலர் | Bonnie Rushmore | ... 105 |

# கிறிஸ்தவத்தின் சாராம்சம்

# The Essence of Christianity

Jerry Bates

கிறிஸ்தவத்தின் உண்மையான சாராம்சம் தான் என்ன? அதை ஒரே வாக்கியத்தில் எப்படி சுருக்கமாகச் சொல்வீர்கள்? நான் ஒரு புத்தகத்தை வாசித்தேன். அதில் அந்த ஆசிரியர் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தைப் பற்றி புதுமையான புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதியிருந்தார். மேலும், அவர் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடும்போது ஆராதனையில் அமர்ந்திருக்கும் ஒரு சராசரி கிறிஸ்தவனிடம் கிறிஸ்தவத்தின் செய்தியை சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று கேட்டால், நீங்கள் அநேகமாக இவ்விதமான பதில்களை எதிர்பார்க்கலாம், " தேவன் என்னில் அன்பு கூர்ந்து, எனக்காகத் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரிக்கும்படியாக இப்பூமிக்கு அனுப்பினார். இதுதான் கிறிஸ்தவத்தின் செய்தியாயிருக்கிறது என்று பதிலளிப்பர். முதலில் இதில் என்ன தவறிருக்கிறது என்று நீங்கள் நினைக்கக்கூடும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, அதில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும், இந்த பதில் முழுமையானதல்ல. கிறிஸ்தவத்தின் சாராம்சம் தேவன் என்னை நேசிக்கிறார் என்பதாக இருந்தால், கிறிஸ்தவத்தின் மையப் பொருள் என்ன? கிறிஸ்தவத்தின் மையப் பொருள் நானாக இருக்கிறேன்! ஆகவே, நான் குடும்பத்திற்கும் எனக்கும் சிறந்தவைகளைத் திட்டமிடுகிறேன். நான் எவ்விதப் பாடுகளும், தியாகமுமின்றி எனக்கு வசதியாயிருக்கிற படியால் தேவனை சேவிக்கிறேன் ". நான் எனக்குப் பொருத்தமான, என் தேவைகளையும் என் ஆசைகளையும் சந்திக்கிற ஒரு சபையை எதிர்நோக்குகிறேன். என் காதுக்கு இனிய, என் உணர்வுகளைத் தூண்டுகிற, என்னை நன்றாக உணரச் செய்கிற ஆராதனைதான் எனக்கு தேவை. எனக்கு ஜனரஞ்சகமான பிரசங்கியார் தேவை. சபையில் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சிகள் தேவை. மொத்தத்தில், கிறிஸ்தவம் என்னைப் பற்றியது தான்.

மேலும், அப்புத்தகத்தின் ஆசிரியர் கிறிஸ்தவத்தின் இந்த விளக்கம் வேதாகம அடிப்படையிலானதல்ல என்று அறிவிக்கிறார். கிறிஸ்தவத்தின் உண்மையான தன்மை,

" நான் தேவனுடைய வழிகளையும், அவருடைய மகிமையையும், அவருடைய மகத்துவத்தையும் எல்லா தேசத்தாரிடத்திலும் அறிவிக்கத்தக்கதாக அவர் என்னில் அன்பு கூருகிறார் " என்று முடிவுக்கு வருகிறார். இந்த விளக்கம் தேவனை மையப் பொருளாக்குகிறது. இக்கருத்து எவ்வளவு வேதாகமத் தன்மையை உடையதாயிருக்கிறது? தேவன் எனக்காகத் தம்முடைய குமாரனை மரிக்கும்படியாக இப்பூமிக்கு அனுப்பியது. உண்மைதான், ஆனால், தேவன் என்னை உயர்த்தும்படியாக தம்முடைய குமாரனை இப்பூமிக்கு அனுப்பவில்லை. தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கி ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் தம்முடைய மகிமைக்காக உண்டாக்கினார்.

மேற்சொல்லப்பட்ட காரியங்கள் சம்மந்தமாக சில வசனப்பகுதிகளைப் பார்ப்போம். எசேக்கியேல் 36 ல், தீர்க்கதரிசி தேவன் இஸ்ரவேலை மறுபடியும் ஆசீர்வதிக்கப் போகிறார் என்று அறிவித்தார். இருந்தபோதிலும், 22ஆம் வசனத்தில் **கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் நிமித்தம் அல்ல, நீங்கள் வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்திலே பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே இரங்குகிறேன்** என்று கூறுவதை நாம் பார்க்கிறோம். இதே விதமான வாக்கியத்தை நாம் 32 ஆம் வசனத்திலும் வாசிக்க முடியும், அங்கே தேவன் **நான் இப்படிச் செய்வது உங்கள் நிமித்தமாக அல்லவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இது உங்களுக்கு அறியப்பட்டிருக்கக்கடவது** என்று. இங்கே நம் தேவன் இஸ்ரவேலினிமித்தம் அவர்களை ஆசீர்வதிக்கவில்லை, மாறாக, உலகின் மற்ற தேசங்கள் அவரை மகிமைப்படுத்தும்படியாக அவர் இஸ்ரவேலை ஆசீர்வதித்தார்.

சங்கீதம் 106 ல், சங்கீதக்காரன் தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுவித்ததற்காக அவரை துதித்துப் பாடுகிறார். எட்டாம் வசனத்தில் சங்கீதக்காரன் சொல்வதை கவனியுங்கள் **ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்.** புகழ் பெற்ற சங்கீதம் 23ல் கூட நாம் இதேவிதமான வார்த்தைகளை வாசிக்கலாம். **அவர் தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.** வேதாகமம் தேவன் தம்முடைய மகிமைக்காகவும், கனத்திற்காகவும் தேவன் வல்லமையான கிரியைகளை செய்ததாக பல இடங்களில் அறிவிக்கிறது. சங்கீதம் 79 : 9ல் நாம் இவ்விதமான வார்த்தைகளை காணமுடியும் **எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிச் செய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவர்த்தியாக்கும்.** இங்கே சங்கீதக்காரன் தேவ னிடம் பாவமன்னிப்புகாக ஜெபிக்கிறார்.ஆனால், இருமுறையும் உமது நாமத்தினிமித்தம் என்னை

மன்னியும் அல்லது பாவங்களை நிவர்த்தியாக்கும் என்று சொல்கிறார்.

தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தங்களை நாமெல்லாரும் நினைவில் கொள்கிறோம். ஆபிரகாமின் உண்மைத்தன்மை காரணமாக தேவன் அவரோடு உடன் படிக்கை பண்ணினார். இந்த உடன்படிக்கை ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் நன்மையாயிருக்கும் என்று வழக்கமாக நாம் நினைப்போம். இது நிச்சயமாக உண்மை யாயிருக்கிறது. ஆனால், அதைவிட மேலான ஒன்று இருக்கிறது. ஆதியாகமம் 12 : 3 ல், இடம்பெற்றுள்ள ஆபிரகாமுக்கான கடைசி வாக்குத்தத்தத்தில் " பூமியிலுள்ள வம்சங்க ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் " என்பது ஆபிரகாமுக்கான வாக்குத்தத்தம் மட்டுமல்ல, ஆபிரகாம் எல்லோருக்கும் ஆசீர்வாதமாக இருப்பார் என்பதாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் நாம் இதேவிதமான கருத்துக்களைக் காணமுடியும். I பேதுரு 2 ஆம் அதிகாரத்தில் பேதுரு புதிய ஏற்பாட்டு சபையை விவரிப்பதற்காக பழைய ஏற்பாட்டுப் பதங்கள் பயன்படுத்துகிறதை நாம் காண்கிறோம். குறிப்பாக ஒன்பதாம் வசனத்தில், பேதுரு கிறிஸ்தவர்களை விவரிப்பதற்காக பழைய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்ட நான்கு பதங்களை பயன்படுத்துகிறார். தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, சொந்த ஜனம் என்று. இப்பதங்கள் ஆழமான அர்த்தங்களையும் மிகப் பெரிய ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கியதாகும். இருந்த போதிலும், இந்த மாபெரும் ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய நன்மைக்கு மாத்திரம் தரப்படவில்லை. அந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்மை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக நமக்குத் தரப்பட்டிருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், நாம் மற்ற மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், இருள் சூழ்ந்த இவ்வுலகில் தேவனைத் துதிக்கவும், மகிமைப்படுத்தவும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவனைப்பற்றிய நம் பார்வையில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுடைய அன்பின்மீது நாம் கவனம் செலுத்துவது எளிதானதாகும். அதே நேரத்தில், கிறிஸ்தவத்தின் உண்மையான செய்தியை நாம் எவ்விதத்திலும் சிதைத்துவிடக்கூடாது. கிறிஸ்தவத்தின் மையப்பொருள் நாமல்ல. அது தேவனாயிருக்க வேண்டும். கிறிஸ்து மூலமாக நாம் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த ஆசீர்வாங்கள் நமக்கு மாத்திரம் தரப்படவில்லை. நாம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதன் மூலமாக, எல்லோருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும் படியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் மேற்சொல்லப்பட்ட காரியங்களை வைத்துப்பார்க்கும் போது தேவன் சுயநலவாதி என்று நினைக்கக்கூடும். தேவனுடைய கிரியைகள் எல்லாம் அவரை மகிமைப்படுத்துவதற்காகவே உண்டாக்கப்பட்டது என்றால், அது அன்பல்ல, அது சுயநலம் தான் என்று ஒருவர் முடிவுக்கு வருகிறார். மறுமுனையில், அவர் யாரை மேன்மைப்படுத்த வேண்டுமென்று நாம் கேட்க வேண்டும். தேவன் இவ்வுலகத்தை மேன்மைப்படுத்த வேண்டுமா? அல்லது அவர் நம்மை மேன்மைப்படுத்த வேண்டுமா? இவ்வுலகில் காணப்படுகிறவைகளெல்லாம் தேவனுடைய சிருஷ்டிப்பாயிருக்கிறபடியால் அவைகள் மேன்மைக்குப் பாத்திரமானவைகளல்ல. தேவன் மாத்திரமே கனத்திற்கும், மேன்மைக்கும் பாத்திரமானவர். " அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது " ( சங்கீதம் 148 : 13). ✝

---

## வாழ்நாள் கால நினைவுகள்

**நேரம் ஒதுக்குங்கள் :** மற்றவர்கள் பரபரப்பாக வாழும்போது, உங்கள் குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குங்கள்.

**சிரிப்பு :** மற்றவர்கள் உங்கள் குழந்தைகளைப் பார்த்து முகம் சுளிக்கும் போது, நீங்கள் அவர்களோடு சேர்ந்து சிரியுங்கள்.

**கவனியுங்கள் :** மற்றவர்களுக்கு நேரமில்லாத போது, உங்கள் குழந்தைகள் சொல்வதைக் கவனியுங்கள்.

**பேசுங்கள் :** மற்றவர்கள் உங்கள் குழந்தையைப் பார்த்து சத்தமிடும்போது நீங்கள் அன்பாகப் பேசுங்கள்.

**பாராட்டுங்கள் :** மற்றவர்கள் குறை கண்டுபிடிக்கும் போது, உங்கள் குழந்தைகளைப் பாராட்டுங்கள்.

**அரவணையுங்கள் :** தொடுதலின் வலிமையை பிறர் உணராதபோது உங்கள் குழந்தைகளை அரவணையுங்கள்.

**படியுங்கள் :** மற்றவர்கள் தொலைக்காட்சி பார்க்கும்போது உங்கள் குழந்தைகளோடு சேர்ந்து படியுங்கள்.

**ஒழுங்குபடுத்துங்கள் :** மற்றவர்கள் எல்லை வகுக்கத் தவறும்போது உங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்துங்கள்.

**மன்னிப்பு :** மற்றவர்கள் சிறுபிள்ளை தானே என்று அலட்சியப்படுத்தும் போது, தவறுக்கு உங்கள் குழந்தைகளிடம் மன்னிப்பு கேளுங்கள்.

**ஜெபியுங்கள் :** மற்றவர்கள் விசுவாசத்தைத் தொலைத்தாலும், உங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

# முறையிடுதலும், முறுமுறுப்பும்
# The Rumbling of Grumbling

Louis Rushmore

நம் தமிழ் வேதகாமத்தில் அடிக்கடி முறுமுறுப்பு என்னும் வார்த்தையைக் காண்கிறோம். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் முறுமுறுப்பு என்னும் பாவத்தில் ஈடு படுவது எவ்வளவு ஆபத்தானது? பல வேளைகளில், இந்த முறுமுறுப்பு தேவனுடைய பிள்ளைகளின் மத்தியில் ஒரு பொதுவான குணமாகவும், செயலாக வெளிப்படையாகவே தெரிகிறது. நிச்சயமாகவே, நாம் ஒரு பாவத்தை செய்துவிட்டு அதற்காக மனந்திரும்ப வில்லையென்றால், அது நம் ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து பரலோகத்தில் நித்தியத்தை அனுபவிக்க முடியாமல் தடுத்துவிடும் ( ரோமர் 6 : 23 ). ஆகையால், நாம் சிறந்த கிறிஸ்தவர்களாக வேண்டுமென்றால் இந்த முறுமுறுப்பு என்னும் பாவத்தைச் சற்று ஆழமாகப் பார்க்க வேண்டும்.

" gogguzo " என்னும் கிரேக்க வார்த்தை மெல்லிய அல்லது தாழ்ந்த குரலில் பேசுவது. முறுமுறுப்பது என்றும் பொருளைக் கொடுக்கிறது. மேலும், இது ஒருவர் தன்னு டைய அதிருப்தியை வெளிப்படுத்தும் வார்த்தையாகவும் பொருள்படுகிறது. உதாரணமாக, திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்த வேலையாட்கள் இதைத்தான் செய்தார்கள். பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள். பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர் களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள் ( மத்தேயு 20 : 12 ), இதைத் தான் பரிசேயர்களும் செய்தார்கள் வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து நீங்கள் ஆயக்காரரோடும், பாவிக ளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள் ( லூக்கா 5 : 30 ). மேலும், யூதர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகக் கூட முறுமுறுத்தார்கள். நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக் குறித்து முறுமுறுத்தார்கள் (யோவான் 6 : 41). சீஷர்கள் அதைக் குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? என்று வினவினார்(யோவான் 6 : 61).

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதும்போது வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேலர்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தபடியால் அழிக்கப்பட்டார்கள். எனவே, நீங்களும் முறுமுறுக்க வேண்டாம் என்று அவர்களை எச்சரித்தார். **அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள் : அதுபோல் நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்** ( கொரித்தியர் 10 : 10 ). முறுமுறுப்பது தேவனுக்கு விரோதமான பாவமாயிருக்கிறது! உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் முறுமுறுப்பவர்களல்ல.

" diagogguzo " என்னும் கிரேக்க வார்த்தை, வெளிப்படையாக வெறுப்புடனும், கோபத்துடனும் முறுமுறுப்பதைக் குறிக்கிறது. கீழ்க்காணும் வசனங்களிலுள்ள வெறுப்பின் முறுமுறுப்பை ஒருவர் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். **அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்** ( லூக்கா 15 : 2 ). அதைக் கண்ட யாவரும் இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள் ( லூக்கா 19 : 7 ).

அடுத்ததாக, " gongsmos " என்னும் கிரேக்க வார்த்தை, வெளிப்படையாக இல்லாமல் ஜனங்கள் மத்தியில் இரகசியமாக காணப்படும் முறுமுறுப்பைக் குறிக்கிறது. இந்த வார்த்தை கீழ்க்காணும் வசனங்களில் இடம்பெற்றிருக்கிறது. ஜனங்களுக்குள்ளே அவரைக்குறித்து முறுமுறுப்புண்டாயிற்று : சிலர் அவர் நல்லவர் என்றார்கள். வேறு சிலர் அப்படியல்ல அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டார்கள் (யோவான் 7 : 12 ). **அந்நாட்களிலே, சீஷர்கள் தொகை பெருகினபோது கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்** ( அப்போஸ்தலர் 6 : 1 ) எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். இந்த முறுமுறுப்பு வெளிப்படையாக இல்லாமல் இரகசிய அதிருப்தியாக இருக்கிறபடியால், இது கோழைத்தனமாகும். அப்போஸ்தலனாகிய பேதுரு தேவ ஆவியினால் ஏவப்பட்டு இந்த எச்சரிப்பை விடுக்கிறார். **முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்** என்று. (I பேதுரு 4 : 9).

அடுத்ததாக, " gongustes " என்னும் கிரேக்க வார்த்தை. இது சதா தேவனுக்கு விரோதமாக குறைசொல்பவரை, முறுமுறுப்பவரைக் குறிக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், குறை சொல்வதை, முறுமுறுப்பதை தன் வாழ்க்கையில் வழக்கமாகக் கொண்டிருக்கும் ஒருவரை இந்த வார்த்தை குறிக்கிறது. இந்த வார்த்தை யூதா பதினாறாம் வசனத்தில் இடம் பெற்றுள்ளது. “ இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள்

இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுடைய வாய் இறுமாப்பான வைகளைப் பேசும், தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்யும் ".

முறையிடுவது அல்லது முறுமுறுப்பது மிகப்பெரிய பாவமாகும். **சகோதரரே நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு, ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள் ; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.** (யாக். 5 : 9, 10 ) தேவன் அப்போஸ்தலனாகிய பேதுரு மூலமாக, " முறுமுறுப்பில்லாமல் ஒருவரை யொருவர் உபசரியுங்கள் " என்று கட்டளையிடுகிறார் ( I பேதுரு 4 : 9 ). இங்கே, நம் ஆண்டவருக்கு செவிகொடுங்கள்; இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, **உங்களுக் குள்ளே முறுமுறுக்க வேண்டாம்** என்று சொன்னார் (யோவான் 6 : 43).

ஒருவர் என்ன காரணத்திற்காக முறையிடுகிறார் அல்லது முறுமுறுக்கிறார் என்பது ஒரு பொருட்டே அல்ல என்பதை கவனித்தீர்களா? ஒருவர் எந்தக் காரணத்திற்காக முறுமுறுக்கிறவராக இருந்தாலும் அவர் கண்டிக்கப்படுகிறார். உபதேசப் பிழை இருந்தால் கூட அதற்கு விரோதமாக இரகசியமாக முறுமுறுப்பது கோழைத்தனமாகும். உதாரணமாக, ஆரோக்கியமான உபதேசம் சமரசம் செய்யப்படாமல் அதை எதிர்த்து உத்தரவு சொல்ல வேண்டும். (தீத்து 1 : 9 ; ரோமர் 16 : 17 ) கிறிஸ்தவர்கள் முறுமுறுக்கிறவர்களாக முறையிடு கிறவர்களாக இருக்கக்கூடாது என்று தேவனால் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாம் கற்றுக்கொண்டவைகளை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்? ஒருவரைப் பற்றி வெளிப்படையாகப் பேசாமல் தனியாகக் கிசுகிசுப்பது கிறிஸ்துவின் சிந்தை அற்றவர்களாயிருப்பதையே குறிக்கிறது. தேசம், இனம், ஜாதி, மொழி, பொருளாதார நிலை, கல்வித்தரம் போன்றவைகளை அடிப்படையாக வைத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் பேதங்கள் ஒருபோதும் ஏற்படக்கூடாது. இவைகள் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் விவாதிக்கும் பொருளாகவும் இருக்கக்கூடாது. ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் " ( I பேதுரு 1 : 22 ) இந்த வசனங்களை நம் வாழக்கையில் நாம் நடைமுறைப்படுத்தினால் சக கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக நாம் ஒருபோதும் முறையிடவோ, முறுமுறுக்கவோ மாட்டோம்.

நன்மையானதை நேசிக்கத் தெரியாதவர்களுக்கு
தீமையானதை வெறுக்கவும் தெரியாது.

# ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

## *Why There Is Only One Baptism Today?*

J.C. Choate

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ இல்லையோ எனக்குத் தெரியாது, ஆனால், கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் மத்தியில் பல ஞானஸ்நானங்கள் உண்டு என்று போதிக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். முழுக்கு ஞானஸ்நானம், தெளிப்பு ஞானஸ்நானம், தலையின்மேல் தண்ணீரை ஊற்றுகிற ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் என்று பல ஞானஸ்நானங்கள் இதில் உள்ளடக்கம். ஆனால், வேதாகமம் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு என்று போதிக்கிறது. எபேசியர் 4:4-6 ஒரே தேவன், ஒரே கர்த்தர் அல்லது கிறிஸ்து, ஒரே ஆவி அல்லது பரிசுத்த ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம், ஒரே நம்பிக்கை நமக்கு உண்டு என்று வெளிப்படுத்துகிறது. இவைகள் ஒரே தேவன், ஒரே கிறிஸ்து என்று பொருள் தருமானால், ஞானஸ்நானம் என்பதும் ஒன்றே ஒன்று தான்.

அப்படியானால், ஒரே ஞானஸ்நானம் என்பது எந்த ஞானஸ்நானம்? மனிதர்கள் இன்று பேசுகிற ஞானஸ்நானம் அல்லாமல் வேத வாக்கியங்களில் நாம் பல்வேறுபட்ட ஞானஸ்நானங்களை வாசிக்கிறோம். மாற்கு 11:29-ல் தன்னை சோதிக்க முயற்சி செய்த மக்களைப் பார்த்து இயேசு இப்படிக் கேட்டார், **யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ எனக்கு உத்தரவு சொல்லுங்கள்** என்றார் (மாற்கு 11 : 30 ). கிறிஸ்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் ( மத்தேயு 3:13-17 ). எல்லா நீதியையும் நிறைவேற்றக் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், பொதுவாக ஜனங்கள் வரவிருந்த கர்த்தருடைய ராஜ்யமாகிய சபைக்கு ஆயத்தமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே, அது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் என்றழைக்கப்பட்டது ( லூக்கா 3:3 ). யோவானின் ஞானஸ்நானம் காலவரம்பில்லாமல் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்ற நோக்கில் திட்டமிடப்பட்டதல்ல. அதற்கான நோக்கம் நிறைவேறியவுடன் அது முடிந்து போய்விட்டது.

மத்தேயு 3:11,12 வசனங்களில், யோவான் ஸ்நானகன், இயேசு கொடுக்கப்போகிற இரண்டு ஞானஸ்நானங்கள் பற்றிப் பேசுகிறார்; " மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின்வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாக விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் " என்றான். யோவான் சொல்லும்போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார். பின்பு, கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களிடத்தில், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் ( யோவான் 15 : 26; 16 : 7, 13; அப்போஸ்தலர் 11 : 8; லூக்கா 24 : 49 ). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி, கிறிஸ்து போதித்தவைகளையெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டினார். அத்தோடு அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசவும், அற்புத அடையாளங்கள் செய்யவும் வல்லமை கொடுத்தார். கிறிஸ்து அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்பது, துன்மார்க்கர் அக்கினியிலே மூழ்கடிக்கப்படுவார்கள் என்று பொருள். கிறிஸ்து ஒருநாளில் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார். அப்பொழுது துன்மார்க்கர் நரகத்தில் தள்ளப்படுவார்கள் ( II பேதுரு 2 : 4 ) அவர்கள் நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள் ( மத்தேயு 25 : 46 ) என்று வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நரகம் அக்கினிக்கடலாக விவரிக்கப்பட்டிருக்கிறது ( II பேதுரு 3 : 7; யூதா 7; வெளி 20 ; 10, 14 ; 21 : 8). அதன் பொருள், துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், இழந்துபோனவர்கள் அக்கினிக்கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள் அல்லது ஞானஸ்நானப் படுத்தப்படுவார்கள். நிச்சயமாகவே, யாரும் ஒரு சரியான மனநிலையோடு அக்கினி ஞானஸ்நானத்தைப் பெற விரும்பமாட்டார்கள்.

I கொரிந்தியர் 10:1–4 வசனங்களில் பவுல் இப்படி எழுதுகிறார் " இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்; எல்லாரும் சமுத்திரத்தின் வழியாக நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்; எப்படியெனில், அவர்களோடேகூடச்

சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே". அந்நாட்களில் இது ஞானஸ்நானமாகக் கருதப்படவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், பவுல் இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் வழியாக இருபுறமும் தண்ணீரால் சூழப்பட்ட நிலையில் மேகத்துக்குக் கீழாயிருந்ததை எண்ணிப் பார்த்து பவுல் இதை ஞானஸ்நானம் என்று விவரிக்கிறார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் மேகத்துக்குள்ளாகவும், கடலுக்குள்ளாகவும் மூழ்கடிக்கப்பட்டிருந்தார்கள் அல்லது அடக்கம் பண்ணப் பட்டிருந்தார்கள்.

எபேசியர் 4:4–6 வசனங்களுக்கு நாம் திரும்பும் போது, அங்கே பவுல் ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளை அவர் சொன்னது, தோராயமாக கி.பி. 64 ஆம் வருடம். ஆனால், வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற ஞானஸ்நானங்களில் எந்த ஞானஸ்நானம் ஒரே ஞானஸ்நானம்? அதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு நல்ல வழி உண்டு. அதாவது, எப்பொழுதெல்லாம் ஒரு ஞானஸ்நானம் விசுவாசியின் ஞானஸ்நானமாக அல்லது தண்ணீர் ஞானஸ்நானமாக இல்லையோ அப்பொழுதெல்லாம் அது வேறு என்ன ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருக்கும்? இதையே வேறு விதமாகச் சொன்னால், வேத வாக்கியங்கள் அப்படிப்பட்டவைகளைப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அக்கினி ஞானஸ்நானம், யோவானின் ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம், மேகத்தின் ஞானஸ்நானம், சமுத்திரத்தின் ஞானஸ்நானம் எனப் பேசுகிறது. எனவே, எபேசியர் 4:4–6 வசனங்களில், ஒரே ஞானஸ்நானம் என நாம் வாசிக்கும் போது, இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைத் தான் குறிக்கிறது என்று நாம் முடிவுக்கு வந்து விடலாம்.

நம்முடைய நாட்களில் வாழும் மக்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நமக்கும் இருக்கிறது என்று பேசக் கேட்கிறோம். ஆனால், இந்த ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அதை அவர்களுக்கு கொடுத்ததும் கிறிஸ்துவே. எனவே, இந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப் பட்டது; இன்று யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதில்லை.

தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றிப் போதிக்கிற வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு, தான் இரட்சிக்கப்பட்டதைக் காட்டுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது சரியானால், ஒருவர் கிறிஸ்துவுக்கு வெளியே, அவருடைய சபைக்கு வெளியே இரட்சிக்கப்படுகிறார் என்று பொருள்படும். ஆனால், வேத வசனம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க, அவருடைய சபைக்குள் பிரவேசிக்க ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றே

சொல்கிறது ( கலாத்தியர் 3 : 26,27, I கொரிந்தியர் 12 : 13). இந்தக் காரியத்தில் இந்த மக்கள் தவறு செய்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வரை ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது. அந்த இரட்சிப்பின் ஒரு பகுதி தான் முழுக்கு ஞானஸ்நானம்.

தெளிப்பு மற்றும் ஊற்றுதல் ஞானஸ்நானங்கள் தேவனுடைய வார்த்தையின் போதனையிலிருந்து ஒருவன் எவ்வளவு தூரம் விலகிச் செல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக உள்ளது. தலையில் தண்ணீரை ஊற்றுவது, தெளிப்பது போன்ற வைகளை ஒரு போதும் ஞானஸ்நானம் என்று சொல்ல முடியாது. ஞானஸ்நானம் என்பது ஓர் அடக்கம், ஒரு மூழ்குதல். தெளித்தல் என்பது வெறுமனே தெளித்தல் தான். அது போல, ஊற்றுதல் என்பதும் வெறுமனே ஊற்றுதல் தான். அவைகள் ஞானஸ்நானம் ஆகாது. இப்படிப்பட்ட பழக்கங்கள் மனிதனுடைய கண்டுபிடிப்புகள்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் அல்லது ஞானஸ்நானம் பெற்றிருப்பதாக நினைத்தால், ஒருவேளை அது தெளிப்பு அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானமாக இருந்து, அது சரியான நோக்கத்திற்காக பெறப்படாமலிருந்தால், வேத வசனங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஆனால், இது இரண்டாவது ஞானஸ்நானமாகி விடும் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியில்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் தான், நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி ஞானஸ்நானம் பெறாதிருந்தால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறவில்லை. வேத வாக்கியங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெற்றால் தான், வேதாகமத்தின்படியான ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்று விட்டதாக உங்களால் சொல்ல முடியும். ✞

---

## வாழ்க்கை புத்தகம்

மூன்று தொகுப்புகளைக் கொண்டது.

**முடிந்தது, நடப்பது, வரப்போவது**

✓ முடிந்தது – எழுதிவைக்கப்பட்டாயிற்று

✓ நடப்பது – ஒவ்வொரு நாளும் நாம் எழுதிக் கொண்டிருப்பது.

✓ சிறந்ததும், கடைசியுமான தொகுப்பு காண முடியாதபடி பூட்டப் பட்டிருக்கிறது; அதன் சாவியை தேவன் வைத்துள்ளார்.

# விசுவாசிகள் எப்படி இருக்க வேண்டும்?

# How The Belivers Should Be?

Philemon Rajah

**I பேது**ரு 3 : 8 ல் " மேலும், நீங்களெல்லாரும் **ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து** " என்று வேதம் கூறுகிறது.

**1. ஒருமனப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.**

ஒரு மனம் என்பது ஒன்றிற்கு மேற்பட்டவர்களிடையே, ஒன்றோ அல்லது பல செயல்களோ செய்யும்படி மனம் ஒருமித்தலாகும். ஒருவர், தனியாகவும் (தனி நபராகவும்) தேவனுடைய பிள்ளையாகவும் வாழ வேண்டும்.

நாம் நன்மை செய்யும்படியாகவோ, அல்லது தீமை செய்யும்படியாகவோ ஒருமனப்படக்கூடும். எஸ்றா மற்றும் இஸ்ரவேலர்கள் தேவனுடைய ஆலயத்தின் வேலை செய்ய ஒருமனப்பட்டார்கள். எஸ்றா 3 : 9 ல் " **அப்படியே தேவனுடைய ஆலயத்தின் வேலையைச் செய்கிறவர்களை நடத்தும்படி யெசுவாவும், அவன் குமாரரும், சகோதரரும், கத்மியேலின் குமாரரும், யூதாவின் குமாரரும், எனாதாத்தின் குமாரரும், அவர்கள் சகோதரராகிய லேவியரும் ஒருமனப்பட்டு நின்றார்கள்** " என்று வாசிக்கின்றோம். அப்போஸ்தலர்கள் ஜெபிக்கும்படி ஒருமனப்பட்டார்கள் (அப் 1 : 14 ) : மற்றும் அவர்கள் சபையாருடன் தேவனைத் தொழுது கொள்ளும்படி ஒருமனப்பட்டார்கள் ( அப் 2 : 46 ). ஆனால், நாதாப் மற்றும் அபியூ அந்நிய அக்கினிக்காக (தேவன் அனுமதியாத ஆராதனை செய்ய) ஒருமனப்பட்டார்கள். (அப் 5 : 1 – 2 ) என நாம் ஒருமனப்பட்ட உதாரணங்களை வேதாகமத்தில் பார்க்க முடியும். ஆனால் தேவ பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும், தேவசித்தம் செய்ய ஒருமனப்பட வேண்டும்.

**2. இரக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.**

இரக்கம் என்பது நம்மையும் இயந்திரத்தையும் வேறுபடுத்திக் காட்டும் மிக முக்கியத் தன்மைகளுள் ஒன்றாகும்.

நம்மை படைத்த தேவன் இரக்கமுள்ளவராக இருக்கிறார். உபா 4 : 31 " **உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால் அவர் உன்னை கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்க ளுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவு மாட்டார்** " என்கிறது. மேலும் அவர் இரக்கங்களின் பிதா என்றும் அழைக்கப்படுகிறார் (2 கொரி 1 : 3).

அவருடைய பிள்ளைகளாகிய நாம் இரக்கமுள்ளவர்களாயிருக்கும்படி விரும்புகிறார் (மத் 9 : 13). அப்படியிருக்கும் போது நம்மை அவர் பாக்கியவான்களாக்குகிறார். மத் 5 : 7 **இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்** என்று வாசிக்கிறோம்.

**3. சகோதர சிநேகமுள்ளவர்களாயிருக்க வேண்டும்**

சகோதர சிநேகம் என்பது மிகப்பெரிய வலிமை வாய்ந்த ஒன்று (சங் 131 : 1 – 3). அதனால் தான் பிசாசு, அதனை உடைப்பதில் மிகவும் கவனமுள்ளவனாக இருப்பான். ஆதி சகோதரர்களாகிய காயீன் ஆபேலிடம் அதைத் துவக்கி, இன்று வரை தொடர்கிறான்.

வேத வசனம், நாம் தேவனுடைய பிள்ளைகளாக ஒன்றாக இருக்கும்படி வலியுறுத்துகிறது. எபி 13 : 1 **சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது** மற்றும் ரோமர் 12 : 10 **சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்** என்று வாசிக்கிறோம். ஆனால், பிசாசு நம்மிடையே ஐக்கியமும், அந்நியோந் நியமும் இல்லாதபடி சகோதர சிநேகத்தை உடைத்துப் போட விரும்பி, அதை மிகவும் கவனமாக செய்து கொண்டிருக்கிறான். ஆகையால் தான் வசனம் நம்மை தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்கிறது (I பேதுரு 5 : 8 , 9).

**4. மனதுருக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.**

மனதுருக்கம் என்பது முற்றிலும் சுயத்திற்கு எதிரான ஒன்று. இது தனக்கான வைகளையல்ல பிறனுக்கானவைகளை நாடச்செய்யும். (லூக் 7 : 13 : 10 : 33)

மனதுருக்கம் தான், அழிந்து போகிற ஆத்துமாக்கள் மீது அக்கறை கொண்டு அவர்களை நரகத்தின் அகோரத்திலிருந்து காப்பாற்றி, அவர்களை பரலோகத்தின் மேன்மைக்கு நேராக திருப்ப சுவிஷேம் அறிவிக்கும்படி ஒருவரை தூண்டும். மத் 9 : 36 – 38 **அவர் திரளான ஜனங்களைக் கண்ட போது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய்**

இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்".

**5. இணக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

நாம் தனித்து நில்லாமல், நல்ல காரியங்களுக்கு சேர்ந்து நிற்பது இணக்கமாயிருப்பதாகும். இந்த இணக்கம் என்பது சரீர அவயவங்களுக்குள் இருக்கின்ற இணைப்பை போன்று இருக்க வேண்டும் என பவுல் கொரிந்து சபையாருக்கு அறைகூவல் விடுத்தார் ( 1 கொரி 12 : 12 – 31 ) . மேலும், இணக்கமுள்ளவராக இருக்கும்படி பவுல், பிலோமோனுக்கு கட்டளையிட்டார் (பிலேமோன் 21) .

பெருமை ( மேட்டிமை ) என்பது நாம் இணக்கமற்றவர்களாகவும், தாழ்மை என்பது நாம் இணக்கமானவர்களாகவும் இருக்க உதவி செய்கிறது. ரோமர் 12 : 16 " ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்: மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதிருங்கள்".

பரத்திலிருந்து வருகிற ஞானம், அதாவது தேவன் தருகின்ற ஞானம், இணக்கமுள்ளதாக இருக்கிறது. நாம் இணக்கமுள்ளவர்களாக இருக்க தேவன் ஞானத்தைத் தருகிறார். ஆகையால் தேவன் தந்த ஞானத்தை பெற்ற அனைவரும், இணக்கமுள்ளவர்களாக இருந்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். யாக் 3 : 17 ல் **பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதா**யுமிருக்கிறது என்று வாசிக்கின்றோம்.

**6. ஆசீர்வதிக்கிறவர்களாயிருக்க வேண்டும்.**

1. பேதுரு 3 : 9 " **தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிகட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள்.** நாம் ஆசீர்வதிக்க முடியாதவர்களை, அதாவது நமக்குத் தீமை செய்தவர்களை மற்றும் நம்மை உதாசீனப்படுத்தியவர்களை, நாம் மனதார ஆசீர்வதிக்க வேண்டும். அவ்வாறு ஆசீர்வதிப்பதினால் தேவ ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும். நாம் விதைப்பது ஆசீர்வாதம் என்றால் அறுப்பதும் அதுவாகத்தானே இருக்கும். நாம்

ஆசீர்வாதத்தை அறுக்கிறவர்களாக இருக்கும்படி, ஆசிர்வாதத்தை விதைக்கிறவர்களாக இருப்போம் (மத் 5 : 44 : சங் 118 : 26).

தேவனுடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கிறவர்களாக மாத்திரமே இருக்க வேண்டும். ரோமர் 12 : 14 " உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் ; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்".

**7. சமாதானத்தை தேடி, தொடருகிறவர்களாயிருக்க வேண்டும்.**

I பேதுரு 3 : 10 – 11 " ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன், பொல்லாப்புக்கு தன் நாவையும், கபடத்திற்கு தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தை தேடி அதை பின்தொடரக்கடவன்". சமாதானத்தை தேடி அதை தொடர்ந்து செல்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒருவரிடம் சமாதானமில்லாமல் இருக்க, என்னுடைய சுயம் காரணமாக இருக்கக்கூடாது. அதே வேளையில் நாம் கிறிஸ்துவின் உபதேசத்திற்குட்பட்டு யாவரிடமும் சமாதானமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ரோமர் 12 : 18 " கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்".



ஆண்டவர் இயேசு, சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்றும், அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள் என்றும் கூறினார் (மத் 5 : 9). ஆகையால் நாம் கிரியைகளினாலே நம்மை தேவனுடைய பிள்ளைகள் என்று நிருபிக்கிறவர்களாக இருப்போம். ரோமர் 14 : 19 " ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்".

**இறுதியாக...**

அன்பானவர்களே! கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பது என்பது வெறுமனே அவரை நம்புவதாக மாத்திரம் இல்லாமல், அவரை விசுவாசிக்கிறவர்களுக்கேற்ற செயல்களை உடையவர்களாகவும் இருப்பதாகும். விசுவாசமில்லாத கிரியை (ரோமர் 14 : 23 ), மற்றும் கிரியையில்லாத விசுவாசம் ( யாக் 2 : 26 ) ஆகிய இவ்விரண்டும் பாவமாகவும், வீணாகவும் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, விசுவாசிகளுக்கேற்ற கிரியை நடப்பிப்போம்.

✝

# செத்த ஈக்கள்

# DEAD FLIES

B. Arjunan

**செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்** ( பிர. 10 : 1 ). ஒரு தைல வியாபாரியினுடைய தைலத்தை செத்த ஈக்கள் கெடுக்குமானால் அவனுடைய தைல வியாபாரம் பாதிக்கப்படும். எப்படியென்றால், அவனுடைய தைலத்தில் செத்த ஈக்கள் இருக்கும்போது அந்த தைலத்தை முழுவதுமாக நாறிக் கெட்டுப்போகப்பண்ணுமல்லவா? அதுபோல சபையிலும் ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்கள் இருக்கும்போது சபை முழுவதும் பாழடிக்கப்படும். ஆகையால், கர்த்தர் சர்தை சபையின் தூதனுக்கு எழுதும் போது; **தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்** " என்கிறார் ( வெளி. 3 : 1).

இன்றைக்கும் சபையில் பல வருடங்களாக இருக்கிறவர்கள் உயிருள்ளவனென்று சொல்லி ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவியில் பெலப்படவேண்டும். இல்லையேல் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் ஆவிக்குரிய விஷயத்தில் சோர்ந்து போவார்கள். மேலும், அடுத்த வசனத்தில்; **நீ விழித்துக் கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து: உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை** என்கிறார். ( வெளி. 3 : 2 ). சபையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் சில பொறுப்புகளை தேவன் கொடுக்கிறார். சிலர் மேய்ப்பராகவும், போதகராகவும், உதவிக்காரர்களாகவும் செயல்படுகிறார்கள். இவர்கள் மந்தையின் மீது கவனத்தை செலுத்தி அவர்களுடைய நிலைமையை அறியவேண்டும். சாகிறதற்கேதுவாக இருக்கிறவைகளை அடையாளம் கண்டுகொண்டு அவர்களை ஆவிக்குரிய விஷயத்தில் திடப்படுத்தவேண்டியவர்களாயிருக்

கிறோம். அவர்கள் போனால் போகட்டும் என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில், ஒருவரும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல என காண்கிறோம். ஒவ்வொருவரும், " உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள் " என பவுல் ரோமசபையாருக்கு எழுதுகிறதை படிக்கிறோம். (ரோம.6 : 11) ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு செத்து நீதிக்குப் பிழைத்தவர்களாக இருக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம். என்பதை நாம் ஒவ்வொரு நாளும் எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் நான் எதற்காக வாழ்கிறேன் என்று நொந்து கொள்வார்கள். உங்களை மீட்கும்படியாக இயேசுதாமே சிலுவையில் இரத்தம் சிந்தினார். உங்களை தேவனுடைய சமூகத்திற்குக் கொண்டு சேர்க்கும்வரை அவர் உங்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். இப்படிப்பட்ட நம்பிக்கை யோடிருப்பீர்களானால் நீங்கள் சபையில் என்றும் உயிருள்ளவர்களாக இருப்பீர்கள். செத்தவர்களாகயிருக்க மாட்டீர்கள்.

லூக்கா 12 : 1 –ம் வசனத்தில் பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கை யாயிருங்கள் என்று கர்த்தர் முதலாவது தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். ஏன் அப்படிச் சொன்னார். இன்றைக்கு புளிப்புள்ள இவர்கள் மற்றவர்களையும் உப்பப் பண்ணுவார்கள். முழுவதையும் உப்பப்பண்ணி கெட்டுப்போகப்பண்ணுவார்கள். **நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள். நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக் கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள் என்றார்** ( லூக். 11 : 52 ). ஆகையால், பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து அதாவது அவர்களுடைய உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கச் சொன்னார். சபைகளில் பொதுவாக ஒருவரையொருவர் பார்த்து கற்றுக் கொள்ளுகிறீர்கள். ஒருவர் ஒரு தவறை செய்துவிட்டால் மற்றவரும் அதே தவறை செய்வார். ஏன் அப்படி செய்தீர்கள் என்று கேட்டால், அவர் செய்தார். ஆகையால் நானும் செய்தேன் என்பார். அது வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்பதை பார்க்க மாட்டார்கள். இந்த பரிசேயர் போன்றோர் சொல்லுவார்கள். ஆனால் செயல்படமாட்டார்கள். இப்படிப்பட்ட போதகர்களுக்கு உலகத்தில் பஞ்சமில்லை. ஆண்டவர் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கவும் இவ்வுலகிற்கு வந்தார். ஆகையால் அப்படிப்பட்ட சிந்தையோடு உயிருள்ளவர்களாயிருந்து செயல்படுவோம்.

பிரசங்கி சொன்ன அதே வசனத்தில்; " செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணுவதுபோல; ஞானத்திலும் கனத்திலும்

பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும் என்று சொல்லுவதை வாசிக்கிறோம். ஆம், எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அவர்களுடைய சொற்ப மதியீனம் அவர்களுடைய ஞானத்தை அசட்டை செய்துவிடும். செத்த ஈக்களைப்போல அவர்களுடைய ஞானத்தை நாறிக்கெட்டுப்போகப்பண்ணும். சாலொமோன் ஞானி ஒரு சிறப்பான ஞானி, சிறப்பான ராஜா என்றெல்லாம் நாம் அறிகிறோம். ஆனால், அவனுடைய பின் நிலைமையைப் பார்க்கும்போது, அவனுடைய இருதயத்தை அவன் நேசித்த பெண்கள் வழுவிப்போகப்பண்ணினார்கள் (1 இரா.11 : 3). இந்த சாலொமோன் சிறப்பான ஞானவானாக இருந்தும் அவனுடைய சொற்ப மதியீனமான காரியத்தினால் அவனுடைய ஸ்தீரிகள் அவனுடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாகச் செய்ய தூண்டினார்கள். ஆகையால் **முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல** என்கிறார் (நீதீ. 8 : 11). ஒருவேளை ஞானம் அசட்டை பண்ணப்படலாம். அப்படி அசட்டை பண்ணப்படுவதால் ஞானம் வீழ்ந்துவிட்டது என்பதல்ல. " ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும், அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை. ஆகையால், ஏழையின் ஞானம் அசட்டை பண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன் " என்கிறார் பிரசங்கி (பிர.9 : 15, 16). உங்களுடைய ஞானம் ஒருவேளை அசட்டை பண்ணப்பட்டிருக்கலாம் அதினாலே நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள். ஞானமே பிரதானம் என காண்கிறோம்.

செத்த ஈக்கள் மத்தியில் உயிருள்ள ஈக்கள் இருப்பதைப்போல கர்த்தருடைய சபையில் செத்தவர்கள் மத்தியில் உயிருள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடையவர்கள் ஜீவனுடையவர்கள் என்றே சொல்ல வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எத்தனையோ பாடுகள் பிரச்சனைகள் வந்தது. அத்தனை பாடுகளிலும் பிரச்சனைகளிலும் அவன் சோர்ந்துபோகாமல் கர்த்தருடைய நாமத்தை பறைசாற்றிக்கொண்டு வந்தான். ஒரு முறை " அந்தியோகியாவிலும் இக்கோனியா விலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுபோனான் " என காண்கிறோம் (அப் 14 : 19, 20). பவுலுக்கு வந்த பிரச்சனை நமக்கு வந்தால் எத்தனைபேர் கிறிஸ்தவத்தில் நிலைத்திருப்போம்? சில சிறு பாடுகள் வந்தவுடன் சோர்ந்து போய் பின்வாங்கிப்போகிறார்கள். பவுல் மரித்துப்போனான்

என்று எண்ணினார்கள். அந்த அளவு அவன் மீது கல் வீசப்பட்டிருக்கிறது. ஆனால் அவனை கர்த்தர் பெலப்படுத்தினார். சுவிசேஷத்தின் மீதுள்ள தாகத்தினாலும், அவனுடைய வாஞ்சையினாலும் அவர்கள் அடித்த கல் அவனுக்கு ஒன்றும் பெரியதாக தெரியவில்லை. ஆண்டவருடைய அன்பு அவனை நெருக்கி ஏவினதினால், பர்னபாவுடன் தெர்பைக்கு சென்று ஊழியம் செய்தான். இன்றைக்கு ஒவ்வொரு ஊழியக்காரர்களும் பவுலை மாதிரியாக கொள்வார்களேயானால் ஒரு நாளும் சோர்ந்துபோகார்கள்.

**நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்** ( நீதி. 24 : 16 ). பவுல் ஒரு நீதிமானாக இருந்தபடியால் அவன் திரும்பவும் எழுந்து ஊழியம் செய்தான். மாசத்தில் இருக்கும்வரை ஒவ்வொருவருக்கும் பெலவீனம் சோர்வுகள் வரும். ஆனாலும் கர்த்தருடையவர்கள் அதாவது இயேசுவின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் ஏழுதரம் விழுந்தாலும் அவருடைய அன்பை நினைத்து மீண்டும் மீண்டும் எழுந்து கர்த்தருக்கு சாட்சியாக நிலைப்பார்கள். நீங்கள் எந்நிலைமையில் இருக்கிறீர்கள்? இந்த உலகத்தில் நீங்கள் வாழும் வாழ்க்கைதான் உங்களுக்குச் சாட்சியாக பரலோகத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் வந்து சாட்சி சொல்லப்போகிறது. இதில் சாக்குபோக்குச் சொல்ல இடமில்லை. ஆகையால், ஒவ்வொரு நாளும் ஜீவனுள்ளவர்களாக இருக்க பிரயாசப் படுங்கள். மரித்துப்போன எலிசாவின் கல்லறையில் போட்ட பிரேதம் உயிரடைந்தது ( 2 இரா. 13 : 21). அநேகருடைய கல்லறையில் புல்லுகள் கூட முளைப்பதில்லை. ஆக, இந்த எலிசா தேவனுடைய மனுஷனாக எந்த அளவு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவனாக வாழ்ந்திருந்தால் அவனுடைய கல்லறையில் போட்ட பிரேதம் எழுந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; **இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்** என்கிறார் ( 2 தீமோ. 2 : 11 ). அவரோடே கூட உயிரோடு எழுப்பப்பட விரும்புகிற ஒருவர் முதலாவது அவரோடு கூட மரிக்க வேண்டும் அப்பொழுது தான் அவரோடேகூட பிழைக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவருக்காக ஒரு நஷ்டத்தைக்கூட அநுபவிக்காத ஒருவர், அவருக்காகக் கடுகளவு இரத்தம் சிந்தாத ஒருவர் எப்படி அவரோடு எழுந்திருக்க முடியும். அன்பானவர்களே, அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சீஷர்களும் அவருடைய நாமத்திற்காக அநேக பாடுகளை அநுபவித்தனர். இன்று நீங்கள் கர்த்தருக்காக பட்டபாடுகள் என்னவென்பதை எண்ணிப் பாருங்கள். நாம் நீங்கள் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; என்று நம்மை பவுல் உற்சாகப்படுத்துகிறார். பாடுகள் இல்லையென்றால் அது கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்றே சொல்ல வேண்டும். ✝

# மௌன பாவம்

## Sin of Tight lip

E.Z. Selvanayagam

கர்த்தராகிய இயேசு, நியாயம் விசாரிக்கப்படும்படி பிரதான ஆசாரியர் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பொழுது, அவருடைய சீஷர்களைப் பற்றியும், அவருடைய உபதேசங் களைப் பற்றியும் கேள்வி கேட்கப்பட்டன. (யோவான் 18 : 19 – 21). இவைகளைப் பற்றித் தெரிந்திருந்தும் அதைப் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டது வேண்டாத வேலை என்று நினைத்த ஆண்டவர், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் எதிர்க்கேள்வி கேட்டது மன்றி நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடம் விசாரியும் என்று நறுக்கென்று பதில் அளித்தார். அதைச் செவிமடுத்த ஓர் அதிகாரி, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் சொல்வது? என்று இயேசுவை கன்னத்தில் அறைந்தான். (வ. 22).

இயேசு அந்த அதிகாரியின் அபாத செயலைக் கண்டித்து நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்பி, நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்? " என்று கேட்டார் (வ. 23) சில பேர் இந்த சம்பவத்தைச் சுட்டிக் காட்டி " ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு (மத் 5 : 39) என்று போதித்த ஆண்டவருடைய நடவடிக்கை முரண்படுகிறதே. மறு கன்னத்தையும் திருப்பிக் கொடுக் காமல் அவனிடத்தில் நியாயம் கேட்கிறாரே என்பர். அப்படிப்பட்டவர்களுக்கு பதில் சொல் லும் வகையில் " கய் N வுட்ஸ் " என்னும் வேத அறிஞர் யோவான் சுவிசேஷ வியாக் கியான நூலில், மார்ட்டின் லூதர் அவர்கள் சொன்ன கருத்தை மேற்கோள் காட்டி, கிறிஸ்து கையால் பதில் செய்வதைத் தான் கூடாது என்று சொன்னாரேயன்றி, வாயால் பதில் செய்யக் கூடாது என்று சொல்லவில்லை என்கிறார்.

ஆம், சகோதரர்களே. சாந்தமும் பொறுமையும் அன்பும் நிறைந்த ஆண்டவர் எப்பொழுதெல்லாம் தவறு நடந்ததோ அப்பொழுதெல்லாம் அதைக் கண்டிக்கத் தவற வில்லை. பாவத்தைக் கண்டு கொள்ளாமல் வாய் மூடி மௌனியாக இருப்பதைக் காட்டிலும் கோழைத்தனமும், மாய்மாலத்தனமுமான பாவம் வேறொன்றும் இருக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களில் நேர்மைக்காக எழுந்து நின்று போராடுவதற்கு மிகுந்த தைரியம் தேவை. இந்த விஷயத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அஞ்சாநெஞ்சம் பாராட்டத்தகுந்தவை. அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களின் பாவங்களையும் தேவ விரோதக் காரியங்களையும் கடுமையாகச் சாடி தங்களுடைய பணியை நேர்மையாகச் செய்தார்கள். தீர்க்கன் மீகா " நானோ யாக்கோபுக்கு அவன் மீறு தலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்று கூறுகிறார். (மீகா 3 : 8) அதே போன்று அவர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு தீர்க்கன் ஏசாயா **சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே, எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதல்களையும் யாக் கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி** என்கிறார். (ஏசாயா 58 : 1).

அவர்கள் இப்படித் தைரியமாக மக்களுடைய பாவங்களைக் கடுமையாகக் கண்டித்து பிரசங்கித்தால் பெரிய இடத்துப் பொல்லாப்புகளைத் தேடிக் கொண்டு துன்பங்களை அனு பவித்தனர் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும் அவைகளைப் பரிசுத்த ஆவியானவர் பொறுக்கி எடுத்து வேத எழுத்துக்களில் பொறித்திருக்கிறார். ஏன் என்றால், அவர்களைப் போல கர்த்தருடைய பணியைச் செய்ய அழைக்கப்பட்டு இருக்கிற நாமும் கூட தைரியமாய் பாவத்துக்கு எதிரே போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் (எபி 11 : 32 – 12 : 4).

நீங்கள் நீதிக்காக எழுந்து நின்று போராடும் இயல்புடையவர்களா? அப்படியானால் நீதியினிமித்தம் துன்பம் அனுபவித்த உண்மையுள்ள தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி நீங்களும் நடக்க வேண்டும். (ரோமர் 15 : 4) இதைக் குறித்து யாக்கோபு " என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்தலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள் " (யாக் 5 : 10) என்கிறார்.

மீண்டும் புதிய ஏற்பாட்டில், மேசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்ட ஒட்டக மயிர் உடை அணிந்து காட்டுத்தேனையும் வெட்டுக்கிளியையும் உண வாக்கிக் கொண்டவனும் ( மத் 3 : 4 ) எலியாவின் ஆவியை உடையவனுமாகிய யோவான் ஸ்நானகன், அந்நாளில் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்த பரிசேயர்களையும், வேதபாரகர் களையும், சதுசேயர்களையும் " விரியன் பாம்புக்குட்டிகளே , " நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எரிநரகத்தில் தள்ளப்படுவது நிச்சயம் என்று கர்ஜிக்கிறார். (மத் 3 : 1 – 12, 11 : 14).

அரசனும் கூட யோவானின் சொல்லடிக்குத் தப்பமுடியவில்லை. விபச்சாரம் பெருகி

விட்ட இந்தக் காலத்தில், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு ஏன்? என்ற மனநிலையோடு சம்பந்தப்பட்டவர்களிடம் காதுக்குள்ளே போய் முணுமுணுக்கும் ஒரு விஷயத்தை இவர் பகிரங்கமாக நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல என்று குற்றம் சாட்டுகிறார். ஆம், ஏரோது அரசன் தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியோடு வாழ்ந்தது நியாயப்பிரமானத்துக்கு விரோதமானது. அரசனே விபசாரக் குற்றவாளியாக இருந்தால் மக்கள் நீதியின் வழி நடப்பது எப்படி? யோவான் அதைத் தட்டி கேட்ட காரணத்தால் அவர் தலை துண்டிக்கப்பட்டது. ஆம், சகோதரர்களே!. பாவத்தைக் கண்டிக்கத் துணிவு இல்லாமல் நம் தலை உடலோடு ஒட்டிக் கொண்டிருப்பதை விட நாம் சத்தியத்தைப் பிரசங்கித்ததினால் நம் தலை துண்டிக்கப்பட்டுத் தட்டில் வைக்கப்படுவது மேல். நீர் இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்யும் உண்மையுள்ள ஊழியனா? ஆம் என்பது உமது பதில் ஆனால் யோவான் ஸ்நானகனின் சீரிய முன்மாதிரியைப் பின்பற்று.

இயேசு கிறிஸ்து யூதரின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டதைப் போல பவுல் அப்போஸ்தலன் கூட நிறுத்தப்பட்டார். அப்பொழுது பவுலும் இயேசுவின் அடிச்சுவட்டையே பின்பற்றினார். புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக ஏற்படுத்தப்பட்ட இந்த அப்போஸ்தலன் உண்மையாகவே ஒப்பு நோக்க முடியாத கர்த்தருடைய ஊழியக்காரன் என்பதில் சந்தேகமில்லை.

ரோமாபுரியில் சக்கரவர்த்தி சீசருக்கு முன்பாக முதல் விசை விசாரிக்கப்பட நின்ற பொழுது ஒருவரும் அவனுடன் கூட இருக்கவில்லை என்று கூறுகிறார். ( II தீமோ 4 : 16 ) இருந்தாலும் அவர் பெற்ற அந்த தைரியம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதை அவருடைய வாயாலேயே சொல்லுகிறார், கேளுங்கள் **கர்த்தரோ எனக்குத் துணை நின்றார்** என்கிறார் ( II தீமோ 4 : 17 ) அப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே அவர் ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட நேரத்திலிருந்தே அவருடைய பெலனும் நம்பிக்கையும் கர்த்தரே. ( பிலி 1 : 17 ; 4 : 13 ). அதனால் தன் இறுதி நாட்களில் பவுல் **நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தை காத்துக் கொண்டேன்** என்று சொல்ல முடிந்தது. ( II தீமோ 4 : 7 ) நீங்கள் உத்தம இருதயத்தோடு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறதாயிருந்தால் அவரைப் பின்தொடர்ந்து நீங்களும் நித்தியத்தை அவரோடு கழிக்க முடியும்.

நீங்கள் உண்மையாய்ச் சத்தியத்தைப் போதிக்கிறவர்களாயிருந்தால் வேதாகமத்தில் உள்ள எந்தக் காரியத்தையும் மறைத்து வைக்கக் கூடாது. ( அப். 20 : 27 ) நாம்

விசுவாசிக்கிற போதிக்கிற, கடைபிடிக்கிற அனைத்துக் காரியங்களுக்கும் வேதாகம அங்கீகாரம் இருக்க வேண்டும். ( கொலோ 3 : 17 ) எந்த ஒரு தனி நபரானாலும், எந்நிறத் தவரானாலும், குழு அல்லது கூட்டத்தாரானாலும், அவர்கள் உறவினரோ, நண்பரோ சபையைச் சார்ந்தவர்களோ பட்டம் பெற்றவர்களோ, பதவியிலுள்ளவர்களோ எவரானாலும் சரி ; தவறான உபதேசங்களைப் போதித்தால் அவர்களுடைய தவறைச் சுட்டிக் காட்டுவதற்கு தயங்கவே கூடாது. அப்படிச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி எப்படிப்பட்டதாயி ருக்கும் என்று தெரியாமல் இல்லை. தவறு இழைக்கிற மக்கள்திரள் தங்கள் செல்வாக்கு, பணபலம், ஆள்பலம், ஆட்சிபலம் ஆகியவற்றைக் காட்டி, மிரட்டி பல முனைகளிலும் நமக்கப் பிரச்சனைகளை உருவாக்குவார்கள். துன்பம் செய்வார்கள். அது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. ' கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் " என்று அன்றே சொல்லப்பட்டுத் தானே இருக்கிறது. (II தீமோ 3 : 12) சத்தியத்தைப் போதித்ததினால் துன்புறுத்தப்பட்ட இயேசு. தீர்க்கர்கள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களை விட நீங்கள் மேலானவர்களல்லவே! அவர்களுடைய பாடுகளுக்கு நீங்களும் பங்காளிகளாகி அவர்களுடைய ஆசீர்வாதத்திலும் பங்கடையுங்கள். (II தீமோ 2 : 12)

## ஞானஸ்நானம் பெற தகுதியுடையவர்கள் யார்?

1. பாவிகள் - (அப். 2 : 38)
2. கேள்விப்படுபவர்கள் - (ரோம. 10 : 14, 17)
3. விசுவாசிப்பவர்கள் - (மாற். 16 : 16, யோவா. 3 : 16)
4. மனந்திரும்புபவர்கள் - (லூக் 13 : 3, அப். 2 : 38)
5. கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் - (லூக். 12 : 8, அப். 8 : 36 - 39)
6. கிறிஸ்தவ ஜீவியத்தை வாழ விரும்புபவர்கள் - (I பேது. 2 : 9)

# பாவத்தின் பக்க விளைவுகள்

# Side Effects of Sin

Benny Martin

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இப்பாழாய்ப் போன பாரில் பரிதபித்துக் கொண்டிருக்கிறோம். நாம் விரும்பாவிட்டாலும் திரும்பிய பக்கம் எல்லாம் பாவம். **கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும் படிக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்** ( பிலிப். 2 : 15 ). பாவம் செய்யப் பழகிப்போன இவ்வுலகத்து மக்களின் ஆத்தும நிலையை எண்ணிப்பார்த்தால் நமக்குப் பாவமாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நம் பிதாவாகிய தேவன் பாவத்தைப் பார்க்கக் கூடாதவராயிருக்கிறார். அதனால், அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பாவத்தைப் பார்த்து அருவெறுக்கிறோம். அது மட்டுமல்ல, இப்படி பாவச் செயல்களில் ஈடுபடுபவர்களிடம் நாம் போய் இதை விட்டு நீங்கள் மனந்திரும்புங்கள், பாவம் உங்களைப் பதம் பார்த்துவிடும். நீங்கள் பாவத்திற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொல்லும்போதெல்லாம் அவர்கள் நம்மீது வீசும் பார்வையும், நமக்கெதிராக தொடுக்கும் வார்த்தைக்கணைகளும், நமக்குள் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி நம்மை நிலைகுலையச் செய்து, நம்மை தலை குனியச் செய்கிறது. அதுவும் போதாதென்று, அவர்களுடைய ஆத்துமாக்களை அதல பாதாளத்திற்கு அழைத்துச் செல்கின்ற காரியம் என்னவென்றால், பாவத்திற்கு பின் விளைவுகள் அல்லது பக்க விளைவுகள் எதுவுமில்லை என்கிற மெத்தனப் போக்குதான். வேத வசனம் **சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடைவோம்** என்று எச்சரிப்பு விடுக்கிறது. (2 கொரி. 5 : 10). பாவத்தின் பக்க விளைவுகளைப் பற்றிய பார்வை இதோ;

**I உலகளாவிய விளைவுகள்:**

அண்ட சராசரங்களை உருவாக்கின நம் தேவன் மனிதன் வாழும்படியாக மாசற்ற, தூய்மையான ஒன்றாக இப்பூமியை உண்டாக்கினார். ஆனால், மனித இனத்தின் பாவத்தின் விளைவாக நோவாவின் நாட்களில் தேவன் இப்பூமியில் மிகப்பெரிய ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணினார். அப்போது மகா ஆழத்தின் ஊற்றுக்

கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது ( ஆதி. 7 : 11 ). அந்நாட்களிலேயே இப்பூமி உருக்குலைந்தது, பூமியின் தட்பவெட்ப மண்டலங்கள் தடம் புரண்டன.

இப்பூமிக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் இன்று நாம் எதிர்கொள்ளும் புயல், சூறாவளி போன்றவைகளுக்கு வழிவகுத்தன. பூமிக்கு அடியில் உள்ளதட்டுகள் நிலைமாறியபடியால் இன்று பூகம்பங்கள் ஏற்படுகின்றது. சுருக்கமாகச் சொல்லப்போனால் இன்று ஏற்படும் இயற்கை சீற்றங்களுக்கெல்லாம் ஆதியாகமம் 6, 8 அதிகாரங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் தான் வித்திட்டன. இதற்கு ஏராளமான, தாராளமான புவியியல் மற்றும் தொல்பொருள் ஆதாரங்கள் உள்ளன. தேவன் இவ்வுலகை உண்டாக்கினார் என்பதை சந்தேகப்படும் சந்தேகப்பேர்வழிகள் கூட ஆரம்ப நாட்களில் இப்பூமி மிதமான, ஒரே மாதிரியான, சமச்சீரான தட்பவெட்ப நிலையை கொண்டிருந்ததை தாவர மற்றும் மிருகங்களின் படிமங் களைக் கொண்டு உறுதி செய்கின்றனர். பழங்கால நாகரீகங்களை ஆராய்ந்த தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் அக்காலத்து உலகம் மாசற்ற, நோயற்ற, ஒன்றாக இருந் ததை கண்டறிந்திருக்கின்றனர். எனவே, பாவம் ஆரம்பத்திலிருந்தே மனித இனத்திற்கு சாபத்தையும், துரோகத்தையும் கொண்டு வந்திருக்கிறதை கண்டறிந்து விட்டீர்களா?

**II சரீரப்பிராகாரமான விளைவுகள் :**

மனித இனத்துக்கு மரணமும், அதற்கு முந்தைய பிரச்சனைகளும், உபாதைகளும், சிருஷ்டிகருக்கு அது கீழ்ப்படியாமல் போனதினால் உருவான விளைவுகள் தான். ஆதியில் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய கட்டளையை மீறியதால் பாவம் செய்தான். அதன் விளைவாகத்தான் மனிதனுக்கு மரணம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அது ஆவிக்குரிய மரணமாக இருந்தாலும், பல கட்டங்களை உடல் கடந்து இறுதியில் சரீர மரணத்தைக் கண்டது. தேவனிடத்திலிருந்து மனிதன் பிரிவதை ஆவிக்குரிய மரணமென்றும், உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை சரீர மரணம் என்றும் அழைக்கிறோம்.

இன்று மனித இனம் வியாதியினால் வியாகுலப்படுவதற்கான காரணமே மனிதன் ஆரம்பத்தில் தேவனுக்கு விரோதமாக செய்த கலகம் தான் ( ரோமர் 5 : 18 ). அதனால், நம் சத்துருவாகிய மரணம் நம்மை மேற்கொண்டது. அது முதல் நம்முடைய பிறப்பிலிருந்தே மரணம் நம்மை நிழல் போல் தொடர்ந்து வருகிறது. சிலரை அது முன்பாகத் தாக்குகிறது, சிலரை அது சற்று சாகவசமாகத் தாக்குகிறது. ஏனென்றால், அது மனிதனுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது ( எபி. 9 : 27 ). பாவம் தொன்றுதொட்டு மனித இனத்தை எவ்விதமாகப் பதம் பார்க்கிறதென்று பார்க்கிறீர்களா? இன்றும் அதன் தாக்கம் தீரவில்லை. பிசாசானவன் ஆதியிலிருந்து கொலை பாதகனாயிருந்து எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி

சுற்றித்திரிகிறபடியால் நாம் விழித்திருந்து ஆவியையும், ஆத்துமாவையும் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பெரும்பாலான சரீர உபாதைகளுக்கு காரணம் நம்முடைய தீய பழக்கவழக்கங்கள், துக்கம், பொறாமை, பகை உணர்வு போன்றவைகள் என்றறிந்து அவைகளை நம்மை விட்டு முற்றும் அகற்ற வேண்டும்.

III **ஆவிக்குரிய விளைவுகள் :**

நாம் செய்யும் பாவங்களுக்கு நாம் கொடுக்கும் அதிகப்படியான விலை ஆவிக்குரிய மரணத்தை சந்திப்பது தான். இதைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாகச் சொல்கிறார். **இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை: கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவிமந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது "** (ஏசாயா 59 : 1, 2).


பிரியமான வாலிபர்களே, பெரும்பாலானவர்கள் பாவத்தினால் ஏற்படும் சரீரப்பிரகாரமான விளைவுகளைப் பற்றி பயப்படுகிறார்கள். பயந்து பாவத்தைக் களைய முற்படுகிறார்கள். ஆனால், ஆவிக்குரிய மரணத்தைப் பற்றிய அறிவோ, அக்கறையோ, அறவே இல்லை. நம் உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை எப்படி சரீர மரணமென்று அழைக்கிறோமோ, அதேபோல், தேவனிடத்திலிருந்து நம் உறவைப் பிரித்துக் கொள்ளும்போது, முறித்துக் கொள்ளும்போது அதை ஆவிக்குரிய மரணம் என்று அழைக்கிறோம். இவ்வுலகத்தை உண்டாக்கி, நம் பாவங்களுக்குப் பரிகாரியாக தம்முடைய ஒரே பேறான குமாரனையே அனுப்பிக் கொடுத்த தேவனோடு ஆவிக்குரிய உறவை நாம் முறித்துக் கொண்டால் அதன் விளைவை நம்மால் தாங்க முடியாது. இவ்வுலகில் கோடிக் கணக்கான மக்கள் மெய் தேவனாகிய நம் தேவனைத் தொழுது கொள்ள மறுத்து, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதை வெறுத்து, தங்கள் வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை அவர்களாகவே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் சபையிலும் பலர் பாவத்தின் கோரத்தன்மையை உணராதவர்களாக தங்கள் மேல் ஆக்கினையைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து " அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் " . என்று நியாயத்தீர்ப்பு நாளிலே சொல்லாதபடிக்கு, தேவனோடு கொண்டிருக்கும் உறவில் விரிசல் ஏற்படாதபடி அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். (மத். 7 : 23).

பாவம் ஒரு மோசமான, கொடூரமான எஜமான், அது ஒருவரிடமிருந்து

எல்லாவற்றையும் கொள்ளையடித்து, அவருக்கு எந்த நன்மையையும் கொடாமல் விட்டுச் செல்கிறது. இந்த பாவந்தான் நம்மையும் தேவனையும் இவ்வுலகிலும், நித்தியத்திலும் பிரிக்கிறது. தேவனையும், நம்மையும் பிரிக்கின்ற அந்த பாவம் நமக்கு தேவை தானா? பாவமற்ற வாழ்க்கையை நாம் இவ்வுலகில் வாழும் போது பாழாய்ப் போன இப்பாரிலிருந்து பரலோகத்தின் தேவன் நம்மை விடுவித்து மரணமில்லாத, துக்கமில்லாத, அலறுதலில்லாத, வருத்தமில்லாத " பரலோகத்திற்கு கொண்டு செல்வார் ". அதற்கு நாம் ஆயத்தமாவோமாக !.

✝

## சுற்றுகிறதா சூரியன்



சங்கீதம். 19 : 5,6 அநேக உண்மைகளைக் கொண்டுள்ளது. சூரியனைக் குறித்து சங்கீதக்காரன் இவ்விதம் சொல்கிறார். " சூரியன் வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை மட்டும் சுற்றியோடுகிறது....." வேதாகமத்தைக் குறை கூறுகிறவர்கள், இந்த வசனத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வேதாகமத்தைக் குறை சொன்னார்கள். அதன்பிறகு, மிகச் சமீபமாகத்தான் சூரியன் ஆகாயத்தில் நகர்ந்து கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன், எல்லோரும் நினைத்ததைப் போல், ஒரே இடத்தில் அது இல்லை. சூரியன் 1 மணிக்கு 6,00,000 மைல் வேகத்தில் ஆகாயத்தில், நகர்ந்து கொண்டுள்ளது. இந்த வேகத்தில் நகருமானால், ஆகாயத்தில், தன் பாதையில் ( Orbit ) ஒரு சுற்றுச் சுற்றிவர 22,00,00,000 ஆண்டுகள் பிடிக்கும்.

# முரணானவைகளை ஒன்றிணைத்தல்

# Syncretism

Cecil May, Jr.

Syncretism என்னும் ஆங்கில வார்த்தை, மாறுபாடான நம்பிக்கைகளை குறிப்பாக மத சம்மந்தமான நம்பிக்கை களை ஒன்றிணைப்பது என்று பொருள் படுகிறது. இது நவீன கால மனநிலைக்கு ஏற்றவாறு இருந்தாலும் கூட தேவனுக்கு எரிச்சலூட்டக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

மெய்யான ஜீவனுள்ள தேவனைத் தொழுது கொள்ளும் அதே நேரத்தில் மற்ற தெய்வங்களைத் தொழுது கொள்ளும் போக்கை வேதாகமம் வன்மையாகக் கண்டிக்கிறது. என்னை யன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமி யிலும் பூமியின் கீழ்த் தண்ணீ ரிலும் உண்டாயிருக்கிறவை களுக்கு ஒப்பான ஒரு சொரூபத் தையாகிலும் யாதொரு விக்கிரகத் தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் ( யாத்தி ராகமம் 20:3 – 5 ).

மேலும், வேதாகமத்தில் தேவன் எரிச்சலுள்ள தேவன் என்று சொல்லப்பட் டிருக்கிறது. எரிச்சல் என்னும் வார்த்தையை மனிதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அது எதிர்மறையான பொருளைத்தான் தரும். அதேபோல் கோபம் என்னும் வார்த்தையும் கூட தேவனோடு தொடர்புபடுத்தப்படும் ஒரு வார்த்தையாக தேவ வசனங்களில் நாம் பார்க்கிறோம். ‘‘ கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிகட்டுகிறவருமான தேவன் ; கர்த்தர் நீதியைச் சரிகட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர் ; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர். அவர் தம் முடைய பகைவர்களுக்காகக் கோபத்தை வைத்து வைக்கிறவர் ” ( நாகூம் 1:2).

மனிதர்களிடம் பார்க்கும் எரிச்சல், பொறாமை போன்றவைகள் கணவன் மனைவி இடையே அதிகமாகத் தொடர்புபடுத்தப்படும் வார்த்தைகளாக இருக்கின்றன. தனக்கு கிடைக்க வேண்டிய இடத்தையோ அல்லது

அன்பையோ வேறொருவர் எடுத்துக்கொள்ளும்போது இயற்கையாகவே கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ எரிச்சல் அல்லது பொறாமை ஏற்படுகிறது. விவாகம் என்பது ஒரு பிரத்யேகமான உறவாகும். அந்த பிரத்யேக உறவைப் பேணிகாக்க ஒவ்வொரு கணவனும், மனைவியும் நேர்மறையான பொறாமை கொண்டிருப்பவர்களாக இருப்பதுண்டு. தேவன் எரிச்சலுள்ள தேவன் என்பதன் பொருள். நாம் அவரை மாத்திரம் எல்லாவற்றையும் விட மேலாக ஆராதிக்க வேண்டும் என்பதை தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்,உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் உன் முழுப்பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை (மாற்கு 12 : 30 ) இந்த வசனம் மாற்று தெய்வத்துக்கு வழியையே விடவில்லை.

தீர்க்கதரிசன புத்தகங்களில் தேவன் விக்கிரக ஆராதனையை விபச்சாரம் வேசித்தனம் என்று அழைக்கிறார். எப்படி ஒரு மனிதன் தன் மனைவி வேறொரு நபரோடு தவறான உறவு வைத்துக் கொள்ளும்போது உணர்கிறானோ அதே போல்தான் தேவனும் தாம் மீட்டெடுத்த மக்கள் வேறே தேவர்களை வணங்கும்போது உணர்கிறார்.

'' வீடுகளின் மேல் '' வானசேனையைப் பணிகிறவர்களையும் கர்த்தர் பேரில் ஆணையிட்டு மல்கோமின்பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும், கர்த்தரை விட்டுப் பின் வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன் '' என்று தேவன் சொன்னார். ( செப்பனியா 1 : 55 ), மல்கோம் அம்மோனியர்களின் தெய்வமாக இருந்தான் ( I ராஜாக்கள் 11 : 33 ) இந்த I இராஜக்கள் புத்தகத்தை எழுதிய தேவ ஆவியினால் ஏகப்பட்ட எழுத்தாளர் இந்த மில்கோமை அம்மோனியரின் அருவருப்பு என்று அழைக்கிறார் ( I ராஜா 11 : 5 ) தேவனைத் தொழுது கொள்ளும் அதேநேரத்தில் மற்ற தேவர்களையும் தொழுது கொள்ளுவது நம் ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பதை ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிறது.

கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் அதை ஒருபோதும் மாற்றவேயில்லை. இயேசுகிறிஸ்து, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்னார். (யோவான் 14:6).

# பழைய ஏற்பாடு இன்றும் நம்மைக் கட்டுப்படுத்துகிறதா?

# Is The Old Testament Binding?

E.Clande Gardner

நம் பரிசுத்த வேதாகமம் இரண்டு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு போன்றவைகளே அந்த ஏற்பாடுகளாகும். பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்த காரியங்களை புதிய ஏற்பாடு உள்ளடக்கியிருக்கிறது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் உள்ள பத்து கட்டளைகளில் ஒன்பது கட்டளைகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. புதிய ஏற்பாடு ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக என்னும் கட்டளையை மாத்திரம் உள்ளடக்கவில்லை. பழைய ஏற்பாடு இக்கிறிஸ்தவ காலத்திற்கு பொருந்தாதது. அது புற ஜாதிகளுக்கான உடன்படிக்கை அல்ல.

கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களையும் கண்டிப்பாக வாசிக்கவும் படிக்கவும் வேண்டும். பழைய ஏற்பாடு சிருஷ்டிப்பைப் பற்றியும், தேவன் மனிதனோடு பல நூறு ஆண்டுகளாக நடந்து கொண்ட விதத்தைப் பற்றியும் சொல்கிறது. நமக்கு நன்மை தரக்கூடிய பல உதாரணங்கள், சம்பவங்கள் அதில் இடம் பெற்றுள்ளன. பழைய ஏற்பாட்டின் நோக்கத்தைப் பற்றி பவுல் சொல்லும்போது " முன்பு எழுதியிருக்கிற வைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்று சொல்கிறார். (ரோமர் 15 : 4 ) ; கீழ்ப்படிதல், தைரியம், விசுவாசம், பொறுமை போன்ற உதாரணங்களெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் மற்றுமொரு நோக்கம் மனித இனத்தை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வரும் உபாத்தியாய் இருப்பது. **இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது** ( கலாத்தியர் 3 : 24 ). அதற்குப் பின்வரும் வசனத்தில் பவுல் **நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே** என்று சொல்கிறார் இங்கே உபாத்தி என்பது பழைய ஏற்பாட்டுப் பிரமாணமாயிருக்கிறது.

புதிய ஏற்பாடு கிறிஸ்தவ காலத்தில் தேவன் பழைய ஏற்பாட்டுக்குப் பதிலாக புதிய

ஏற்பாட்டைத்தான் அங்கீகரித்திருக்கிறது என்று ஏராளமான வசனங்களைக் கொண்டு உறுதிசெய்கிறது. பழைய ஏற்பாடு இப்போது நமக்குப் போதனையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. என்பதை மூன்று உதாரணங்கள் நமக்கு உறுதி செய்கின்றன.

**1. இது விவாக உதாரணத்தைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது.**

புருஷனுயுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமானத்தின் படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள் ; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால், விபசாரியென்னப்படுவாள். புருஷன் மரித்த பின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல, அப்படிப்போல என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது. (ரோமர் 7 : 2 – 5). ஆம் பழைய ஏற்பாடு இன்றைய நாட்களில் நம்மை கட்டுப்படுத்துவதில்லை.

**2. இரண்டாம் உதாரணம் கலாத்தியர் 4 : 21 - 31 வசனங்களில் விவரிக்கப் பட்டிருக்கிறது.**

இந்த வசனப்பகுதியில் அடிமையான பெண்ணும், சுயாதீனமான பெண்ணும் இரண்டு ஏற்பாடுகளாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வசனப்பகுதியை முடிக்கும்போது " நாம் அடிமையானவளுக்குப் பிள்ளை களாயிராமல் சுயாதீனமுள்ளவர்களுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம். " என்று முடிக்கிறார். ( கலாத்தியர் 4 : 31 ) மறுபடியும் நாம் இங்கே பழைய பிரமாணத்தாலே அல்ல, புதிய பிரமாணத்தாலே நாம் கட்டுப்படுத்தப்படுகிறோம் என்று பார்க்கிறோம்.

**3. பவுல் மரணத்துக்கேதுவான ஊழியத்தையும், ஆவிக்குரிய ஊழியத்தையும் ஒப்பிட்டுப் பேசுகிறார் ( II கொரிந்தியர் 3 : 7 - 17 ).**

மேலும், பவுல் பழைய பிரமாணம் மகிமையுள்ளதென்றும், புதிய பிரமாணம் அதிக மகிமையுள்ளதென்றும் அறிவிக்கிறார். பழைய ஏற்பாடு பல அருமையான சம்பவங்களை உள்ளடக்கியது. ஆனால், அதைவிடச் சிறந்த புதிய ஏற்பாடு இப்போது நமக்கு இருக்கிறது.

எபிரெய ஆசிரியர் இயேசு கிறிஸ்து விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார் என்று நமக்கு போதித்திருக்கிறார். (எபிரேயர் 8 : 6 ).

பழைய பிரமாணத்திற்குப் பதிலாக புதிய பிரமாணம் நமக்கு தரப்பட்டுள்ளது என்பதைப் பல வேத வசனங்கள் நமக்கு உறுதிசெய்கின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் ( ரோமர் 6 : 15) ல் நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார். எபிரேய எழுத்தாளர் மறுபடியும் **ஆசாரியத்துவம் மாற்றப் பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்** என்று சொல்கிறார் (எபிரேயர் 7 : 18 ).

மோசேயின் பிரமாணம் அதன் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது. அதன் பிறகு, தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை நமக்குக் கொடுத்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாம் உயிர்ந்தெழுந்த பிறகு **மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசி களின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல் லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே** என்று சொன்னார் (லூக்கா 24 : 44).

பழைய ஏற்பாடு அல்லது பழைய உடன்படிக்கை எப்போது முடிவுக்கு வந்தது? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது அது முடிவுக்கு வந்தது. **நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக்குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து** (கொலோ 2 : 14 ) மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் ( எபேசியர் 2 : 14 ) ல் சொல்லும்போது **இருதிறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து** என்று சொல்கிறார். மோசேயின் பிரமாணம் யூதர்களுக்கு மாத்திரந்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்து புதிய உடன் படிக்கையில் உலகிலுள்ள எல்லா புறஜாதியாரையும், யூதர்களையும் இணைத்துவிட்டார். கிறிஸ்து இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். " ( எபேசியர் 2 : 16 ). இது மிகவும் விவரமாக எபிரேயர் 9 : 11 – 22 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டைப் பின்பற்ற விரும்புபவர்கள் ஒரு காரியத்தை மனதில் கொள்ள வேண்டும். அதென்னவென்றால், அவர்கள் பழைய ஏற்பாட்டில் ஏதாவதொரு

பிரமாணத்தை கைக்கொண்டால் எல்லாவற்றையும் கைகொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளில் சிலவற்றை நான் இங்கே பட்டியலிடுகிறேன். மிருக பலிகள்,விருத்தசேதனம், ஆசாரியத்துவம், ஓய்வு நாள், பஸ்கா பண்டிகை, போன்றவைகள். அவர்கள் பழைய ஏற்பாட்டில் இருந்ததுபோல ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்தினால், பழைய ஏற்பாட்டின் எல்லா நடைமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும். ஓய்வு நாளை ஆசரித்துவிட்டு மிருக பலிகளைச் செலுத்தாமல் இருப்பது ஏன்?

பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களும் யூதர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டது ஒருபோதும் புறஜாதிகளுக்கல்ல. தேவன் ஒட்டுமொத்த மனித இனமும் " ஒரே சரீரத்தில் பிரவேசிக்கும்படியான ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். ஏனெனில், **உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்கள். யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.** (கலாத்தியர் 3 : 27 – 28).

கலாத்தியர் நிருபம் பழைய பிரமாணத்தை விட புதிய பிரமாணம் மேலானது என்பதைப் பற்றிய முழுமையான விவாதத்தைக் கொண்டுள்ளது. எபிரெயப் புத்தகமும் இதேவிதமான கருத்துகளை உள்ளடக்கிய ஒரு புத்தகம்தான். ✠

---

## அவரைக் குறித்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

(யோவான் 9 : 17)

1. **அழகானவர்களைக் காட்டிலும் அழகானவர். ( சங். 45 : 2 )**
2. **பிரியமானவர்களைக் காட்டிலும் பிரியமானவர் ( எபே . 1 : 6 )**
3. **நெருக்கமானவர்களைக் காட்டிலும் நெருக்கமானவர் ( மத். 28 : 20 )**
4. **தாழ்மையுள்ளவர்களைக் காட்டிலும் தாழ்மையானவர் ( மத். 11 : 29 )**
5. **குற்றமில்லாதவரைக் காட்டிலும் குற்றமற்றவர் ( I பேதுரு. 1 : 19 )**
6. **ஐசுவரியவான்களைக் காட்டிலும் ஐசுவரியமுள்ளவர் ( எபே. 1 : 17, 18 )**
7. **பரிசுத்தவான்களைக் காட்டிலும் பரிசுத்தமுள்ளவர் ( அப். 4 : 27, 28 )**

## நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எப்படி அறிந்து கொள்வது?

# HOW TO KNOW YOU ARE SAVED

Jimmy Clark

**உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும் தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்** ( I யோவான் 5 : 13 ). இந்த வசனப்பகுதி தொடர்ந்து விசுவாசத்தில் இருக்கும் ஒரு தேவனுடைய பிள்ளை தான் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருப்பதை அறிந்து கொள்ள முடியும் என்று சொல்கிறது. ஒருவர் விசுவாசத்தை விட்டு வழுவிச் சென்றால் கிருபையிலிருந்து விழுந்துபோவது எப்படிச் சாத்தியமோ அதேபோல் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை தான் இரட்சிக்கப்பட்டதையும், தனக்கு நித்திய ஜீவன் உண்டென்பதையும் அறிந்து கொள்வதும் சாத்தியமே. ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதை அறிந்துகொள்வதைவிட மேலான ஒன்று இல்லை. ஆயினும், மத உலகம் ஒருவர் தான் இரட்சிக்கப்படுவதைக் குறித்து பல பொய்யான தகவல்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. இப்போது ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதை அறிந்து கொள்ளும் மூன்று அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

**அதிகாரப்பூர்வமான வெளிப்பாடு அவசியமாகிறது.**

ஒருவர் பொய்யை நம்புவதால் அது அவரை இரட்சிப்புக்கு வழி நடத்தாது. **ஆம், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத் தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.** ( II தெச. 2 : 10 – 12 ). சத்தியம் மாத்திரமே ஒருவரை விடுதலையாக்கும் ( யோவான் 8 : 32 ). தேவனுடைய வசனமே சத்தியமாயிருக்கிறது ( யோவான் 17 : 17 )

மனித இனம் ஏதோ ஒரு வெளிப்பாட்டினால் திடீரென இரட்சிக்கப்படுவதில்லை. இரட்சிப்பு தேவனுடைய தாயிருக்கிறது. ( வெளி 7 : 10 ) மனிதன் இரட்சிக்கப்படவேண்டுமென்றால் சுவிசேஷத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். (ரோமர் 1: 16).

**அறிவுப்பூர்வமாக சிந்திக்கும் திறன் அவசியமாகிறது.**

மனித இனம் தேவனுடைய வார்த்தையோடு தொடர்பை ஏற்படுத்தியும் இரட்சிக்கப் படவில்லையென்றால் ( எபிரெயர் 4 : 2 ). தேவனுடைய வார்த்தை என்னும் சத்தியத்தைக் காண அறிவுப்பூர்வமாக சிந்திக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக் கேய சகோதரர்களுக்கு எழுதும் போது, **எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக் கொள்ளுங்கள்** ( I தெசலோனிக்கேயர் 5 : 21 ) என்று எழுதுகிறார். லூக்கா ஆசிரியர் பெரேயாவிலுள்ள கிறிஸ்தவர்களைப் பற்றிச் சொல்லும்போது " அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குண சாலிகளாயிருந்தார்கள் என்று சொல்கிறார். ( அப்போஸ்தலர் 17 : 11 ) சில யூதர்கள் வேத வசனத்தை ஆராய்ந்து பார்த்து, தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக நினைத்தார்கள், ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களுடைய தவறான எண்ணத்தைச் சாடினார். ( யோவான் 5 : 39 – 40 ) அப்போஸ்தலனாகிய பவுல் தன் சொந்த தேசத்தாருடைய பக்திவைராக்கியத்தைக் குறித்து அறிந்திருந்தாலும் கூட அவர்கள் அறியாமையில் இழந்து போயிருக்கிறதைக் கண்டு அவர்கள் இரட்சிக்கப்படும்படி ஜெபித்தார் ( ரோமர் 10 : 1 – 3 ). எத்தியோப்பிய மந்திரி தன்னுடைய ஆவிக்குரிய நலனுக்கு தேவவாக்கியங்களைக் குறித்து சரியான அறிவு அவசியம் என்பதை அறிந்திருந்தார் (அப். 8 : 26 – 39).

**சரியான கீழ்ப்படிதல் அவசியமாகிறது.**

ஒருவர் சுவிசேஷத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம், அறிவுப்பூர்வமாக ஆராய்யலாம். அப்படியிருந்தும் இழந்து போகலாம். அதற்கான காரணம் என்னவென்றால், சுவிசேஷத்திற்கு முழுமையாக கீழப்படியாமலிருப்பது தான். பேலிக்சும், அவன் மனைவியும் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். ஆனால், அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை (அப். 24 : 24, 25 ) இரட்சிக்கப்படுவதற்குக் கீழ்ப்படிதல் மிகவும் அவசியமாகிறது. தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி " ( எபிரெயர் 5 : 9 ) என்று எழுதப்பட்டிருக்கிறது. சிலர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், ஆண்டவரென்றும், இரட்சகரென்றும் விசுவாசிக்கிறார்கள், இருந்தபோதிலும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞாஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே தாங்கள்

இரட்சிக்கப்பட்டு விட்டதாகவும் விசுவாசிக்கிறார்கள் ( கலாத்தியர் 3 : 26, 27 ). மனிதன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள என்னென்ன காரியங்கள் அவசியமென்று தேவன் சொல்லியிருக்கிறாரோ அந்த காரியங்களுக்கெல்லாம் மனிதன் மனதார கீழ்ப்படியவில்லையென்றால் அவன் பாவத்திலிருந்து விடுதலை பெறவே முடியாது. (ரோமர் 6 : 3 – 18) சுவிசேஷமல்லாத ஒன்றிற்கு ஒருவர் கீழ்ப்படியும்போது அவர் இரட்சிக்கப்பட முடியாது. தேவன் மனிதன் இரட்சிக்கப்படும்படியாக எவைகளை யெல்லாம் சொல்லியிருக்கிறாரோ அவைகளை அப்படியே செய்யும்போது மாத்திரமே இரட்சிப்படைய முடியும். ✝

---

- " ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்". ( ரோமர் 10 : 17 )

- " அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந் திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக்கா 13 : 3 – 5 ).

- " என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10 : 9 , 10 )

- " பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" ( அப். 2 : 38 ).

- " நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" ( வெளி 2 : 10)

# கர்த்தருடைய சபை வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்கின்றது
# The Lord's Church Worships First Day of The Week

Roy. H. Laxier

கர்த்தருடைய சபை, வாரம் தவறாமல் ஆராதிக்கும்படி ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி வருகிறது. அந்த சமயத்தில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த் தெழுதலையும் நினைவு கூரும்படி கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறது. கர்த்த ருடைய வார்த்தையின் மூலம் போதிக்கப்படவும், பக்திவிருத்தியடையவும் நேரம் எடுத்துக் கொள்கிறோம். சபை கூடி வரும்போது, பாடுவதினாலும், ஜெபத்தினாலும், கொடுத் தலாலும், தேவனை ஆராதிக்கிறோம். கர்த்தருடைய சபை ஞாயிற்றுக்கிழமை கூடி வருவதற்கு சில சிறப்புக் காரணங்கள் உண்டு.

**ஏன் ஞாயிற்றுக்கிழமை ஆராதிக்க வேண்டும் ?**

**முதலாவதாக:-** ஞாயிற்றுக்கிழமைகளில் சில முக்கிய நிகழ்வுகள் நடந்திருப்பதால் சபை அந்த நாளில் ஆராதிக்கிறது !

1. இயேசு மரணத்தை ஜெயித்து, வாரத்தின் முதல் நாளில் தான் உயிர்த்தெழுந்தார். "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்" (மாற்கு. 16 : 9).

2. பரிசுத்த ஆவியானவர், இந்த நாளில் அப்போஸ்தலர்கள் மீது வந்தார். பெந்தெ கொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள்

அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந் தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியா னவர் தங்களுக்குத் தந்தருளின் வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். (அப். 2 ; 1 – 4) பெந்தெகொஸ்தே நாள் என்றால் 50 வது நாள் என்று பொருள். பஸ்கா பண்டிகைக்கு பின் 50 வது நாளில், ஆயத்த பிரமாணத் தின்படி அநுசரிக்கப்படவேண்டிய ஒரு பண்டிகைதான் இது. ஓய்வு நாளுக்கு மறுநாளில் இப்பண்டிகை அநுசரிக்கப்படவேண்டும். (லேவி. 23 : 11, 15). ஆகவே, பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் பெற்றதும், சுவிசேஷத்தை பிரசங்கித்ததும் ஞாயிற்றுக்கிழமை தான்.

3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை அந்த நாளில் தான் தொடங்கியது. அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் இரட்சிப்பைப் பிரசங்கித்தார்கள். அநேகர் மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 2 : 37 *42) அவர்கள் ஒருமனப்பட்டு ஐக்கியமாக இருந்து, உலகம் முழுவதும் சுவிசேஷப் பணி செய்தார்கள்.

4. இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நினைவு படுத்தும் கர்த்தரின் பந்தி அந்த நாளில் சபையில் அநுசரிக்கப்பட்டது. (அப். 20 : 7).

5. சபைகள், ஞாயிற்றுக்கிழமை கூடிவருவதை வழக்கமாகக் கொண்டது. மற்ற காரியங்களை குறித்து சில கட்டளைகள் கொடுக்கப்பட்டது. வாரத்தின் முதல் நாளில் " "ஏதாவது சேர்த்து வைக்கும்படி" கட்டளை கொடுக்கப்பட்டது. (1. கொரி. 16, 1, 2) சபையாக கூடிவரும் வேளையை புத்தி சொல்லும்படியாக பயன்படுத்தும்படி கட்டளை கொடுக் கப்பட்டது. (எபி. 10 ; 25).

**இரண்டாவதாக:** கிறிஸ்துவின் சபைகள் ஞாயிற்றுக்கிழமை ஆராதிப்பதற்கு, ஒரு முக்கியமான கொள்கை உண்டு. இயேசு அப்போஸ்தலர்களை உலகெங்கும் போகும்படி கட்டளை கொடுக்கும்போது, நீங்கள் சீஷர் ஆக்குகிறவர்களுக்கு, " **நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்** " என்று சொன்னார் ( மத். 28 : 20 ). ஆகவே, ஆதித்திருச் சபை கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல் நாளில் அநுசரிக்கிறதேனென்றால், அதை அப்போஸ்தலர் அப்பம் செய்யும்படி உபதேசம் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

**மூன்றவதாக:** கிறிஸ்துவை கனம்பண்ணும்படியாக, ஆதித் திருச்சபை ஞாயிறு அன்றே கூடியதற்கு வரலாற்று ஆசிரியர்கள் தரும் ஆதாரங்கள் அநேகம் உண்டு.

1. அந்தியோகியாவின் இக்நாடியஸ் (Ignatius of Antioch) சொல்லும் போது, " கிறிஸ்துவின் ஒவ்வொரு நண்பனும், கர்த்தருடைய நாளை, பண்டிகையாகவும், உயிர்த்தெழுந்த நாளாகவும், வார நாட்களின் பிரதானமானதாகவும், வார நாட்களின் அரசியாகவும் எண்ணி அதை கடைபிடிக்க வேண்டும் " என்று சொன்னார். இந்நாடியஸ் என்பவர் கி.பி. 37 முதல், கி.பி. 108 வரை வாழ்ந்தார். அவர் புகழ்பெற்ற வரலாற்று அசிரியர்.

2. ஜஸ்டின் மார்டயர் (Justin Martyr) :- இவர் கி.பி.100 முதல் கி.பி 165 வரை வாழ்ந்தவர், " ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்படும் நாளிலே, பட்டணத்திலும் நாட்டிலும் உள்ள மக்கள் எல்லாம் ஓரிடத்தில் கூடி வந்தனர். உணவு, திராட்ச ரசம், தண்ணீர் இவைகள் கொண்டுவரப்படுகிறது... எல்லாருக்கும் விநியோகிக்கப்படுகிறது, எல்லாரும் நன்றி சொல்லுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் அன்று பொதுவாக ஆராதனைக்கு கூடி வரும் நாள். ஏனென்றால், நம் தேவன் உலகத்தை உண்டாக்கின நாள் அதுவே. நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவும் அந்நாளில் தான், மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் " ஜஸ்டின் ; முதலாம் நூற்றாண்டில் ஆதித் திருச்சபையில் செய்ததை இரண்டாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து செய்தார்கள் என்பதற்கு சாட்சி கொடுக்கிறார்.

இவர்களைப் போன்றே இன்னும் அநேக வரலாற்று ஆசிரியர்களை நாம் மேற்கோள் காட்ட முடியும். இவர்கள் எல்லாரும் ஆதித் திருச்சபை என்ன செய்தது என்பதைச் சொல்லு கிறார்களே தவிர மற்றபடி உபதேச சட்டங்களை அவர்கள் நமக்கு கொடுக்கவில்லை.

**பழைய ஏற்பாட்டு ஓய்வு நாள்**

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக ( யாத். 20 : 8 ). என்று யூதர்களுக்கு சொல்லப்பட்டது உண்மையாயிருந்தாலும், அந்த உடன்படிக்கை இஸ்ரவேலர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. (உபா. 5 : 1 – 3, 12 – 15). ஆபிரகாமின் சந்ததி வழி வந்த இஸ்ரவேலர் களுக்கும், தேவனுக்குமிடையேயான உடன்படிக்கையாக இது இருக்கிறது. (யாத். 31 : 17). ஏழாம் நாள் தான் யூதர்கள் ஓய்வெடுக்கும்படியாக நியமிக்கப்பட்டது ( யாத். 20 : 9, 10 ). மோசேயுடன், எகிப்தைவிட்டுக் கிளம்பி, சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப் படும் வரை ஓய்வு நாளை அவர்கள் அறியவுமில்லை. அதை அவர்கள் கைக்கொள்ளவு மில்லை ( நெகேமியா. 9 : 13 , 14 ) அன்றைய யூதர்கள் ஓய்வுநாளை கைக்கொள்ளுவது சரிதான் : ஆனால், அந்த சட்டம் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. உண்மையில்,

மோசேயின் நியாயப்பிரமாணத்தை நாம் கடைபிடிக்க வேண்டாம் என்று நேரடியாக கிறிஸ்தவர்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். ( ரோமர். 7 : 1 – 6 ). அந்தப் பிரமாணம் சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டது. (எபே. 2 : 14 – 16 கொலே. 2: 14). கிறிஸ்தவர்கள், இயேசுவைப் பின்பற்றுவதால், அவருடைய புதிய கற்பனையையே அவர்கள் கைக் கொள்ள வேண்டும் ( எபி. 8 : 6, 8 ). இந்தப் புதிய பிரமாணத்தில், கிறிஸ்தவர்களை ஞாயிற்றுக்கிழமைகளில் தேவனை ஆராதிக்கும்படி அவர் வழி நடத்துகிறார்.

**வேதம் என்ன போதிக்கிறது ?**

வாரத்தின் முதல் நாளில், அதாவது ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களை ஆராதிக்கும்படி கட்டளையிடுகிறது. அந்த நாளில் இயேசுவின் தியாகத்தை கிறிஸ்தவர்கள் நினைப்பார்கள். ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துவார்கள். தங்கள் வருமானத்திலிருந்து தேவனுக்கு கொடுப்பார்கள், பாடுவார்கள், ஜெபிப்பார்கள்.

நாமும் ஆதித்திருச்சபை செய்ததை மீட்டமைப்போமானால், அவர்களின் வழி நடக்க முயற்சிப்போமானால் நாமும் ஞாயிற்றுக்கிழமையில் தான் கூடிவந்து தேவனைத் தொழுது கொள்ளுவோம்.

---

## தேவனுடைய ராஜ்யத்தின் தன்மைகள்

- தேவனுடைய ராஜ்யம் தெய்வீக ஆரம்பத்தைக் கொண்டது. அது ஒரு போதும் அழிக்கப்பட முடியாதது ( தானியேல் 2 : 44)
- தேவனுடைய ராஜ்யம் உலகளாவியது. இதற்கு தேசிய அல்லது சர்வதேச எல்லை இல்லை. (மாற்கு 16 : 15 ; மத்தேயு 28 : 19)
- தேவனுடைய ராஜ்யம் இப்பொழுது இவ்வுலகில் இயங்கி வருகிறது. அதில் அங்கம் வகிக்கும் தேவனுடைய பிள்ளைகள் அதின் அங்கங்களாக இருக்கிறார்கள். (கொலோ 1 : 14 ; வெளி 1 : 6)
- தேவனுடைய ராஜ்யத்தில் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குத்தான் இருக்கிறது. ( மத்தேயு 28 : 18 ) எல்லோரும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்பட்டிருக்க வெண்டும்.

# தவறு எப்போதும் தவறு தான்

## *Wrong Is Always Wrong*

Selected

ஒழுக்க நெறிகள் தறிகெட்டு, தரம் தாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்களில் நம் தவறுகளை நியாயப்படுத்த சாத்தான் பல வழிமுறைகளை வகுத்திருக்கிறான். உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க விரும்பும் யாரும் அவனுடைய தந்திரங்களை தெரியாமலிருக்கக்கூடாது ( II கொரிந்தியர் 2 : 11 ). நம் செயல்பாடுகளை நாம் நியாயப்படுத்த முயற்சித்தாலும் கூட தவறு எப்போதும் தவறாகவே இருக்கிறது.

**நீங்கள் பிடிபடவில்லையென்றாலும் தவறு தவறுதான் !**

" கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது " என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (நீதிமொழிகள் 15 : 3).

**நீங்கள் ஒரு நல்ல காரணத்திற்காக தவறை செய்தாலும் தவறு தவறுதான்!**

கனமான நோக்கம் கனவீனமான செயல்பாட்டை நியாயப்படுத்த முடியாது. வேறு விதமாகச் சொன்னால், ஒருவருடைய நோக்கம் சரியானது என்பதற்காக அவர் தவறான செயல்களைச் செய்வது எவ்விதத்திலும் அவரை நியாயப்படுத்தாது. பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமானத்தை மீறுகிறதே பாவம் ( I யோவான் 3 : 4 ; II யோவான் 9 ).

**மற்றவர்கள் மிகமோசமான காரியங்களை செய்தாலும் கூட நீங்கள் செய்யும் தவறு தவறுதான்!**

ஒருவேளை நீங்கள் இழந்து போனால், நியாயத்தீர்ப்பு நாளில் உங்களை விட மிகமோசமான காரியங்களைச் செய்தவர்கள் அங்கே இருக்கும் போது, அது உங்களுக்கு சற்று ஆறுதலைத் தரும்.

**உங்கள் மனசாட்சியைத் அது தொடாவிட்டால் கூட தவறு தவறுதான்!**

தவறு நேர்மையாக அல்லது உண்மையாகச் செய்யப்பட்டாலும் கூட பரிசுத்த தேவனுக்கு முன்பாக அது பாவமாயிருக்கிறது " ....... மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் " (கலாத்தியர் 6 : 7).

**சரி என்று பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட தவறு தவறுதான்!**

தீமைசெய்யத் திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக என்று வேதாகமம் சொல்கிறது ( யாத்திராகமம் 23 : 2 ) கிறிஸ்தவர்கள் " துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாமல், தீயோருடைய வழியில் நடவாமல்; அதை வெறுத்துவிட்டு அதன் வழியாய்ப் போகாமல் அதைவிட்டு விலகிக் கடந்து போக வேண்டும் " (நீதி மொழிகள் 4 : 14, 15 ) எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்; பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். (தெச. 5 : 21, 22 )

**ஒரு தவறான காரியத்தை செய்வதற்கு சரியான வழி ஒருபோதும் இருந்ததில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

✝

---

# கிறிஸ்தவ ஐக்கியத்திற்கான சில வழிமுறைகள்

- விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள் (ரோமர் 14 : 1).
- கிறிஸ்துவின் வேலைக்காரனை குற்றவாளியாகத் தீர்க்காதிருங்கள் (ரோமர் 4 : 4).
- முக்கியமற்ற காரியங்கள் சரீரத்தின் ஒற்றுமையை சீர்குலைக்க நாம் ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்.
- சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடுங்கள் (ரோமர் 14 : 19)

# மார்க்கத்தைப் பிரசங்கித்தல்

# Preaching the way

E. Clande Gardnet

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறைந்தபட்சம் ஆறுமுறை லூக்கா கிறிஸ்தவத்தை " மார்க்கம் " என்று குறிப்பிடுகிறார். பவுல் தன்னுடைய மதத்தைப் பற்றி விவரித்தபோது இவ்விதமாக அறிவித்தார் " உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளு கிறேன். அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின் படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து வருகிறேன்... " (அப். 24 : 14). லூக்கா இந்த அர்த்தமுள்ள வார்த்தையாகிய மார்க்கத்தை " அப் 9 : 2; 19 : 9, 23; 24 : 22 போன்ற வசனங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார்.

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகளை நாம் பார்க்கும் போது மார்க்கம் என்கிற வார்த்தை பற்றி நான்கு செயல்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிக்கின்றன: 1. மார்க்கத்தின் அங்கத்தினர்கள் 2. மார்க்கத்தின் உபத்திரம் 3. மார்க்கத்தின்படி ஆராதனை 4. மார்க்கத்தை போதித்தது அல்லது பிரசங்கித்தது. இந்த பாடத்தின் நோக்கம் இம்மார்க் கத்தை பிரசங்கிப்பதின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் வலியுறுத்துவதுதான்.

**மார்க்கம் என்பது என்ன?**

மார்க்கம் என்பது கிறிஸ்தவ முறைமையாயிருக்கிறது; அது உண்மையான ஆராதனை முறையாயிருக்கிறது; அது வாழ்க்கை முறையாயிருக்கிறது. Adam Clarke என்னும் வேத அறிஞர் அப் 9 : 2 யை இவ்விதமாக வியாக்கியானம் செய்கிறார். " ... இந்த மதம் .... கர்த்தருடைய மார்க்கம், அவருக்குரிய முழு ஆராதனை முறையைக் குறிக்கிறது, இம்மார்க்கம் அவராலேயே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது: இம்மார்க்கத்தில் மனிதர்கள் நடக்கும்படி தேவன் சித்தங்கொண்டிருக்கிறார், மனிதர்கள் அப்படிச் செய்யும்போது வாழ்க்கையில் அவர்கள் பாதுகாப்பாக நடந்து கடைசியில் அந்த நித்திய மகிழ்ச்சியை அடைவார்கள். யூத எழுத்தாளர்கள் கிறிஸ்தவத்தின் முழுமையான உபதேசத்தையும், நடைமுறையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்... "

கிறிஸ்தவம் ஜீவமார்க்கமாக, இரட்சிப்பின் மார்க்கமாக, சேவையின் மார்க்கமாக, நம்பிக்கையின் மார்க்கமாக இருக்கிறது. இம்மார்க்கத்தின் மூலமாகத்தான் நாம் இந்த வாழ்க்கையை அனுபவிக்கிறோம். வரவிருக்கும் அல்லது இனிவரும் உலகில் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வோம் (I பேதுரு 3 : 12; யோ 10 : 10; லூக்கா 19 : 10; I யோ 2 : 25).

கம்யூனிசக் கொள்கையும், சோசலிசக் கொள்கையும் இன்னும் வேறு சில கொள்கைகளும் லட்சக்கணக்கான மக்களால் வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால், எல்லோரும் நடக்க வேண்டிய மார்க்கம் கிறிஸ்துவின் மார்க்கம் தான். கிறிஸ்தவம் நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நம்மை ஆளுகின்ற, நம்மீது செல்வாக்கைச் செலுத்துகின்ற ஒன்றாக பார்க்கப்பட வேண்டும். கிறிஸ்தவ போதனைகள் வீட்டிலும், பொழுதுபோக்கு நேரங்களிலும், வேலையிலும், சபையிலும், சமுதாயத்திலும், நம்மை ஆளவேண்டும். கிறிஸ்தவம் நம் அன்றாட வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்பட்ட ஓர் அமைப்பாக அல்லது சடங்காச்சாரமாக இருக்கக்கூடாது.

**மார்க்கத்தை பிரசங்கித்தல் என்றால் என்ன?**

ஒருவர் மார்க்கத்தை பிரசங்கிக்கும்போது, அவர் கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் பற்றி பிரசங்கிக்கிறார். வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பல காரியங்கள் இவைகளைத் தான் காட்டுகின்றன. மேலும், நாம் பிரசங்கித்தே ஆகவேண்டும் என்பதையே காட்டுகின்றன, நாம் மார்க்கத்தை பிரசங்கிக்கும்போது.

**1. நாம் கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்**

பிலிப்பு கிறிஸ்துவை சமாரியர்களிடமும், எத்தியோப்பிய மந்திரியிடமும் பிரசங்கித்தார் (அப் 8 : 5, 12, 35). நம் இரட்சிப்பாகிய கிறிஸ்து தான் நம் மைய நோக்கமாக இருக்க வேண்டும். ஏனென்றால், அவர் தான் மார்க்கமாக அல்லது வழியாக இருக்கிறார் (அப் 2 : 22; யோ 14 : 6). நாம் நம்முடைய அபிப்பிராயங்களையோ, தனிப்பட்ட விருப்பங்களையோ அல்லது நம்மைப்பற்றியோ பிரசங்கிக்கக்கூடாது (I கொரி 2 : 2; II கொரி 4 : 5).

**2. நாம் சபையை பிரசங்கிக்கிறோம்**

சமாரியாவில் பிலிப்பு இயேசுவைப் பிரசங்கித்தார் என்று பார்க்கும்போது அவர் சபையை அல்லது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றியும் பிரசங்கித்தார் என்று தான் பொருள் (அப் 8 : 18). நாம் புதிய ஏற்பாட்டு சபையின் மதிப்பை, தன்மையைப் பற்றி அறிவிக்காமல் மார்க்கத்தை பிரசங்கிக்க முடியாது. கிறிஸ்துவும், சபையும் பிரிக்க முடியாதவைகள் (எபே 5 : 32; அப் 28 : 23, 31)

**3. நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம்**

இயேசு நம்மை சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார் ( மாற்கு 16 : 15 ) I கொரி 9 : 16 யையும் பார்க்கவும். பவுல் மெத்தப் படித்தவர், இருந்தபோதிலும் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் ( கலா 1 : 11,12 ). நற்செய்தியால் உலகத்தை ஆசீர்வதிப்பது நம் சிலாக்கியமாகும் (II கொரி 4 : 7)

**4. நாம் சத்தியத்தை பிரசங்கிக்கிறோம்**

மார்க்கத்தைப் போல் " சத்தியம் " என்பதும் கிறிஸ்தவத்தின் முழு தன்மையையும் எடுத்துரைக்கும் ஒரு விரிவான வார்த்தை. நாம் அன்புடன் சத்தியத்தை கைக்கொள்ள வேண்டும் ( எபே 4 : 15 ). சத்தியம் நம்மை விடுதலையாக்குகிறது ( யோ 8 : 32; I பேதுரு 1 : 22).

**5. நாம் வார்த்தையைப் பிரசங்கிக்கிறோம்**

நாம் பவுலால் திருவசனத்தைப் பிரசங்கிக்கும்படியாகவும், பேதுருவால் தேவனுடைய வாக்கியங்களைப் போதிக்கும்படியாகவும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் ( I தீமோ 4 : 2; 2 தீமோத் 2 : 2; I பேதுரு 4 : 11 ). கட்டளை என்பது ஒரு வேண்டுகோளோ அல்லது ஆலோசனையோ அல்ல. நாம் எதைப் பிரசங்கிக்க வேண்டுமென்று தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் எல்லையை வகுத்திருக்கிறது.

**6. நாம் தேவனுடைய பிரசங்கத்தைப் பிரசங்கிக்க வேண்டும்**

தேவன் யோனா தீர்க்கதரிசியை நினிவேக்கு விரோதமாக பிரசங்கிக்கும்படி கட்டளை யிட்டபோது " நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி " என்று கட்டளையிட்டார் ( யோனா 3 : 2 ). தேவனிடத்திலிருந்து வருகிறவைகளை நாம் கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல், பயமோ அல்லது முக தாட்சணியமோ இல்லாமல் பிரசங்கிக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ( அப் 20 : 26, 27; கலா 1: 8, 9; II யோ 9).

**7. நாம் ஏன் மார்க்கத்தை பிரசங்கிக்க வேண்டும்?**

நாம் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவின் நாமத்தில் இவ்வுலகத்திற்கு பிரசங்கத்தை எடுத்துச் செல்கிறோம் ( எபி 2 : 10 ). நாம் ஏற்கனவே பிரசங்கத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் இதைச் செய்கிறோம் ( I கொரி 1 : 21 ). சுவிசேஷம் விசுவாசிக்கப்பட்டு கீழ்ப்படியப்படும்போது அதன் விளைவு இரட்சிப்பாயிருக்கிறது ( மாற்கு 16 : 15, 16 ). பவுல் சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது " என்று எழுதினார் ( ரோ 1: 16 ). சுவிசேஷத்திற்கு வாழ்வை சீர்திருத்தவும், பாவத்தை அழிக்கவும்,

இழந்த சமாதானத்தைத் திரும்பத்தரவும், பட்டணத்தை இரட்சிக்கவும், உலகத்தை மாற்றவும் வல்லமை உண்டு.

இவ்வுலகம் இழந்துபோன நிலையில் உள்ளது, நாம் இவ்வுலகத்தை சுவிசேஷமயமாக்குவதன் அவசியத்தை உணரவேண்டும் (ரோம 3 : 23; யோ 4 : 35).

நம்முடைய தலைமுறையில் முழுஉலகத்திற்கும் சுவிசேஷம் என்பது செயல்படுத்த முடியாத ஒரு கனவல்ல. அன்பினாலும் விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலும் தூண்டப்பட்டால் இரட்சகர் நம்மிடம் கேட்டுக் கொண்டதை நம்மால் நிச்சயமாக நிறைவேற்ற முடியும்.மோசே இஸ்ரவேலர்களை வழிநடத்தத் தயங்கினபோது, தேவன் " நான் உன்னோடே கூட இருப்பேன் " என்று வாக்குத்தத்தம் பண்ணினார் ( யாத் 3 : 12 ). அதேபோல், நாமும் மக்களை வழிநடத்த நம்மிடம் போதுமான நிதி ஆதாரமில்லை, எங்களால் முடியவில்லை என்று தயக்கங்காட்டுகிறோம். ஆனால், முழு பெலனோடு சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை நாம் பிரசங்கித்தால் கர்த்தர் இவ்வுலகத்தின் முடிவு பரியந்தமும் நம்மோடு இருப்பார் (மத் 28 : 20).

**8. மார்க்கத்தை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு நாம் புத்தி சொல்ல வேண்டும்**

பாவம் நிறைந்த மனிதனை மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளத் தூண்டும் முயற்சியில் நாம் " ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ள " அவர்களுக்கு புத்திச் சொல்ல வேண்டும் ( எபே 5 : 15 ). ஒருவர் ஜீவனுக்குப் போகிற வழியில் பிரவேசித்து அதில் நிலைத்திருக்கும்படி நாம் புத்திச் சொல்ல வேண்டும் (மத் 7 : 14). நம் நடத்தையில் நாம் கிறிஸ்தவனாயிருப்பதற்கு நாம் பரிசுத்த வழியில் நடக்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று நினைவுபடுத்தப்பட வேண்டும் ( ஏசாயா 35 : 8 ). மேலும், நம் நடையில் நம் தொடர்ந்து பூர்வப்பாதைகளை கேட்டு விசாரிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (எரே 6 : 16).

நான் கர்த்தருடைய வழியைப் பின்பற்றினால், நான் எங்கே போவேன்? நான் எந்த வழியைப் பின்பற்றுவேன்? அது நீதியின் பாதையாகத் தான் இருக்கும் (சங் 23 : 3); அது அன்பின் பாதையாகத் தான் இருக்கும் ( I யோ 4 : 19 ); விசுவாசப் பாதையாகத்தான் இருக்கும் (எபி 11 : 6); அது ஊழியப் பாதையாகத் தான் இருக்கும் (மத் 23 : 11, 12).

இப்படிப்பட்ட வழியை நாம் வல்லமையாக, ஊக்கமாக, உண்மையாக பிரசங்கிப்போமாக. அப்போது இப்பூமியில் இழந்து போனவர்கள் பரலோகத்தில் மீட்கப்பட்டவர்களாயிருப்பார்கள் "... நித்திய வழியிலே என்னை நடத்தும் " (சங் 134 : 24).

# ஆத்தும ஆதாயத்தில் பொறுமை

# Patience In Winning Souls

Dale Grissim

தனிநபர் ஊழியத்தில் பொறுமை முக்கியப்பங்கு வகிக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பல வருடங்களாக, இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை போதிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிற பல புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். பல உபகரணங்களை நான் பார்த்திருக்கிறேன். இவைகளில் பெரும்பாலானவைகள் புதிதாக சந்திக்கும் தனிநபரை முதல் பாடத்திலேயே மனமாற்றம் அடையச் செய்யும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில பாடத்திட்டங்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது பாடத்தில் மனமாற்றம் அடையச் செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில பாடத்திட்டங்கள் நான்காவது அல்லது அதிகமான பாடங்களில் மனமாற்றம் அடையச் செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனிநபர் ஊழியத்திலே பல ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் நான் ஒரு காரியத்தை கற்றிருக்கிறேன். அதென்னவென்றால், பொறுமையாயிருப்பதற்கு இணை எதுவுமில்லை என்பதுதான். தனிநபர் ஊழியம் ஒவ்வொரு நபரும் வித்தியாசமானவர் என்று போதிப்பதால் அவரவருக்கேற்றபடி நாம் பொறுமையோடு போதிக்க வேண்டும். நம்மால் சுவிசேஷத்தை மாற்ற முடியாது. ஆனால், நாம் யாருக்கு போதிக்கிறோமோ அவர்கள் தேவனுடைய வார்த்தையை தியானித்து, செய்தியைப் புரிந்து கொண்டு, கிறிஸ்தவராவதற்கு செல்லும் செலவை கணக்குப் பார்க்கும் வரை நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

பல வேளைகளில் தனிநபர் ஊழியத்தில் ஈடுபடுபவர்கள் ஞானஸ்நானம் கொடுப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்கள் யாருக்கு போதிக்கிறார்களோ அவர்கள் சுவிசேஷத்தை உள்வாங்கிக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிய நேரம் கொடுப்பதில்லை. இதன் காரணமாக ஞானஸ்நானம் பெற்று முதல் சில வருடங்களிலேயே புதிய கிறிஸ்தவர்கள் விழுந்து போவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். புதிதாக மனமாற்றமடைந்தவர்கள்

விழுந்து போவதற்கு மற்றுமொரு காரணமென்னவென்றால், சில சமயங்களில் சபை இவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதில்லை, இவர்களைக் கண்டு கொள்வதில்லை. புதிதாக மனமாற்றமடைந்தவர்களுக்கு முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களின் அன்பும், அரவணைப்பும், ஆதரவும் அவசியப்படுகிறது. அப்போதுதான் அவர்கள் தேவனுடைய விசேஷித்த குடும்பத்தில் ஓர் அங்கமாக உணர்வார்கள். அது கிடைக்காதபட்சத்தில் அவர்கள் இடறலடைந்து விழுந்துபோகிறார்கள்.

தனிநபர் ஊழியத்தில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதாக வாய்ப்பு உள்ளவர்களிடத்தில் விடாமுயற்சியுடன் இருந்து நம் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். நாம் யாருக்கு தேவனுடைய வார்த்தைகளைப் போதிக்கிறோமோ அவர்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளும்வரை நாம் பொறுமையோடு காத்திருக்க நம் மனதில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். ஆத்துமாக்கள் விலையேறப் பெற்றவைகள்! இவ்வுலகிலேயே உன்னதமான வேலையைச் செய்ய நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் – அந்த உன்னதமான வேலை ஆத்தும ஆதாயமே !

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென் ( மத்தேயு 28 : 19, 20 ). ✝

---

## தேவனுடைய வார்த்தை


- **உணர்வுகள் வரும், போகும்.**
- **ஆனால், உணர்வுகள் வஞ்சிக்கக் கூடியது.**
- **எனக்கான அதிகாரம் தேவவார்த்தை**
- **விசுவாசிப்பதற்கு வேறெதுவும் ஏற்றதல்ல**
- **ஆவியும், சரீரமும் முடிந்து போகுமட்டும்**
  **மாறாத தேவ வார்த்தையில் நான் நம்பிக்கை வைப்பேன்**

  எல்லாம் அழிந்து போனாலும் தேவவார்த்தை ஒருபோதும் அழியாது.

# அது அன்பற்றதாகும்...

## Thats Unloving...

Justin Hop Kins.



ஒருவர் ஏதாவது குற்றத்தில் அகப்பட்டால் அவரைக் குற்றப்படுத்துவது அன்பில்லாமையைக் காட்டுகிறது என்று சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர்களைக் குற்றப்படுத்துவதற்கு நாம் யார்? நம் வாழ்க்கையில் பாவமே இல்லையா? அப்படியிருக்கும்போது மற்றவர்கள் பாவத்தில் சிக்கிக்கொள்ளும்போது நாம் எப்படி அவர்களை குற்றப்படுத்த முடியும்? மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் என்று இயேசு கிறிஸ்து சொல்லவில்லையா? (மத்தேயு 7 : 1 ) என்று சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

அன்பில்லாமை என்றால் என்ன என்பதற்கான யூகம் தான் இது. ஒருவரை அன்பில்லாதவர் என்று குற்றப்படுத்துவது ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டாகும். ஏனென்றால், “அன்பில்லாதவன் தேவனை அறியான் “ ( I யோவான் 4 : 8 ) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய தன்மையில் அன்பாகவே இருக்கிறார். இதற்கு முந்தைய வசனத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் “ அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது ”. எனவே, ஒருவரை அன்பில்லாதவர் என்று சொல்வது அந்த நபர் தேவனோடு ஐக்கியத்தில் இல்லை என்று சொல்வதாகும். இது ஒருவரிடத்தில் அன்பாயிருப்பது என்றால் என்ன, அன்பில்லாமிலிருப்பது என்றால் என்ன என்னும் முக்கியமான விவாதத்திற்கு வழி வகுக்கிறது. அன்பை நாம் உண்மையாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அதற்கான விளக்கத்திற்கு நாம் தேவனிடமும், அவருடைய வார்த்தையிடமும் தான் திரும்ப வேண்டும்.

அன்பு தேவனிடத்திலிருந்து ஊற்றெடுத்து வருவதால் அன்புக்கு தேவன் கொடுக்கும் விளக்கத்திற்கு எதிரான விளக்கமும் சரியாயிருக்கிறது. எனவே, நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடத்தில் அன்பாயிருப்பது எப்படி என்பது பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று கேட்க வேண்டும்?

இப்பொழுதும் அம்மாளே நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டு மென்று, உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி உம்மை வேண்டிக்கொள்கிறேன். நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்து கொள்ள வேண்டிய கற்பனை இதுவே " ( II யோவான் 5,6 ). இங்கே யோவான் தேவன் அன்புக்கான விளக்கத்தை மட்டும் கொடுக்காமல் நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டுமென்று கட்டளையும் கொடுத்திருக்கிறார். எனவே, அன்பு கூராமலிருப்பது தேவனுடைய ஐக்கியத்திற்குப் புறம்பே இருப்பதையும், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமலிருப்பதையும் தான் குறிக்கிறது. தன்னைச் சுற்றிலும் அன்புகாட்டாத ஒருவர் பரலோகம் போவதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவே முடியாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " நாம் அவரிடத்தில் அன்பாயிருந்தால் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுவோம் " என்று சொல்கிறார் ( யோவான் 14 ; 15 ) வேறு விதமாகச் சொன்னால் நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைகொள்ளவில்லை யென்றால் நாம் அவரிடத்தில் அன்பாயில்லை என்று அர்த்தம்.

மற்றவர்கள் பாவத்தில் சிக்கிக்கொள்ளும்போது நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று வேதாகமம் சொல்கிறது? இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் அன்பு கூர வேண்டும் அல்லது அன்பு கூராமலிருக்க வேண்டும். சமநிலை வகிக்க முடியாது. கலாத்தியர் 6 ; 1 , 2 வசனங்கள் இவ்விதமாக நமக்குக் கட்டளையிடுகிறது " சகோதரரே ஒருவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். " எனவே, நான் அன்புள்ளவனாயிருந்தால் அன்பும் இரக்கமும் உடையவனாய் பாவத்தில் சிக்கிக்கொண்ட வர்களைப் போய் சந்தித்து கிறிஸ்துவுடன் சரியான உறவை அவர்கள் மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இதைச் செய்யத் தவறுவது கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றத் தவறுவதாகும். எனவே, நான் அன்பில்லாதவனாகிவிடுகிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் பாவத்தில் விழுந்த ஒரு சகோதரனிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளுகிற காரியத்தைப் பற்றி பேசும்போது, இவ்விதமாகப் பேசுகிறார். இந்த செயல்பாட்டை உலகத்திலிருக்கிற பெரும்பாலான மக்கள், அநேகமாக சபையிலும் கூட அன்பற்ற செயலாகப் பார்க்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் பிரமாணம் இதைப்பற்றி என்ன சொல்கிறது? I கொரிந்தியர் 5 : 5 ல் பவுல் பாவத்தில் விழுந்த சகோதரனிடமிருந்தோ அல்லது சகோதரியிடமிருந்தோ ஐக்கியத்தை விலக்கிக்கொள் வதற்கான நோக்கங்களில் ஒன்று அவர்களுடைய ஆத்துமாக்களை இரட்சிப்பது தான் என்று வெளிப்படையாக அறிவிக்கிறார்.

இதேவிதமாக பவுல் II தெசலோனிக்கேயர் 3 : 13 : 15 வசனங்களில் " சகோதரரே நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள். மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவரைக் குறித்துக் கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும், அவனை சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்தி சொல்லுங்கள் என்று சொல்கிறார். ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதென்று நிச்சயமாகவே, உறுதியான நோக் கத்துடன் எடுக்கப்படும் கடைசிகட்ட நடவடிக்கையாகும். இது பாவத்தின் விளைவுகளைக் குறித்து எச்சரிப்பதற்கும், அவர்கள் தங்களைத்தாமே சுயபரிசோதனை செய்து கொள் வதற்கும் அவர்களுக்கு கொடுக்கப்படும் நேரமாயிருக்கிறது. அவர்கள் மீண்டும் நீதியின் பாதைக்கு திரும்புவார்கள் என்றும் எதிர்பார்ப்புடன் தான் அவர்களிடமிருந்து ஐக்கியம் விலக்கிக் கொள்ளப்படுகிறது. மேலும், இந்த நடவடிக்கை இழிவான நோக்கத்திற்காக எடுக்கப்படுவதில்லை, ஆனால் அன்புடனும், துக்கத்துடனும் அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று உற்சாகப்படுத்தி அவர்கள் பழைய நிலைக்கு திரும்பும் ஒவ்வொரு திருப்பத்திலும் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதைக்குறித்து நின்று ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்க்கும்போது, பாவத்தை கண்டு கொள்ளாமலிருப்பது எப்படி அன்பு கூருவதாகும் ? பாவத்தில் விழுந்தவர்களோடு உங்கள் உறவு வரவு, அந்த உறவினால் உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள் சேதமடையாமல் இருக்கும். அது சரிதான். ஆனால், பாவியினுடைய நிலைமை? அவர்கள் நித்தியத்தை நோக்கி வேகமாக கடந்து போய் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலுமிருப்பவர்கள் அவர்கள் மீது அக்கறையில்லாமல், அதைத் தடுக்காமல் இருந்தால் என்ன நடக்கும் ? ஒருவர் தன்னுடைய வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சி, பார்த்துக் கொண்டிருக்கும்போது தீப்பற்றிக் கொண்டால் என்ன ஆனாலும் சரி, அந்த நபரை எப்படியாவது காப்பாற்ற முயற்சிப்போம். அந்த நபரை

அப்படியே தீயில் விட்டுவிடுவது அவர் மீது அன்பு காட்டுவதாகப் பொருள்படுமா? நாம் சுவிசேஷத்தை கையில் வைத்துக் கொண்டு நித்திய அக்கினியில் எரிய விடுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் ?

பாவிகளை எதிர்கொள்வது அசௌகரியமாக இருக்கிறதா ? அது உறவில் விரிசலை ஏற்படுத்துகிறதா? சில வேளைகளில் கோபம் அவமானம், துக்கம், போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகிறதா ? ஆனால், அதிக முக்கியமல்லாத தற்காலிகமான அந்த உணர்வுகளை யெல்லாம் ஒரு ஓரமாக வைத்து விட்டு, ஓர் ஆத்துமாவை இரட்சிக்கப் பாடுபடுவதுதானே அன்பின் உச்சகட்ட நிலையாக இருக்கும்? ஆகவே, அடுத்த முறை பாவத்தில் விழுந்துபோன ஓர் ஆத்துமாவை நீங்கள் எதிர்கொண்டால் வாய்ப்பு இருக்கும்போதே அவரைப்போய் சந்தித்து கிறிஸ்துவின் பிரமாணத்தை வெளிப்படுத்தி அவருக்கு உதவி செய்யுங்கள் !

# சபையைக் கட்டுவதற்கான ஒரு வழிகாட்டி

நெகேமியா நூலில், எருசலேமின் அலங்கம் திரும்பக் கட்டுப் படுவதில் இஸ்ரவேலர்கள் எப்படி வேலை செய்தார்கள் என்று படிக்க முடியும். அவர்கள் கைக் கொண்ட வழிமுறைகளைப் பின்பற்றினால், இந்நாட்களில் கர்த்தருடைய சபைகள் கட்டப்படுவதற்கு அவைகள் உதவியாயிருக்கும்.

ஆகவே, அவர்கள் செய்ததை கவனிப்போம்.

- அவர்கள் ஜெபித்தார்கள்.
- அவர்கள் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தினார்கள்.
- அவர்கள் குறை சொல்பவர்களைக், கண்டு கொள்ளாதவர்கள்
- அவர்கள் ஒவ்வொருவரையும் வேலையில் ஈடுபடுத்தினார்கள்.
- அவர்கள் கவனம் சிதறாமல் வேலையில் மாத்திரம் சிந்தை வைத்தார்கள்.
- அவர்கள் தேவன் தங்களோடிருக்க, தங்களுக்காக வேலை செய்கிறார் என்பதை நினைவில் கொண்டார்கள்.

# ஜீவ அப்பம்

## The Bread Of Life

Mike Freland

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு படகில் ஏறி கடலின் அக்கரைக்குச் சென்றார். ஜனங்கள் அவர் இல்லாததைக் கண்டு அவர்களும் ஒரு படகில் ஏறி இயேசுவைக் காணும்படி கடலின் அக்கரைக்குப் போனார்கள். அவர்கள் அங்கே அவரைக் கண்டபோது " ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் ? என்று கேட்டார்கள். ஏன் ஒருவரும் " ரபீ, நீர் எப்படி இவ்விடம் வந்தீர் ? என்று கேட்கவில்லை.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: " நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் " என்று சொன்னபோது அவர்களால் மறுப்பு தெரிவிக்க முடியவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களில் பெரும்பாலானோர் அவரை சரீரப் பிரகாரமான இரட்சகராகத்தான் பார்த்தார்கள். ரோமர்களிடமிருந்து கிறிஸ்து தங்களை இரட்சிப்பார் என்று மட்டும் அவர்கள் கனவு காணவில்லை. கிறிஸ்து தங்களுடைய தலைவராக இருப்பதால் தங்கள் வாழ்வில் செழிப்பு பெருகும் என்று நினைத்தார்கள். ஆனால், இயேசு அவர்களுடைய ராஜாவாயிருக்க விரும்பவில்லை என்பதை அறிந்தவுடனே அவர்கள் அதைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அவர்கள் சோர்ந்து போகவில்லை. எனவேதான், அவர்கள் அவரைப் பார்த்து **தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்** என்றார்கள்.

அந்த ஜனங்கள் வாழ்க்கையில் எது முக்கியமானது என்பதை புரிந்து கொள்வதில் அவர்கள் குழம்பிப்போய் இருந்தார்கள். இது செய்வதற்கு எளிதான ஒரு தவறுதான். இதை நாம் வாழ்க்கையில் எல்லாக் கட்டத்திலும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இன்று பலர் பெருந்தொகையையும், நேரத்தையும், ஆற்றலையும், உணர்வுகளையும் தவறான காரியங்களில் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருபோதும்

திருப்திபடுத்த முடியாத காரியங்களுக்காக தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே இயேசு கிறிஸ்து சொல்வதை சரியாகப் புரிந்து கொள்ளுங்கள் : மெய்யான ஆகாரம் நம் கிரியைகளினால் கிடைப்பதில்லை. ஆனால், அது தேவனிடத்திலிருந்து ஈவாக நமக்குக் கிடைக்கிறது. கடின உழைப்பினால் பிரயோஜனமில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளக் கடினமாயிருக்கிறது. நாம் கடினமாக உழைத்தால், நம்மால் முடிந்தவரை சிறந்தவைகளைச் செய்தால் இலக்கை அடைந்துவிடலாம் என்று நினைக்கிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து உங்களுக்கு என்ன தேவையோ அதைத் தேவன் ஈவாகத் தருகிறார் என்று சொல்கிறார். உண்மையில், இது மனிதனிடமிருந்து ஆரம்பமாகிற கிரியையே அல்ல. இது தேவனுடைய கிரியையாயிருக்கிறது. தேவன் தருகிற ஆகாரத்தை நம்மால் சம்பாதிக்கவே முடியாது. அதை பெற்றுக்கொள்ளத்தான் முடியும்.

நம்முடைய கடின உழைப்பிலிருந்து வரும் காரியங்கள் எப்போதும் அதன் மதிப்பை இழந்து விடுவதை, அழிந்து போவதை கெட்டுபோவதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? அவைகளால் ஒருபோதும் நம்மை திருப்திபடுத்தவே முடியாது. ஆனால், ஆத்துமாவைப் பொறுத்தவரை தேவன் எவைகளைக் கொடுக்கிறாரோ அதுதான் மதிப்பில் உயருகிறது. வேதாகமம் திரும்பத் திரும்ப நூற்றுக்கும் அதிகமான விதங்களில் தேவனுடைய ஈவுகள் என்றென்றும் நிலைத்திருக்கிறது, இவ்வுலகத்தின் காரியங்களோ ஒழிந்துபோம் என்று சொல்கிறது.

ஜனங்களுக்கு ஓர் ஆழமான பசி இருக்கிறது. அது வாழ்க்கையின் அர்த்தம் மற்றும் நோக்கத்தை அறிந்து கொள்வதற்கான பசியாயிருக்கிறது. மகிழ்ச்சி மற்றும் சமாதானம் வயிறு நிறைய ஆகாரம், வசதியான வீடு போன்றவற்றை அடைவதைத் தாண்டி ஆழமான காரியங்களுக்காக மக்கள் பசியாயிருப்பதை இயேசு கிறிஸ்து அறிந்திருக்கிறார்.

நாம் புசிக்கும் அப்பத்தைத் தாண்டி நம் வாழ்க்கைக்கு ஏதோ அவசியமாகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது தேவனுடைய ஈவாகிய ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்துவை நாம் சொந்தமாக்கிக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறோம்.

✞

செயலில் கிறிஸ்தவம்

# ஆத்துமாக்களைக் குறித்து சிந்தியுங்கள்

# THINK SOULS

Leah Hopkins

**நா**ன் ஒரு நாள் பரபரப்பான அலுவலகத்தில் கூட்ட நெரிசலில் நின்று கொண்டிருந்தேன். அந்த அலுவலகத்தில் குட்டி குட்டி அறைகள் தெரிந்தன. அதிலிருந்து தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த சத்தங்களையும் கம்ப்யூட்டரில் டைப் செய்த சத்தங் களையும் என்னால் கேட்க முடிந்தது. அப்போது பத்தொன்பது அல்லது இருபது வயது மதிக்கத்தக்க ஒருவன் என்னை இடித்துக்கொண்டு அந்த கணினி அருகே சென்றான். அவன் கண்களில் ஒருவிதமான பயம் காணப் பட்டது. அவன் மெல்லிய சத்தத்துடன் மன்னிப்பு கேட்டு விட்டு மறுபடியும் அதே வரிசையில் நின்று கொண்டிருந்தான். காட்டு மிராண்டி என்று அவனை மனதில் திட்டித் தீர்த்துக்கொண்டேன். " அவன் கேட்ட மன்னிப்பு கூட பணிவானதாயிருக்க வில்லை. நான் அவனை முதலாளியிடம் புகார் செய்ய வேண்டுமென்று மனதில் எண்ணினேன்.

அதன் பிறகு புதன்கிழமை இரவு வேதபாட வகுப்பு வந்தது. கடைசி ஜெபம் முடிந்த பிறகு, உதவிக்காரர் ஒருவரிடம் காரியங்களைப் பேசுவதற்கு வந்திருந்த கூட்டத்தை எண்ணினேன். அப்போது அலுவலகத்தில் கண்ட அந்த வாலிபனை நான் கண்டேன். அதன்பிறகுதான் அந்த வாலிபனுக்கு சில வருடங்களுக்கு முன்பு கார் விபத்து ஏற்பட்டு மூளை செயலிழந்து போனது என்பதை அறிந்தேன். அவன் ஓர் அருமையான வாலிபன்தான் ஏனென்றால், இவனைப் போல சரீர பெலவீனத்தில் உள்ளவர்கள் வேதபாட வகுப்புகளுக்கெல்லாம் வருவதில் லையே. அவனும் என்னை உற்றுப் பார்த்தான். ஆனால், நான் அவனிடம் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் வெளியில் சென்றாலும் சரி, வீட்டில் இருந்து கொண்டு ஆட்களை வரவேற்றாலும் சரி மேற்கண்ட அனுபவங்கள் உங்களுக்கு கிடைக்கும். நாம் வேலையில் இருந்தால் நம்மோடு

வேலை செய்பவர் நம் உணர்வுகளைத் தூண்டி நம்மை எரிச்சலடையச் செய்வார். நம்முடைய வேலை ஆக வேண்டு மென்பதற்காக நாம் வரிசையில் நிற்க வேண்டியதாயிருக்கும். சிலர் நாம் வாகனம் நிறுத்தும் இடத்தை அபகரித்துக் கொள்வார்கள். சிலர் நம்முடைய பொறுமையை இழக்கச் செய்து விடுகிறார்கள். இவைகளெல்லாம் வாடிக்கையாகி விடுகின்றன.

மேற்சொல்லப்பட்ட காரியங்க ளெலல்லாம் இந்த ஒழுக்கங்கெட்ட சமுதாயத்தில் சகஜமான ஒன்றுதான். ஆனால், வேதாகமத்தில் சிலருடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடபடிபோது அது நமக்கும் பாடமாக அமைகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 24 ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவருடைய இடத்தில் நீங்கள் உங்களை வைத்துப் பாருங்கள். அவர் மிகவும் களைப் படைந்து இருக்கிறார், சமீபத்தில் தான் அவருடைய உயிரை எடுக்க சதி நடந்தது, ஆனால், தேவனுடைய கிருபையால் அவர் தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவனிடத்தில் கொண்டு வரப்பட்டார். அங்கே பவுல்மேல் குற்றஞ்சாட்டு கிறவர்கள் வந்திருக்கும்போது அவன் தன் காரியத்தை திட்டமாய்க் கேட்பதாகச் சொல்லப் பட்டது. (அப்போஸ்தலர் 23:33 – 35) ஐந்து நாளைக்கு பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியவானோடும் கூடப் போனான், அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணினார்கள். யூதர்களுடைய மனதில் ரோமாபுரிக்கு எதிராக பகைமை உணர்வு இருந்து கொண்டே இருந்தது. ரோம அரசாங்கத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தவர்களிடத்திலும் அவர்கள் வெறுப்பாயிருந்தார்கள். ரோம அரசாங்கத்தில் வரிவசூலிப்பவர்களாக இருந்தாலும் சரி, தலைமைப் பொறுப்பிலிருந்தவர்களாக இருந்தாலும் சரி யூதர்கள் அவர்களை மதிக்கா மலிருந்தார்கள். இருந்தபோதிலும் இந்த விஷயத்தில் அவர்கள் பேலிக்சுக்கு மரியாதைக் கொடுத்தார்கள்.

பவுலுக்கு விரோதமாக ஏராளமான குற்றஞ்சாட்டுகள் எழுந்தன. அது மாத்திர மல்ல தெர்த்துல்லு தேசாதிபதியாக பேலிக்ஸிடம் “ இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்து கொள்ளலாம் என்றான். செய்யாத குற்றங்களுக்காக நிச்சயமாக நம்மில் ஒருவரும் இத்தனை அவமானங்களை சகித்திருக்க மாட்டோம்.

இங்கே பவுல் மிகவும்

பொறுமையோடிருந்து, ஜாக்கிரதையாக தன்னுடைய வார்த்தைகளைப் பயன்படுத்தினார். இங்கே பவுல் ஜாக்கிரதையாக பதிலளித்தது பின்னாளில் பேலிக்ஸ் மற்றும் அவனுடைய மனைவி கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. (அப்போஸ்தலர் 24 : 24, 25 ). இங்கே பவுல் நம்மால் செய்ய முடியாத காரியம் எதையும் செய்யவில்லை. இதற்கு பயிற்சி அவசியம், நமக்கு புதிய மனநிலை தேவை. எது முக்கியமானவை என்று நமக்கு நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். பவுலின் இடத்தில் வேறொருவரை வைத்துப் பார்ப்பதா அல்லது அது தேவனுடைய கிருபை என்று சுட்டிக் காட்டுவதா ?

மறுபடியும் நான் அலுவலகத்தில் சந்தித்த அந்த வாலிபனிடத்தில் வருகிறேன். அந்த வாலிபன் வேலைப் பளுவினால் வேலையைச் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று அவசரத்தில் என்னை இடித்துத் தள்ளினான். அங்கே சூழ்நிலை அவன் மனைவி கர்ப்பமாயிருந்தாள். செலவுகள் குறித்து அந்த வாலிபன் அதிகமாக சிந்தித்து அவன் மனச்சோர்வுடன் காணப்பட்டபடியால் அன்றைய தினம் அவன் என்னிடம் மோசமாக நடந்து கொண்டான் என்று நினைக்கிறேன். அல்லது அவனுக்கு மனிதர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவனுக்கு நல்ல பழக்க வழக்கங்களை யாரும் சொல்லிக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். சூழ்நிலை எதுவாக இருந்தாலும் சரி, அவனுக்கு ஆத்துமா இருக்கிறது. அந்த ஆத்துமாவுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே. மனநிலை பாதிக்கப்பட்டதால் உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஒருவர் மற்றவர்களைப்போல் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டுமென்று தான் விரும்புவார். கிறிஸ்து அவர்களுக்காகவும் மரித்தாரே. இயேசு கிறிஸ்து அவர்களைப் புறக்கணிப்பாரா ?

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது இவ்வுலகத்தை எப்படிப் பார்த்தாரோ அப்படி நாம் பார்க்கிறோமா? ' அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி " (மத்தேயு 9 : 36 ) என்று நாம் வாசிக்கிறோம். இவ்வுலகில் எழுநூறு கோடிக்கும் அதிகமானோர் வாழ்கிறார்கள். ஒவ்வொருவரும் நம் பரமப்பிதாவுக்கு முக்கியமானவர்கள், ஒவ்வொவருக்காகவும் அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரிக்கும்படி இவ்வுலகத்திற்கு

அனுப்பினார். நம் கண்களுக்கு முன்னால் இருக்கும் ஆத்துமாக்களை நாம் கண்டுகொள்ளாமலிருந்தால் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள நமக்கு என்ன உரிமை இருக்கிறது? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " எருசலேமைப் பார்த்து " **எருசலேமே, எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனமில்லாமற் போயிற்று** " என்று தம்முடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல் போன இஸ்ரவேலர்களைப் பார்த்து வேதனையுடன் சொன்னார். (மத்தேயு 23 : 37) அதுபோல் தம்மை கொலை செய்தவர்களையும் மன்னிக்கும்படி பிதாவினிடத்தில் வேண்டிக் கொண்டதையும் நினைத்துப் பாருங்கள். (லூக்கா 23 : 34).

பிரியமானவர்களே நம் கண்களுக்கு முன்னால் இருக்கும் ஆத்துமாக்களைக்குறித்து நாம் அக்கறைப்படவேண்டும். இல்லையென்றால், தேவன் நம்மைக் குறித்து அக்கறைப்படுவார் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

✝

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது?

1. குடும்பத்தில் - அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும்
2. வியாபாரத்தில் - நேர்மையினாலும், கவனத்தாலும்
3. சமுதாயத்தில் - தயவாலும், தாழ்மையினாலும்
4. பாதிக்கப்பட்டவர்களிடத்தில் - கருணையாலும், இரக்கத்தாலும்
5. பெலவீனர்களிடத்தில் - பொறுமையினாலும், உதவியினாலும்
6. துன்மார்க்கரிடத்தில் - நிதானத்தாலும், தீமையை வெல்லுவதாலும்
7. தேவனிடத்தில் - அன்பாலும், கீழ்ப்படிதலினாலும், பயபக்தியாலும்

# நான் யார் ?
# Who Am I ?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். என் பெயரை நீங்கள் முதல் குறிப்பிலேயே புரிந்து விட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துவிடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்கு பிறகு நான் யாரென்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையாகச் சரிபார்க்க வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. என் தகப்பன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகால்
2. நான் இஸ்ரவேலில் தேவனுடைய தீர்க்கதரிசிகளில் பலரைக் கொன்றேன்.
3. நான் நூற்றுக்கணக்கான பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு ஆகாரங்கொடுத்தேன்.
4. நான் என் கனவனை தேவனை விட்டுத்திரும்பி விக்கிரகங்களை ஆராதிக்க உற்சாகப்படுத்தினேன்.
5. ஒரு மனிதன் தன் திராட்சத் தோட்டத்தை என் கணவனுக்கு விற்க மறுத்தபோது அவன் மீது தவறான குற்றஞ்சாட்டி அவன் சாவுக்கு காரணமானேன்.
6. என் பெயர் பெரும்பாலும் துன்மார்க்கத்தோடு சம்மந்தப்படுகிறது.
7. தேவன் எலியாவிடம், நாய்கள் என்னை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும் என்று சொல்லியிருந்தார்.
8. யெகூ கேட்டுக்கொண்டபடியே அவனுடைய வேலைக்காரர்கள் என்னை ஜன்னல் வழியாய்த் தூக்கி எறிந்த போது நான் மரித்தேன்.
9. என்னை அடக்கம் பண்ண யெகூ ஆட்களை அனுப்பிய போது நாய்கள் ஏற்கனவே என்னைத் தின்று போட்டன.
10. என் கணவன் ஆகாப் ராஜா.

# பாடிக் கீர்த்தனம் பண்ணி

## Singing and making melody

T. Pierce Brown



எபேசியர் 5 : 19 - 21 வசனங்கள் ஆராதனையில் இசை பயன்படுத்துவது பற்றி குறிப்பாகப் பேசவில்லையென்றாலும் கூட, இவ்வசனப்பகுதியை நாம் கவனிப்பது நன்மையாயிருக்கும். பதினெட்டாம் வசனத்தில், ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்கிற கட்டளையைப் பார்க்கிறோம். இந்த வசனம் நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறது. ஆனால் 19 - 21 வசனங்கள் நாம் அதை எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்கிறது. இந்த வசனப்பகுதில் இசை வலியுறுத்தப்படுகிறது. ஆயினும், அந்த இனிமையான இசை இருதயத்திலிருந்து வரவேண்டும்.

பழைய ஏற்பாட்டின் கீழ் ஆராதனையில் பாடலும், இசைக்கருவிகளை வாசித்தலும் தனித்தனியாக அல்லது வேறு வேறாகத்தான் கையாளப்பட்டிருக்கின்றன. ஒன்றை பயன்படுத்துவது மற்றொன்றால் அங்கீகரிக்கப்படுவதில்லை ( II நாளாகமம் 29 : 27, 28 ) தாவீது ராஜாவின் காலத்திற்கு முன்பு தேவனை ஆராதிப்பதற்கு இசைக்கருவிகள் பயன்படுத்தப்படவில்லை. இப்புதுமையை தாவீது ராஜா தான் ஆராதனையில் அறிமுகப்படுத்தினார். ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிக்கப்படுவது அறிமுகப்படுத்தபட்டதை தேவன் அங்கீகரித்தார் என்று வேதவாக்கியங்களிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், பின்பு அது தேவனால் கட்டளையிடப்பட்டது ( II நாளாகமம் 29 : 25 ). தேவன் சிலவற்றை கட்டளையிட்டாலும் கூட, அது தேவனால் அங்கீகரிக்கப்படவேண்டிய அவசிய

மில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் பூமிக்குரிய ராஜா வேண்டுமென்று ஆசைப்பட்டபோது, அங்கே தேவன் அவர்களுக்கு ராஜாவைக் கட்டளையிட்டார். ஆனால், அவர் ராஜாவை அங்கீகரிக்கவில்லை. இஸ்ரவேலுக்கு தண்டனையாக தேவன் அவர்களுக்கு ராஜாவைக் கொடுத்தார். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி : ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வ தெல்லாவற்றிலும் அவர்கள் சொல்வதைக் கேள். அவர்கள் உன்னைத்தள்ள வில்லை.நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத் தான் தள்ளினார்கள், நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின நாள் முதல் இந்நாள் மட்டும் அவர்கள் என்னைவிட்டு, வேறே தேவர்களைச் சேவித்து வந்த தங்கள் எல்லாச் செய்கை களின்படியும் செய்ததுபோல அவர்கள் உனக்கும் செய்கிறார்கள் ( I சாமு 8 : 7 – 9).

பழைய ஏற்பாட்டு தேவாலய ஆராதனையில் இசைக்கருவிகள் முக்கிய பங்கு வகித்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டதாக வேதவாக்கியங்களில்லை, உலக சரித்திர தகவல்களுமில்லை. இக்காலக்கட்டத்தில் சபையில் பயன்படுத்தப்பட்ட இசை பாடலாக மட்டுமே இருந்திருக்கிறது. இது ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கையாக இருந்திருக்கிறது. அதாவது, நாம் பாடவேண்டுமென்றாலும் கூட நாம் விரும்பியதையெல்லாம் பாடமுடியாது! நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுகளையும் தான் பாடவேண்டும். இன்று கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிக்கவேண்டுமென்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. அதன் பயன்பாட்டை நெறிப்படுத்த வழிமுறைகளும் கொடுக்கப்படவில்லை.

பழைய ஏற்பாட்டு முறைமையில் இரட்சிப்பு உண்டாகவில்லை என்பது தெளி வாகிறது. மனித இனத்துக்கு இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தான் கொண்டு வந்தது. பழைய ஏற்பாட்டின் தேவாலய ஆராதனை, மிருகபலிகள், உயிரில்லாத வாத்தி யங்களை வாசித்தல், தூபங்காட்டுதல் போன்ற சரீரப்பிரகாரமான காரியங்களை புதிய ஏற்பாட்டு ஆராதனை முறைமையோடு ஒப்பிட முடியும். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் ( II கொரிந்தியர் 6 : 16 ). இனிமையான இசை இதயத்திலிருந்து இயக்கப்படுகிறது ( எபேசியர் 5 : 19 ). உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலிகள் தேவனுக்கு ஏறெடுக்கப்படுகிறது ( எபிரெயர் 13 : 15 ). கிறிஸ்தவ இசை பழைய ஏற்பாட்டு உயிரில்லாத வாத்தியங்களில் இல்லை. மாறாக, தேவனுடைய ஆலயமாயிருக்கிற ஜீவனுள்ள இருதயங்களில் இருக்கிறது. ✝

# கர்த்தருடைய பணத்தைக் கையாளுதல்

# Taking Care Of The Lord's Money

Royce Frederick

**ப**வுல் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருந்தார். நம்பத்தகுந்தவர்களின் வரிசையில் பவுல் நிச்சயமாக முதலிடத்தைப் பிடிப்பார்.

ஓர் அப்போஸ்தலன்கூட சோதனைக்குட்பட முடியும் என்பதை பவுல் அறிந்திருந்தார். ஏனென்றால், ஏற்கனவே யூதாஸ்காரியோத்து பேராசையால் பாவத்தில் விழுந்து விட்டான்: ...அவன் திருடனானபடியினாலும் பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் " பேராசையால் பாவத்தில் விழுந்து போனான் " (யோவான் 12 : 4-6: மத்தேயு 26 : 114 – 16).

அப்போஸ்தலனாகிய பவுல் பேராசை உட்பட எல்லாவகையான பாவங்களிலிருந்தும் தன்னை விலக்கிக் காத்துக்கொள்ள மிகவும் கவனமாக இருந்தார் : மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்றார் ( I கொரிந்தியர் 9 : 27 ). பவுல் குறிப்பாக கர்த்தருடைய பணத்தைக் கையாளுகிற காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவராக இருந்தார். இரண்டு சந்தர்ப்பங்களில், கர்த்தருடைய வேலைக்காக பெருந்தொகையை கொடுக்கிற நிகழ்வில் கலந்து கொண்டார், இரண்டு சந்தர்ப்பங்களிலும், மற்றவர்களோடு அவர் இணைந்து வேலை செய்தார்.

முதல் சம்பவம் அப்போஸ்தலர் 11 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது " அந் நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்: அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணம்

சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்.

அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் ( அப்போஸ்தவர் 11 : 27-30 ). இங்கே முப்பதாம் வசனத்தில் பணம் சேகரிக்கப்பட்டு இரண்டு சகோதரர்களிடத்திலே கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை மூப்பர்களிடத்தில் ஒப்படைத்தார்கள். இந்த மூப்பர்கள் எருசலேம் சபையின் மூப்பர்களாக இருந்தார்கள். (அப்போஸ்தவர் 15 : ச; 21 ; 17,18).

பின்பு, ஒரு சமயம் பவுல் எருசலேமிலிருந்த ஏழை கிறிஸ்தவர்களுக்கு தர்மபணத்தை சேகரித்த போது, தனக்குப் பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை கையாளுகிற காரியத்தில் வேறு சிலர் தங்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார். " சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரனை அவனோடே கூட அனுப்பியிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, கர்த்தருக்கு மகிமையுண்டாகவும், உங்கள் மன விருப்பம் விளங்கவும் எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் கொண்டுபோகையில் எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி அவன் சபைகளில் தெரிந்து ஏற்படுத்தப் பட்டவனாயும் இருக்கிறான். எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கை யாயிருந்து கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம். (II கொரிந்தியர்: 18, 21 ).

சபைக் காணிக்கை என்பது பிரசங்கியாருடையதோ அல்லது சபை முன்னோடிகளுடையதோ அல்ல. கர்த்தருடைய பணம் கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமாகக் கையாளப்பட வேண்டும் (II கொரி 8 : 21) நாம் நேர்மையாக பணத்தைக் கையாண்டால், கர்த்தர் அதைப் பார்ப்பார். ஏனென்றால், அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார். அது மாத்திரமல்ல, நாம் பணத்தை நேர்மையாகக் கையாளுகிறோம் என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் வெளிப்படையாகத் தெரிய வேண்டும்.

பிராந்திய சபையின் காணிக்கை சரியாகக் கையாளப்பட சில ஆலோசனைகள் ;

1. ஞாயிறு ஆராதனை முடிந்த பிறகு காணிக்கைப் பணத்தை எண்ணுவதற்கு நம்பகமான கிறிஸ்தவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். சுழற்சி முறையில் பல விசுவாசிகள் இதில் பங்கெடுப்பது நல்லது.

2. காணிக்கைப் பணத்தைக் குறித்த கணக்குகளை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

3. காணிக்கை பணத்தை வங்கிக் கணக்கில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விசுவாசிகளுடைய பெயர்களோடு இணைந்து சேமிக்க வேண்டும்.

4. காணிக்கையை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் என்று சபை அங்கத்தினர் களிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

5. காணிக்கை எப்படி செலவழிக்கப்பட்டது என்பதைக்குறித்த கணக்கு ஒழுங்காக பராமரிக்கப்பட வேண்டும்.

6. காணிக்கை எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதை அங்கத்தினர்களிடம் அறிவித்து விட்டு, அவர்களை கணக்கு வழக்குகளை எந்நேரத்திலும் ஆராய அனுமதிக்க வேண்டும்.

கர்த்தருடைய பணத்தைக் கையாளுகிற காரியத்தில் நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்மிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட காணிக்கைப் பணத்தை நாம் தவறாகப் பயன்படுத்தினால் நாம் நமக்கும் நம் குடும்பத்திற்கும், கர்த்தருடைய சபைக்கும் பெரிய அவமானத்தை ஏற்படுத்திவிடுவோம்.

இளம் பிரசங்கியாராகிய தீமோத்தேயுவை அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எச்சரித்தார். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக்கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது, சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவ குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே " இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு " ( I தீமோத்தேயு 6: 9-11).

" திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப் படத்தக்கது. பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம் " (நீதி மொழிகள் 22 : 1).

# கர்த்தருடைய பந்தி

## The Lords Supper

### Ardron Hinton

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு : நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னை தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவன். கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அதியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (I கொரிந்தியர் 11: 23 – 30).

**நமக்கான செய்தி**

I. நமக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும். மேலும், பவுலைப்போல நாம் பெற்றுக்கொண்டதை மாற்றாமல், கூட்டாமல் அப்படியே மற்றவர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

II. இங்கே பந்தியை அனுசரிப்பது என்பது அனுசரிக்கலாம், அனுசரிக்காமலுமிருக்கலாம் என்பது போன்றதல்ல. இதைச் செய்யுங்கள் என்று கட்டளைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டளைக்கு நாம் உண்மையாகக் கீழ்ப்படிய நல்ல

காரணங்கள் ஏராளம் உண்டு.

III. கிறிஸ்து நாம் அனுசரிக்கும்படியாகக் கொடுத்த கட்டளை மிகவும் எளிதானது. இதற்கு விசேஷித்த ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை. பெரிய அளவிலான சடங்காச்சாரமோ அல்லது ஆசாரிய நிர்வாக முறையோ தேவை இல்லை.

IV. பந்தி அனுசரிப்பு முறை பெரும்பாலும் ஆவிக்குரியதாயிருக்கிறது. ஏனென்றால், ஒருவர் பந்தியில் கையிடும்போது பெரும்பாலான காரியங்கள் அவருடைய இருதயத்திலும், மனதிலும் தான் நடக்கிறது.

V. பந்தி வாரந்தோறும் தொடர்ச்சியாக அனுசரிக்கப்பட வேண்டும். ஏனென்றால், இது நம் ஆவிக்குரிய தேவைகளையும், தெய்வீக நோக்கத்தையும் நிறைவேற்றுகிறதாய் இருக்கிறது. இது ஒரு சடங்காச்சாரமல்ல.

VI. பந்தியை அலட்சியப்படுத்துவது ஆவிக்குரிய பிரகாரமாக ஆபத்தை விளைவிக்கும், அதேபோல் அஜாக்கிரதையாக சிந்தனையின்றி இதில் பங்கெடுப்பதும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**பந்தியில் பங்குபெறும்போது மனதில் பதிக்க வேண்டிய காரியங்கள் வெளிப் படையாகவே கொடுக்கப்பட்டுள்ளன.**

A. இது நம் மனதில் பதிந்திருக்கும் கிறிஸ்துவின் தியாகப் பூர்வமான மரணத்தை நினைவுகூருவதாகும்.

B. இது நம்மைச் சுற்றிலுமிருக்கும் அவிசுவாசமான உலகிற்கு கிறிஸ்துவின் பேரிலுள்ள நம் விசுவாசத்தை வெளிப்படுத்துவதாகும்.

C. இது கிறிஸ்துவின் மரணத்தையும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அவருடைய இரண்டாம் வருகையையும் இணைக்கும் விசுவாசப் பாலமாகும்.

D. இது தகுதியில்லாத பாவிகளை இரட்சிப்பதற்காக பொழியப்பட்ட அவருடைய கிருபையை நினைவுபடுத்துவதாகும்

E. இது அவருடைய அன்பைக்குறித்து ஆழ்ந்து சிந்திப்பதற்கு கிறிஸ்தவ ஜனங்களின் ஒன்றுகூடலாகும்.

✝

## போவதா அல்லது போகாமலிருப்பதா : அதுதான் கேள்வியாயிருக்கிறது:

## To Go Or Not To Go : That Is The Question

Jerry A. Jenkins.

சிலர் ஆராதனைக்கு ஒழுங்காகப் போவதில்லை. ஆனால், சிலர் சபைகூடுமிடத்தின் கதவு திறக்கப்பட்டதும் குடும்பமாக அங்கே இருப்பார்கள். எதற்காக இவர்கள் ஆராதனையில் பங்குபெறுகிறார்கள்?

1. சபைகூடுமிடத்தில் இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்று அவர்கள் விசுவாசிக்கிறபடியால் அங்கே இருக்கிறார்கள்! இயேசு கிறிஸ்து ஒருமுறை இவ்விதமாகச் சொன்னார். "ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் " ( மத்தேயு 18 : 20 ). இயேசு கிறிஸ்து எப்பொழுதுமே எல்லா கிறிஸ்தவர்களுடனும் இருக்கிறார். ( மத்தேயு 28 : 18 – 20 ). இருந்தபோதிலும், நாம் முயற்சி எடுத்து ஆராதனையில் கலந்து கொள்ளும் போது அவர் விசேஷித்த விதமாக நம்மோடு இருக்கிறார். அவரோடு நெருக்கமாக இருக்க விரும்பும் ஒருவரால் ஆராதனையில் கலந்து கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்?

2. அவர்கள் தேவன் தங்கள் வாழ்க்கையில் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி செலுத்தும் விதமாக தங்களுக்கு தேவனிடத்திலுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். தேவனுடைய தொடர் பராமரிப்பு, பாதுகாப்பு, கடினமான காலகட்டங்களில் அவருடைய வழிநடத்துதல் மற்றும் அவருடைய தியாகம் போன்றவைகள் நம் இருதயங்களில் நன்றியுணர்வை உண்டாக்கி ஆராதனையில் அவரை கனப்படுத்துவதன் மூலமாக அதை வெளிப்படுத்த தூண்ட வேண்டும்.

3. கிறிஸ்தவர்களுக்கு சக விசுவாசிகளின் ஊக்கம் அவசியமாகும். அத்தகைய அவசியம் உங்கள் வாழ்வில் இன்னும் வரவில்லையென்றால், சற்று பொறுமையாயிருங்கள், அது வந்து கொண்டே இருக்கிறது. எபிரேய ஆசிரியர் அன்புக்கும் நற்கிரிகைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் நாம் கவனிக்க வேண்டுமென்று

வலியுறுத்துகிறார் ( எபிரெயர் 10 : 24 ) அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் வார்த்தையாலும் செயலாலும் பெலவீனமானவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள், பெலப்படுத்துகிறார்கள். விசுவாசிகள் சபை கூடிவருவதை தவிர்க்கும்போது அது பெலவீனமான கிறிஸ்தவர்களை காயப்படுத்தும். பெலவீனமானவர்களுக்கு புன்னகையும், உற்சாகமும் அவசியமாகிறது.

4. உண்மையுள்ள, அக்கறையுள்ள கிறிஸ்தவர்கள் தங்களைப் போன்ற குணாதிசயங்களை உடைய மற்ற கிறிஸ்தவர்களோடு சபை கூடும்போது அது மிகச்சிறந்த முன் உதாரணத்தை மற்றவர்களுக்கு முன்பாக வைக்கிறது. கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்திற்கு உப்பாயிருக்கிறார்கள். வெளிச்சமாயிருக்கிறார்கள் ( மத்தேயு 5 : 13 : 16 ) ஒருவர் தன் விசுவாசத்தை சபை கூடுவதன் மூலமாக செயலில் காட்டும்போது சக கிறிஸ்தவர்களுக்கு இடறலாயிராமல் கனம் பெற்றவராயிருக்கிறார். நம் தாக்கம் கிறிஸ்துவுக்கான ஒன்றாகவும் இருக்கிறது. சில வேளைகளில் கிறிஸ்துவுக்கு எதிரான ஒன்றாகவும் அது மாறிவருகிறது.

5. ஒருவர் ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதிக்கும்போது, அது அவ்வாரத்தின் மற்ற நாட்கள் முழுவதிற்கும் அவருடைய இருதயத்தை தேவனை சேவிப்பதற்கு ஆயத்தப்படுத்துகிறது. திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆராதனை எங்கே இருக்கிறது? சபை, தொழிற்சாலைகளில் அலுவலகங்களில் வியாபார ஸ்தாபனங்களில் மருத்துவமனைகளில், பள்ளிக்கூடங்களில், வீடுகளில் இருக்கிறது. அதாவது, தேவனுடைய ஜனங்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கேதான் சபை இருக்கிறது. தேவனுடைய ஜனங்கள் சபையிருக்குமிடத்தில் தேவனை ஆராதிக்கும்போது மாத்திரமல்ல, அவரவருடைய பணிஇடங்களில் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். ✝

## தெய்வீக அழைப்பிற்கான நோக்கங்கள் [ எபி. 3 : 1 ]

- *சமாதானமாயிருக்கும்படியாக... ( I கொரி. 7: 15)*
- *சுயாதீனத்திற்காக... (கலா. 5 : 13)*
- *ஒரே நம்பிக்கைக்காக (எபே. 4 : 4)*
- *நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியாக – ( I தீமோ 6 : 12)*

# வாழ்க்கை நெருக்கடி

# Crisis of life : Youth

Tom Holland

கல்லூரியில் மனோதத்துவத்துறைக்கு தலைமை தாங்கும் மாணவர் ஒருவர் நடுத்தர வாழ்க்கையின் நெருக்கடியைப் பற்றி என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களிலும் நெருக்கடி இருப்பதாக அவர் கவனித்தார்.

சிலருக்கு இளமைப்பருவம் நெருக்கடியான காலக்கட்டமாயிருக்கிறது. சில வாலிபர்களைப் பாருங்கள். அவர்கள் பதின் பருவத்திற்கு அப்பால் வாழ்வதில்லை. ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான வாலிபர்கள் விபத்தில் மரித்துவிடுகிறார்கள்.

வாலிபப்பருவம் உண்மையாகவே ஒரு நெருக்கடியான காலகட்டந்தான். ஏனென்றால், இப்பருவத்தில்தான் எதிர்காலத்தை பாதிக்கும் முடிவுகள் எடுக்கப் படுகின்றன. சில வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையின் முதல் கட்டத்தை தவறான முறையில் வாழ்ந்து, இரண்டாம் கட்டத்தை துக்ககரமாக மாற்றிவிடுகிறார்கள்.

தேவனுடைய வார்த்தை வாலிபப் பருவம் ஒரு நெருக்கடியான காலக்கட்டம் என்பதை அங்கீகரிக்கிறது. ஏனென்றால், வாலிபப்பருவத்தைப் பற்றியும், வாலிபர்களைப் பற்றியும் தேவன் அதிகமாக தம்முடைய தாசர்களைக் கொண்டு பேசியிருக்கிறார். உதாரணமாக, எல்லோருக்கும் பரிச்சயமான புத்திமதி பிரசங்கி 12 : 1 ல் இடம் பெற்றுள்ளது. " நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை ". மேலும், பிரசங்கி 11 : 9 ல் வாலிபர்கள் எல்லோரும் நியாயத்தீர்ப்பில் தேவனை எதிர்கொள்வார்கள் என்று தெளிவான புத்திமதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சில வாலிபர்கள் 15, 16, 17, 18 அல்லது 19 வயது அடிப்படையில் நியாயந்தீர்க்கப் படுவார்கள். இவர்கள் இந்த வயதுகளில்தான் மரணத்தால் பறிக்கப்பட்டார்கள். சிலர் வாலிபப் பருவத்தில் சரீரப்பிரகாரமாக மரித்துவிடுகிறார்கள்; மற்றவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துவிடுகிறார்கள். எது பரிதாபகரமானது?

இளமையின் நெருக்கடி உலகத்தின் பாவத்தன்மையில் வெளிப்படுகிறது. பெற்றோர் என்ற நிலையில் மூத்த குடிமக்களாகிய நாம் நம்முடைய இல்லங்களில் அசுத்தமான காரியங்களை ஒருபோதும் அனுமதிப்பதில்லை, ஆனால், இப்போது தொலைக்காட்சிகள் அசிங்கமான காட்சிகளை அனுதினமும் காட்டிக்கொண்டிருக்கின்றன. தொலைக் காட்சிகளில் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இச்சையான காரியங்கள் வண்ணம் பூசப்பட்டு, காட்டப்படுகின்றன. பேராசை என்பது வாழ்க்கையை அணுகும் கனமான ஒன்றாகக் காட்டப்படுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இளமையின் நம்பிக்கை நாயகனாக இருக்கிறார் தேவனுடைய வார்த்தைக்கு மட்டுமே வாலிபர்களின் வழியை சுத்தம் பண்ணுவதற்கும் அவர்களை சரியான பாதையிலே வழிநடத்துவதற்கும் வல்லமை உண்டு (சங்கீதம் 119 : 9).

இன்று வாலிபர்கள் மத்தியில் உண்மையான கிறிஸ்தவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியாக நம்மால் சொல்ல முடியும். அப்போஸ்தலனாகிய யோவான் இதைச் சரியாக கணித்து தான் " வாலிபரே, நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன் " என்றார். (I யோவான் 2 : 14). ✞

## கிறிஸ்தவன்

- கிறிஸ்தவன் என்னும் பெயர் கிறிஸ்துவைத் தழுவி வருவதால் நாமெல்லோரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறோம் ( II யோவான் 2:20)
- கிறிஸ்தவன் என்னும் பெயர் மேன்மையானதும், நம்மை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துகிற பெயராகவும் இருக்கிறது. (II கொரிந்தியர் 7:1)
- கிறிஸ்தவன் என்னும் பெயர் அதை தரித்திருக்கிறவர் கிறிஸ்துவின் உடைமை என்பதை மற்றவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது. ( I கொரி 6 : 19 , 20)
- முதல் முதல் அந்நியோகியாவிலே சீசர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. (அப்போஸ்தலர் 11: 26).

# ஆவிக்கேற்றபடி நடப்பதில் முதலாவது ராஜ்யத்தை தேடுங்கள்

## Seek First The Kingdom In Walking According To The Spirit

Jim Poland

ஆவிக்கேற்றபடி நடப்பதென்பது " கிறிஸ்துவுக்குள் " மாத்திரமே சாத்தியம். ஆன படியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. " (ரோமர் 8 : 1, 4 ) நாம் கிறிஸ்து வுக்குள் " ஞானஸ்நானம் பெற வேண்டும். (ரோமர் 6 : 3, 4). நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதற்கு தேவன் காட்டியிருக்கிற ஒரே வழி இதுதான் ( கலாத்தியர் 3 : 27 ). ஆகவே, நாம் என்ன செய்யும்படி ஆவியானவர் கட்டளையிட்டிருக்கிறாரோ அதற்கு நாம் கீழ்ப்படியும்போது மட்டுமே ஆவியின்படி நடக்க முடியும் ( அப்போஸ்தலர் 2 : 38 ) பாவ மன்னிப்புக்கென்று நாம் ஞானஸ்நானம் பெறும்போது தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கும் பாவங்கள் கழுவப்படுகின்றன (ஏசாயா 59 : 1, 2 ).

ஆவியின்படி நடப்பதென்பது தொடர்ந்து இருக்கவேண்டிய ஒரு நிலையாகும். நாம் மாம்சத்தின் கிரியைகளின்படி நடந்தால், " நாம் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது. " ( கலாத்தியர் 5 : 21 ). " நாம் ஆவியின்படி நடந்தால் ஆக்கினைத் தீர்ப்புக்கும் தப்பித்துக் கொள்ளலாம். ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது (ரோமர் 8 : 1, 4) பெரிய நோக்கத்தை விட சிறிய கிரியை சிறந்தது.

நாம் ஆவியின்படி நடப்பது நமக்கு பாராட்டைப் பெற்றுத்தராது; நியாயப்பிரமா ணத்தின் நீதி நம்மிடத்தில் நிறைவேறுகிறது. சிலர் தேவன் தங்களை இரட்சித்து, மனமாற்றமடையச் செய்ததே பாவத்தைக் கடிந்து கொள்வதற்காகத்தான் என்று சொல்கிறார்கள். இது சேவல் தன்னுடைய குரலைக் கேட்பதற்காகத்தான் சூரியன் உதிக்கிறது என்று நினைப்பது போல் இருக்கிறது.

ராஜ்யத்தைத் தேடுவதற்கு ஒரு குறிப்பிட்ட மனநிலை அவசியப்படுகிறது. " ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது " என்று இயேசு கிறிஸ்து சொன்னார் ( மத்தேயு 5 : 3 ) நாம் ஆவிக்குரியவைகளை சிந்திக்கத்தக்கதாக நம் சிந்தனையில் ஆவிக்குரியவைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் ( ரோமர் 8 : 5 ) இது மனித இனம் தியானம் பண்ணுவதினால் வருவதல்ல. ராஜ்யத்திற்கு முதலிடம் கொடுக்கும் மனநிலை ஆவி வெளிப்படுத்துகிற வார்த்தையிலிருந்து வரவேண்டும் ( யோவான் 14 : 25 ; 16 : 13 ). நாம் எதை முதன்மைப் படுத்துகிறோமோ அது ஜீவனை அல்லது மரணத்தைத் தீர்மானிக்கிறது. " மாம்ச சிந்தை மரணம் ; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் " ( ரோமர் 8 : 6 ) " மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை " ( ரோமர் 8 : 7 ; யாக்கோபு 4 : 4 ) மாம்ச சிந்தையால் தேவனைப் பிரியப்படுத்தவே முடியாது ( ரோமர் 8 : 78 ).

ராஜ்ஜியத்தைத் தேடுவதற்கு ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறை அவசியப்படுகிறது. (கலாத்தியர் 5 : 16 – 26 ) தேவனுடைய பிள்ளைகளுக்கு எழுதப்பட்டது. மாம்ச இச்சையும் ஆவிக்கேற்றபடி நடப்பதும் ஒன்றோடொன்று எதிராயிருக்கிறது. ( கலாத்தியர் 5 : 16 – 18 ) நாம் மாம்ச இச்சைகளை வெறுக்கவில்லையென்றால் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது. ( கலாத்தியர் 5 : 19 – 21 ) நாம் இப்பூமியில் வாழ்கின்றபோது ஆவியின் கனியைக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேட நம்முடைய வாழ்க்கையை நாம் அர்ப்பணிக்கவில்லையென்று தான் அர்த்தம் கலாத்தியர் 5 : 22 , 26. ✝

---

## பரம அழைப்பு எப்படி வருகிறது ?

1. *தேவன் நம்மை அழைக்கிறார் ( எபி. 11 : 29 )*
2. *கிறிஸ்து நம்மை அழைக்கிறார் ( மத். 11 : 28 30 )*
3. *நற்செய்தி நம்மை அழைக்கிறது ( தெச. 2 : 14 )*
4. *சபை நம்மை அழைக்கிறது ( வெளி. 22 : 17 )*
5. *தேவ வார்த்தை நம்மை அழைக்கிறது ( II தீமோ 3 : 16 , 17 )*

# மரிக்கும் இயல்பு
# Mortality

Tim D. Shoemaker

மகா அலெக்சாண்டரின் தகப்பனும், மக்கதோனியாவின் ராஜாவுமாயிருந்த பிலிப் II என்பவரோடு கூட எப்போதும் இரண்டு பேர் செல்வதுண்டு. அவ்விரண்டு பேருக்கும் சுவாரஸ்யமான பணிகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஒரு மனிதனுடைய பணி என்னவென்றால் காலைதோறும் ராஜாவைப் பார்த்து ராஜாவாகிய பிலிப் அவர்களே, நீர் ஒரு மனிதன் தான் என்பதை நினைவில் கொள்ளும் என்பதாகும். மற்றொரு மனிதனுடைய பணி மாலையில் ராஜாவைப் பார்த்து ராஜாவாகிய பிலிப் அவர்களே இன்று நீர் ஒரு மனிதன் தான் என்பதை நினைவில் கொண்டீரா என்பதாகும். நாம் அடிக்கடி மரிக்கப் போகிறவர்கள் என்பதை மறந்துவிடுகிறோம். அதனால் பெரும்பாலானோர் மரிப்பதைக் குறித்து நினைக்கவே விரும்புவதில்லை.

எல்லோரும் சதா சாவைப்பற்றிய சிந்தனைகளால் ஆக்கிரமிக்கப்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், மரணத்தின் யதார்த்தத்தை நினைவுப்பூட்டுகிறேன். சில சமயங்களில் ஜனங்கள் வெற்றியின் உச்சத்தில் இருக்கும்போது, குறிப்பாக இந்த ராஜாவாகிய பிலிப்பைப்போல் அதிகாரத்தில் இருக்கும்போது அவர்கள் மற்றவர்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்னும் எண்ணம் அவர்களுக்குள் வந்துவிடுகிறது. இங்கே இந்த ராஜா பிலிப்பு தான் மற்ற மனிதர்களைப் போலவே சாகக்கூடியவன் என்பதை நினைப்பூட்டப்பட விரும்பியிருக்கிறான்.

நாம் இப்பூமிக்குரிய வாழ்க்கையில் எவ்வளவு சாதித்திருக்கிறோம், எவ்வளவு சம்பாதித்திருக்கிறோம், எத்தனை அதிகாரமுடையவர்களாயிருக்கிறோம், எத்தனை ஆண்டுகள் நாம் வாழ்கிறோம் என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. நாம் மரிக்கக்கூடியவர்கள்தான். இந்தக் காரியங்களில் நாம் இவ்வுலகில் எந்த ஒரு மனிதனிடமிருந்தும் வித்தியாசமானவர்களல்ல. இவ்வுலகிலேயே அதிக நாட்கள் வாழ்ந்த மனிதன் மெத்தூசலாதான். இருந்த போதிலும், வேதாகம வரலாறு இந்த மனிதனைப் பற்றிச்

சொல்லும்போது " மெத்தூசலா நூற்றென்பத்தேழு வயதானபோது லாமேக்கைப் பெற்றான். மெத்தூசலா லாமேக்கைப் பெற்றபின், எழுநூற்று எண்பத்திரெண்டு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம் அவன் மரித்தான்" (ஆதியாகமம் 5 : 25 – 27).

நாம் மரிக்கக்கூடியவர்கள் என்பதை மறுபடியும் மறுபடியும் வேதாகமம் நமக்கு நினைப்பூட்டுகிறது. சங்கீதக்காரன் சொல்லும்போது, " எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் என்பது வருஷமாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்" ( சங்கீதம் 90 : 10 ) என்று சொல்கிறார். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரராகிய யாக்கோபு இதை நமக்கு நினைப்பூட்டுகிறார் "உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே" (யாக் கோபு 4 : 14).

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கால அளவு குறைவாயிருக்கிறபடியால் நாம் நேரத்தைப் பயன்படுத்துவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நம்முடைய ஆயுசு நாட்களைப் பற்றி எச்சரித்துவிட்டு இரண்டு வசனங் களுக்குப் பின் தேவதாசனாகிய மோசே " நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களா கும்படி , எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் " என்று சொன்னார் (சங்கீதம் 90 : 12) இது நம்முடைய அனுதின ஜெபமாயிருக்க வேண்டும். இது நாம் மரிக்கக்கூடிய வர்கள், நம் வாழ்க்கை நிச்சயமற்றது, நாம் எப்படி நாட்களை பயன்படுத்தி னோம் என்று தேவனுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பதையும் நமக்குப் போதிக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இதைப் புரிந்தவராக தம்முடைய சீஷர்களுக்கு இவ்விதமாக அறிவுறுத்துகிறார். " பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பிவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும் ; ஒருவனும் கிரியைச் செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. (யோவான் 9 : 4) சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக இரவும் பகலும் பாடுபட்ட அப்போஸ்த லனாகிய பவுல் எபேசு பட்டணத்து சபைக்கு எழுதும்போது " ஆனபடியி னாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளான தால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் " என்று எழுதுகிறார் (எபேசியர் 5 : 15, 16 ).

வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறது. நாம் நம் வேலைகளை செய்துகொண்டு, தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்து கொண்டு வியாதிப்பட்டவர்களுக்கும், வீட்டில் முடங்கிக்கிடப்பவர்களுக்கும், உதவி செய்துகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம், ஆனால், இந்த நற்கிரியைகளுக்கு மத்தியில் நாம் தேவனுக்கு ஆற்ற வேண்டியபணிகளை மறந்துவிடக் கூடியது. அநேகமாக இந்த ராஜாவாகிய பிலிப்பைப் போல் தினமும் நாம் தேவனுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை மறந்துவிடக்கூடாது. அநேகமாக, இந்த ராஜாவாகிய பிலிப்பைப் போல் தினமும் நாம் வெறும் மனிதர்கள்தான் என்பதை நமக்கு நினைப்பூட்ட யாரோ ஒருவர் தேவை போலிருக்கிறது.

## இன்று நீங்கள் ஜெபித்ததீர்களா ?

Chad Ezelle



நம் ஆண்டவர் ஆரம்பத்திலேயே தம்மைப் பின்பற்றினவர்களிடம் தங்கள் தேவைகள் சந்திக்கப்பட தேவனிடம் கேட்க வேண்டுமென்பதை. தெளிவுப்படுத்தினார் ; அப்படியென்றால் நாம் தேவனிடம் கேட்கவேண்டாமா ? உண்மையான இருதயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் நம்முடைய வாழ்க்கையிலும் இவ்வுலகிலும் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமை உடையது. நாம் நம் இருதயங்களை ஊற்றி தேவனிடம் ஞானத்தைக் கேட்கும் போது தேவனிடத்திலிருந்து ஞானத்தையும், அன்பையும் பெற்றுக் கொள்கிறோம்.

உங்களிடம் இன்றைய தினத்தைக்குறித்த கேள்விகள் இருக்கிறதா? நீங்கள் பதிலளிக்க முடியாத நாளை குறித்த கேள்விகள் இருக்கிறதா? நீங்கள் முடிவெடுக்க வேண்டிய காரியங்களைக் குறித்த கேள்விகள் இருக்கிறதா? நீங்களே திருப்தியடைந்து கொள்ள முடியாத தேவைகள் இருக்கிறதா? தேவனுடைய ஞானத்தை நீங்கள் நாடினீர்களா? தேவனுடைய வழி நடத்துதலை, பாதுகாப்பை, தைரியத்தை நீங்கள் நாடினீர்களா? தேவ ஞானத்தை நீங்கள் தொடர்ச்சியாகக் கேட்டீர்களா? நம் தேவன் நம் ஜெபங்களுக்கு பதிலளிக்க வல்லவராயிருக்கிறார். ஆனால், முதலில் நாம் கேட்க வேண்டும். இன்று யாக்கோபு 1 : 5 யை வாசிப்பதற்கு சமயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவ்வசனத்தைக் குறித்து சிந்தியுங்கள். அதை நடைமுறைப்படுத்துங்கள்.

# சொந்த ஜனம்
## Special people
### Wayne Barrier

தேவதாசர்களாகிய பேதுரு மற்றும் பவுலின் எழுத்துக்களில் கிறிஸ்தவர்கள் சொந்த ஜனம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வசனப்பகுதிகளை நீங்கள் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள் ;

தீத்து 2 : 11 – 14 : **ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங் களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சந்திக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.**

I பேதுரு 2 : 9, 10 ; நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களா யிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

சொந்த ஜனம் என்பதன் பொருள் என்ன? இவ்வசனப்பகுதிகள் பல காரியங்களை குறிக்கின்றன. 1. இது சகல அக்கிரமங்களினின்று மீட்கப்பட்டவர்களை 2. சுத்திகரிக்கப்

பட்டவர்களை 3. தேவனுடைய ஜனங்களை 4. பரிசுத்த ஜாதியை 5. ராஜரீகமான ஆசாரியக் கூட்டத்தை 6. தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியை 7.அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டவர்களை 8.தேவனுடைய இரக்கத்தைப் பெற்றவர்களை இந்த சொந்த ஜனம் என்றும் சொற்றொடர் குறிக்கிறது. சுருக்கமாக சொல்லப்போனால், தேவனுடைய சொந்த ஜனமாயிருப்பவர்கள் தேவனுடைய கிருபை, இரக்கம், அன்பு போன்றவைகளால் இரட்சிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இந்த உண்மை பேதுரு மற்றும் பவுலின் மற்ற எழுத்துக்களிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பரிசுத்த ஜாதி மற்றும் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் அங்கம் வகித்து, அத்தோடு சம்பந்தப்பட்ட ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வது ஓர் அருமையான காரியம்.

I பேதுரு 2 : 9 , 10 வசனப்பகுதியில் சொந்த ஜனமாயிருப்பதோடு சம்மந்தப்பட்ட சில பொறுப்புகளையும் உள்ளடக்கியிருக்கிறது. முதலாவது பொறுப்பு, நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாயிருப்பது. இரண்டாவது பொறுப்பு, நம்மை அந்த காரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பது. ஒரு தேவனுடைய பிள்ளைக்கு இந்த இரண்டு பொறுப்புகளுமே மிக முக்கியமானது. நம் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இது நாம் நற்கிரியைகளைச் செய்ய நாம் உற்சாகமாக ஈடுபடவேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதாவது, நாம் நற்கிரியைகளைச் செய்வது மாத்திரம் போதாது. அவைகளை நாம் உற்சாகமாகச் செய்ய வேண்டுமென்பது தேவனுடைய சித்தமா யிருக்கிறது. இரண்டாவதாக, நம்மை இரட்சிக்கிற தேவனுடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டிய ஜனங்களாயிருக்கிறோம். இது நாம் தேவனிடத்தில் எப்படி அன்பாயிருக்கிறோம். அவரை நாம் எப்படி கனப்படுத்துகிறோம் என்பவைகளை வெளிப்படுத்துவதையும் உள்ளடக்கியிருக்கிறது. நாம் தேவனை துதிப்பது வெளிப் படையானதாக சுதந்திரமானதாக இருக்க வேண்டும். நம்முடைய எல்லாவற்றையும் விட மேலான ஒன்றாக இருக்க வேண்டும்.

தேவனுடைய கண்களில் சொந்த ஜனமாயிருப்பது அல்லது விசேஷித்தவர் களாயிருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் நாம் தேவனுடைய சொந்த ஜனமாயிருந்தால் ஒருவரால் அனுபவிக்கப்படும் மிகப் பெரிய ஆசீர்வாதத்துக்கு நாம் சுதந்தரவாளிகளாயிருக்கிறோம். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள தேவன் எல்லோருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறபடியால் நாம் அவருக்கு நன்றிகளை செலுத்த வேண்டும். (மத்தேயு 11 : 28 – 30, அப். 2 : 38 ).

# பிரச்சினைக்குரிய இல்லங்கள்

## TROUBLED HOMES

Hardeman Nichols

**1822** ல் பாரீஸ் நகரில் அது இலையுதிர் காலமாயிருந்தது. அங்கே தன்னந்தனியாக ஒரு அமெரிக்கர் தன் வீட்டு ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் ஒரு நாடக ஆசிரியராக இருந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்பாக அவர் லண்டன் போயிருந்தார். ஆரம்பத்தில் அங்கே அவருக்கு சில முயற்சிகள் தோல்வியைத் தழுவியபடியால் அவர் மீண்டும் பாரீஸ் மாநகருக்கே சென்றுவிட்டார். தாய் நாடான அமெரிக்காவைவிட்டு ஒன்பது வருடங்கள் தூரமாக இருந்தபடியால், அவர் தன்னுடைய வீட்டைப் பற்றி நினைத்து, நினைத்து கவலை அவரை கவ்விக்கொண்டது. தன்னுடைய கவலையைத் தூக்கி எறிய முடியாமல் தவித்த John Howard Payne என்னும் பெயர் கொண்ட இந்த நாடக ஆசிரியர் தன் அறையில் உட்கார்ந்து தன் இருதயத்திலிருந்து எழும்பிய வார்த்தைகளை எழுதத் தொடங்கினார்.

ஒரு வருடம் கழித்து, அவர் எழுதிய அந்த கவிதை Maria Tree என்னும் பெண் பாடகியால் பாடலாக கலையரங்கத்தில் பாடப்பட்டபோது பார்வையாளர்கள் எழுந்து நின்று அப்பாடகரைப் பாராட்டினார்கள். அப்போது அந்தப் பாடலை எழுதின Payne உலகப்புகழ் பெற்றார். இருபத்தேழு வருடங்களுக்குப் பின் 1850 ல் வாஷிங்டன் மாநகரில் Jenny Lind என்னும் சுவீடனைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற பெண் பாடகியால் ஒரு மாபெரும் இசை நிகழ்ச்சியில் இப்பாடல் பாடப்பட்டது. அந்நிகழ்ச்சியில் ஜனாதிபதி Millard Fillmore, அவரது மந்திரிகள் மற்றும் கனம் பொருந்தியவர்கள் அமர்ந்திருந்தார்கள். பாடலின்போது அப்பாடகி பார்வையாளர்கள் எல்லோரையும் பார்த்து பாடலைப் பாடினாலும் ஒரு நபரின் மீது தன் பார்வையைப் பதித்தாள். அந்த நபரிடமிருந்து அவள் தன் பார்வையை விலக்கவே இல்லை. **அந்த நபரிடமிருந்து அவன் பாடலை எழுதிய நபர்.** அக்கூட்டத்தில் பலருடைய கண்களை கண்ணீர் நனைத்தது. வறண்ட கண்களை அங்கே காணவே முடியவில்லை.

" இல்லம் " என்னும் மந்திரச் சொல் சோர்வான இதயங்களை இதமாக்குகிறது,

பல கெட்டக்குமாரர்களைத் தேற்றும் இடமாகவும், தனியாக பயணிப்பவர்களுக்கு பெலனைக் கொடுக்கிறது. அது மகிழ்ச்சியும், துக்கமும் பகிர்ந்துகொள்ளப்படும் பாதுகாப் பான இடமாகவும், தீர்மானங்களும், நம்பிக்கைகளும் பிறக்கும் இடமாகவும் திகழ்கிறது.

ஆனால், இல்லம் பலருக்கு வித்தியாசமான ஓர் இடமாக இருக்கிறது. அது தன் தூய தன்மையை இழந்து சீர்குலைந்துவிட்டது. சாத்தான் இல்லத்தின் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி நிலைகுலையச் செய்துவிட்டான். பல இல்லங்கள் சீர்குலைந் ததற்கான காரணம் தேவனுடைய குடும்ப அமைப்பு தோற்றுப்போய் விட்டது என்பதல்ல. தேவன் ஆரம்பத்தில் கொடுத்த குடும்ப ஒழுக்க நெறிகளை மனித இனம் நடை முறைப்படுத்தத் தவறிவிட்டது தான் காரணமாயிருக்கிறது.

தேவ தாசனாகிய மோசே இவ்விதமாக எழுதினார். " தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண் ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்; பின்பு தேவன் அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள் ளுங்கள் " என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1: 27, 28).

ஆதாம் உண்டாக்கப்பட்ட பிறகு, தேவன் இவ்விதமாகச் சொன்னார். பின்பு தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே, ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார். அவன் நித்திரை யடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதை யினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதியாகமம் 2: 15, 24).

குடும்பத்திற்கான தெய்வீக ஒழுக்க நெறிகளிலிருந்து மனிதன் விலகியபோது பல தவறுகள் இழைக்கப்பட்டன. அவைகளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திருத்தியபோது, தேவனுடைய ஒழுக்கநெறிகளை நீங்கள் பின்பற்றுங்கள் அதை மீறவேண்டாம் என்று சொன்னார் " ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் " என்றார். (மத்தேயு 19 : 6).

பழைய ஏற்பாட்டில் தேவதாசனாகிய யோசுவாவின் வேண்டுகோளைப் பின்பற்றுகிற எந்த ஓர் இல்லமும் மிகச் சிறந்த இல்லமாயிருக்கிறது " பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள், நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் " என்று சொன்னார் ( யோசுவா 24 : 15 ). யோசுவாவின் போதனைகளின்படி நாம் குடும்பத்தை அமைத்துக் கொண்டால் நம் குடும்பங்கள் மிகச் சிறந்த குடும்பங்களாக விளங்கும். வேறுவிதமாகச் சொன்னால் மெய் தேவனுக்கும் நமக்கும் இடையே எதிராக நிற்கும் எந்த ஒரு காரியத்திலிருந்தும் நாம் விலகியிருந்தால் நம் இல்லங்கள் மிகச் சிறந்த குடும்பங்களாக விளங்கும். வேறுவிதமாகச் சொன்னால் மெய் தேவனுக்கும் நமக்கும் இடையே எதிராக நிற்கும் எந்த ஒரு காரியத்திலிருந்தும் நாம் விலகியிருந்தால் நம் இல்லங்கள் மிகச் சிறந்த குடும்பங்களாக இருக்கும்.

" தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றைச் சுதந்தரிப்பான் " என்று வேத வசனம் எச்சரிக்கிறது ( நீதிமொழிகள் 11 : 29 ). வீட்டைக் கலைக்கிறவர்கள் மனந்திரும்பவேண்டும். " யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார் " ( II நாளாகமம் 15 : 2 ).

---

## சபை மாபெரியது

- அதன் ஸ்தாபகரால் சபை மாபெரியது (மத்தேயு 16 : 18)
- அதற்காக செலுத்தப்பட்ட கிரையம் அதிகமானதால் சபை மாபெரியது (அப்போஸ்தலர் 20 : 28)
- அதற்கு கிறிஸ்துவோடு இருக்கிற உறவினால் சபை மாபெரியது (எபே 1 : 22)

# திருமணம்... கர்த்தருக்குள்

# Married... In The Lord

Dan R. Owner

ஒருவர் உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருப்பதற்கு திருமணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால், திருமணம் ஆகியிருந்தால் நம் திருமணத்தை தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவிலிருந்து பிரிக்க முடியாது. ஒருவருடைய கிறிஸ்தவத்திற்கும் அவருடைய திருமணத்திற்கும் மிகப்பெரிய சம்மந்தம் உள்ளது. அது ஏன் உண்மையாயிருக்கிறது என்பதற்கான சில காரணங்கள் இதோ.

**திருமணம் என்பது சமுதாயத்திற்கான தேவனுடைய திட்டத்தின் அங்கமாக இருக்கிறது.**

ஆதியிலே தேவன் எல்லாம் நன்றாயிருக்கும்படியாக விவாகத்தை வடிவமைத்தார். வாழ்க்கைத் துணையில் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருந்து, குடும்ப உறவில் அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கவேண்டும் என்னும் நோக்கில் இந்த உறவை வடிவமைத்தார். தேவன் வடிவமைத்தபடியே திருமணம் சமூகத்தின் அடிப்படையாயிருந்து ஒருவர் தேவனுடைய திட்டத்தைச் செயல்படுத்த உதவுகிறது.

**திருமண கூட்டாளியை தேர்வு செய்வது ஒருவருக்கு தேவனோடிருக்கும் உறவை பிரதிபலிக்கிறது**

ஆபிரகாமின் காலத்தில் நாம் பார்க்கும்போதே அங்கே அவர் தன்னுடைய வேலைக்காரனிடம் " நீ என் குமாரனுக்கு கானானிய ஸ்தீரிகளிடத்திலிருந்து பெண் பார்க்க வேண்டாம் " என்று சொன்னதை நினைவில் கொள்ள வேண்டும். வேதாகமம் ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய ஜனங்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தெரிந்து கொள்ளும்போது தேவனுடனான உறவு மேம்படத்தக்க வகையில் துணையைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறது. இதேவிதமாக பவுல் சொல்லும்போது **அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக**

என்று சொன்னார். நாம் வாழ்க்கைத் துணையைத் தெரிந்துகொள்ளும்போது அது நேரடியாக தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**திருமண உடன்படிக்கையின் போது தேவன் அங்கே சாட்சியாக இருக்கிறார் .**

தகுதியுள்ள இருவருடைய திருமண உடன்படிக்கையின்போது தேவன் அங்கே அதிகாரப்பூர்வான சாட்சியாயிருக்கிறார். திருமண ஒப்பந்தம் இருவரையும் கட்டுப்படுத்துகிறது என்பதை தேவன் அங்கீகரிக்கிறார். அவரே இருவரையும் இணைக்கிறார். தேவன் திருமணத் தம்பதிகளை உலகச்சட்டத்தின்படி இணைப்பதில்லை. அவர் தம்முடைய சட்டத்தின்படி தான் இணைக்கிறார். தேவன் ஆணையும், பெண்ணையும் இணைக்கிற படியால் எந்த ஒரு நியாயமான விவாகத்திலும் இருவர் அல்ல, மூவர் இருக்கிறார்கள்.


**திருமணத்திற்கு பிறகு நம்முடைய அன்றாட செயல்பாடுகள் தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

கணவன் மனைவியை நடத்துகிறவிதம் தேவன் அந்த கணவனுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கிற காரியத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. திருமணத் தம்பதிகள் ஒருவருக்கொருவர் மரியாதையாய் நடந்து கொள்ள வேண்டும், ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும், ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டும் என்பது தேவனுடய சித்தமாயிருக்கிறது. நம் வாழ்வில் திருமணம் ஒரு முதன்மையான உறவாயிருக்கிறபடியாலும், திருமண உறவில் கிறிஸ்தவ தன்மைகள் வெளிப்படுகிறபடியாலும் தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் திருமணம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**தேவனுடைய விவாகச் சட்டங்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதை நம்முடைய இரட்சிப்பை பாதிக்கிறது.**

தள்ளிவிடுதலை தேவன் வெறுக்கிறார். திருமணமானவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டாலொழிய மறுமணம் முடிப்பதற்கு கிறிஸ்து அனுமதி கொடுக்கவில்லை. விவாகரத்து சம்மந்தமான எல்லா இடங்களிலும் இயேசு கிறிஸ்து " அவளைத்தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் ". இத்தெய்வீக சட்டங்களுக்கு புறம்பான வாழ்க்கையை பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சில வேளைகளில் வந்து சபையில் அங்கம் வகிக்க விரும்புவதாகச் சொல்வார்கள். ஞானஸ்நானம் பெற விரும்புவதாகச் சொல்வார்கள். இப்படி வருபவர்களுக்கு தவறான உறவை முறித்துக் கொள்ளும் நோக்கமே இருப்பதில்லை தேவனுடைய விவாகச் சட்டத்தோடு தங்கள் வாழ்க்கையை கொண்டு வரும் விருப்பமும்

இருப்பதில்லை. இத்தகைய காரியங்களில் ஜனங்களுடைய இச்சைகளுக்கு இசைவாக நடந்துகொள்வதா அல்லது தேவனுடைய சட்டங்களை தூக்கிப் பிடிப்பதா என்பதை சபைதான் தீர்மானிக்க வேண்டும், சபைக்கு தேவனுடைய சட்ட திட்டங்களை அதிலும் குறிப்பாகத் திருமணம் சம்மந்தமாக தேவனுடைய உத்தமமான சட்டங்களை தூக்கிப் பிடிக்கும் பொறுப்பு உண்டு; ஏனென்றால் நம் ஊழியம் ஆத்துமாக்களை இரட்சிப்பதாக இருக்கிறது. தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாத வாழ்க்கையை வாழும் ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை இழந்து போவார்கள்.




**தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவிலிருந்து திருமணத்தைப் பிரிப்பதற்கு வழியே இல்லை.**

திருமணமானது தேவனுடைய திட்டமாயிருக்கிறது, இது தேவனுடைய பிரமாணங்களால் ஆளுகை செய்யப்படுகிறது, நாம் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும்போது அது நேரடியாக தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. திருமணத்திற்குப் பிறகு நம்முடைய அன்றாட செயல்பாடுகளுக்கும் தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறபடியால் திருமணத்தை நாம் கிறிஸ்தவராக இருப்பதன் ஒருங்கினைந்த பகுதியாகப் பார்க்கவேண்டும். நாம் ஒரு சபையாக நம்மை நாமே திருமணத்திற்கு அர்ப்பணித்துக்கொள்ள கர்த்தர் தாமே உதவிச் செயவாராக ஆமென். ✞

# தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எதைக் கொடுக்க முடியும்

## *What Fathers Can Give Their Children*

Bill Richardson

**" பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக " (எபேசியர் 6 : 4).**

யாரோ ஒருவர் " தகப்பன் மார்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கிடைப்பதில்லை " என்று சொன்னார். நாம் பிள்ளைகளோடு நேரத்தை செலவு செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிற படியால் நாம் அதை சரியாக செலவழிக்க வேண்டும். தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய சில காரியங்கள் இதோ.

**பிள்ளைகளுக்கு நல்ல தாயைக் கொடுங்கள்**

ஒவ்வொரு குழந்தையும் நல்ல கிறிஸ்தவத் தாயை பெறும் தகுதி பெற்றிருக்கிறது. தாவீதின் குமாரர்களில் சிலர் தேவபக்தியற்றவர்களாயிருந் தார்கள் அதற்குக்காரணம் தாவீது விவாகம் பண்ணின பெண்களில் சிலர் தாய்களாக இருக்கும் தகுதிப் பெறாதவர் களாயிருந்தார்கள். தகப்பன்மார்களே, உங்களுக்கு நல்ல பிள்ளைகள் வேண்டு மானால் அவர்களுக்கு நல்ல தாயாக இருக்கத் தக்கதான ஒரு பெண்ணை திருமணம் செய்யுங்கள்.

**பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனா யிருங்கள்**

தகப்பன்மார்களுடைய மிகப்பெரிய பாவங்களுள் ஒன்று பிள்ளைகளோடு நேரத்தை செலவு செய்யத் தவறுவது தான். பிள்ளைகளுக்கு அப்பாவுடைய அரவணைப்பு அவசியமாகும். அவர் களுக்கு ஒரு நல்ல தகப்பன் தேவை. ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளை நேசிக்கிறான். நம் பூரணப் பிதாவாகிய தேவன் அதற்கு மிகச் சிறந்த உதாரண மாயிருக்கிறார். தேவனே மிகச் சிறந்த தகப்பனுக்கு உதாரணமாயிருக்கிற

படியால், நாம் நல்ல தகப்பன்மார்களாக இருப்பதில் தோற்றும் போனால் எந்த சாக்கு போக்கையும் சொல்லமுடியாது.

**ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளைப் பராமரிக்கிறான்**

நம் பரமப்பிதா நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து நம்மைப் பராமரிக்கிறார். தகப்பன்மார்கள் அவ்விதமாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்; " ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தான் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் " (I தீமோத்தேயு 5 : 8).

**ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளை ஒழுங்குப்படுத்துகிறான்**

தேவன் நம்மை ஒழுங்குபடுத்துகிறார். நம் பிள்ளைகளை சரியாக வளர்க்க வேண்டுமென்றால் அவர்களை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும்.

**அவர்களுக்கு ஒழுக்க நெறிகளை கற்றுக்கொடுங்கள்**

அவர்களுக்கு வாழ சரியான வழியைக் காட்டுங்கள். தேவனைப்பற்றியும், அவருடைய வார்த்தை பற்றியும் அவர்களுக்குப் போதியுங்கள். சரியானவைகளுக்கும், தவறானவைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களுக்கு போதியுங்கள். நல்ல பிரஜைகளாக இருக்க அவர்களுக்கு போதியுங்கள். நேர்மையான உழைப்பின் கௌரவத்தை அவர்களுக்கு கற்பியுங்கள். அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதியுங்கள். அவர்களோடு சேர்ந்து விளையாடுங்கள். வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் நினைவுகளை அவர்களுக்கு பரிசாகக் கொடுங்கள்.

**அவர்களுக்கு மெய்யான சபையைக் காட்டுங்கள்**

நீங்கள் எந்த சபைக்கு போகிறீர்களோ அந்த சபைக்கு அவர்களும் போவார்கள். எனவே, நீங்கள் சரியான சபையில் அங்கம் வகிக்கும்போது அவர்களும் சரியான சபையில் அங்கம் வகிப்பார்கள் " எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் " ( I தெசலோனிக்கேயர் 5 : 21 ).

எந்த ஒரு தகப்பனும் பூரணரல்ல, ஆனால், நீங்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில் நேர்மையானவராக, நியாயமானவராக, நல்லவர்களாக இருந்தால் பாராட்டப்படுவீர்கள். நல்ல கிறிஸ்தவ தகப்பனாக இருங்கள். உங்கள் பிள்ளைகளை பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

✞

# இவ்வுலகில் நமக்கு வீடு இல்லை

## No Home Down Here

II தீமோத்தேயு 4 : 6 - 8

Curtis Camp

### முன்னுரை

A. ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயத்திபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

B. நம் கர்த்தர் நமக்காக ஒரு வீட்டை ஆயத்தம் செய்திருக்கிறார் (யோவான் 14 : 1 – 3).

C. அது நம் நித்திய வீடாயிருக்கும் (II கொரிந்தியர் 5 : 1).

D. **மேலோகத்தை நாடுகிறோம் அதின் ஜோதிப் பிரகாசத்தையும்** என்று நாம் பாடுகிற பாடலை நினைவில் கொள்ளுவோம்.

E. நாம் பண ஆசையைக் குறித்தும் ( I தீமோத்தேயு 6 : 1 0 ). உலகக் கவலைகளைக் குறித்தும் (மாற்கு 4 : 19) இவ்வுலகத்தில் அன்புகூறுவதைக்குறித்தும் (I யோவான் 2 : 15 ) பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்துவைப்பதை குறித்தும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (மத்தேயு 6 : 20).

F. நம் கர்த்தர் " ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல " என்று சொல்லியிருக்கிறார் (மத்தேயு 12 : 15).

G. நம் ஆண்டவர் அதை ஐசுவரியமான விவசாயின் உவமையின் மூலமாக நிரூபித்திருக்கிறார் (லூக்கா 12 : 16 – 21).

**I நாம் இவ்வுலகத்திற்கேற்ற வேஷந்தரிக்க தடைசெய்யப்பட்டிருக்கிறோம் ( ரோமர் 12 : 8)**

A. இன்றைய நாட்களில் நமக்கு யார் தூண்டுகோலாக இருக்கிறார்?

1. வெற்றிகரமான ஒரு வியாபாரி. நாம் அவரை எவ்வளவு உயர்வாக பார்க்கிறோம்.

2. நாம் இவ்வுலகத்தார் தங்களை தாமே மகிமைப்படுத்திக்கொள்ள எந்த அளவு கோலைப் பயன்படுத்துகிறார்களோ அதே அளவுகோலைத் தான் நாமும் பயன் படுத்துகிறோம். இவ்வுலகமே நம் கதி என்று கருதுகிறோம்.

B. இவ்வுலகத்தில் நாம் குடியிருப்பதற்கு ஒரு வீடு இருந்தாலும் கூட, நாம் நம் நித்திய வீட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் எப்போழுதுமே நினைவில் கொள்ள வேண்டும்.

1. சிலர் சபை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்நாட்களில் காணப்படுகின்ற பெரிய வியாபார ஸ்தாபனங்களைப் போல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

2. சபை நமக்கு இப்பூமி சொந்தமல்ல என்பதை இந்த நாளில் மறந்துபோனதோ அந்த நாள் இருண்ட நாளாக மாறியது.

**II பல நேரங்களில் பரலோகத்தைப் பற்றிய எண்ணங்கள் நம்மைப் பரவசப்படுத்து வதில்லை**

A. பரலோகத்தைப்பற்றி நாம் எத்தனை பிரசங்களைக் கேட்டிருக்கிறோம்.

1. நிச்சயமாகவே பரலோகம் மகிமையான அழகான இடம்தான். ஆனால் நாம் அதை தொலைநோக்குப் பார்வையில் பார்ப்பதில்லை. நாம் குறுகிய பார்வை உடையவர் களாயிருக்கிறோம்.

2. நாம் இவ்வுலகத்தின் பிரஜைகளாக இருந்துகொண்டு பரலோகம் போக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறோம். ஆனால், உண்மையில் நாம் பரலோகத்தைச் சேர்ந்தவர்கள் இப்பூமியில் நாம் தற்காலிகமாக சஞ்சலித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய குடியுரிமை எல்லாம் பரலோகத்தில் தான் இருக்கிறது.

**III கிறிஸ்தவர்கள் இவ்வுலகமே சதம் என்று நினைக்கும்போது கிறிஸ்தவம் அதன் சாரத்தை இழந்துவிடுகிறது.**

A. நாம் ஆபிரகாமின் ஆவிக்குரிய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் லோகத்தின்

பிள்ளைகளல்ல.

1. நாம் ஒருபோதும் சோதோமில் குடியேறக்கூடாது. நாம் சோதோமில் குடியேறும் அந்நேரமே பரலோக பயணிகள் என்னும் நிலையிலிருந்து நிலைகுலைந்து விடுகிறோம். இப்பூமியின் காரியங்களின் மீது சிந்தை வைத்து நம் பரலோக கணக்கை திவாலாக்கிவிடுகிறோம்.

2. உன்னத நாட்டை நோக்கி விரைந்து செல்கிறோம் என்று பாடும்போது நம் கண்கள் கண்ணீரால் நிறைந்துவிடுகிறது. அப்படித்தானே?

B. இப்பூமியில் நமக்கு சதம் என்று நினைத்து இங்கேயே இருந்துவிடலாம் என பலர் தீர்மானித்துவிட்டது போல் தெரிகிறது. அதனால் நாம் பரம அழைப்புக்கு செவி சாய்ப்பதில்லை.

C. இன்றைய நாட்களில் உங்கள் தேவை என்ன?

1. இன்றைய நாட்களில் கிறிஸ்தவனாவதற்குண்டான கீழ்ப்படிதல் அவசியமாகிறது.

2. நம் கடமைகளைச் செய்வதற்கும் நம் உண்மைத்தன்மைக்குத் திரும்புவதற்கான நேரம் அவசியமாகிறது.

3. உங்கள் பகுதியிலுள்ள பிராந்திய சபையில் அங்கம் வகிப்பதற்கான நேரம் வந்துவிட்டது. அங்கே அங்கம் வகித்து கனிகொடுப்பது அவசியமாகிறது. ✝

## கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்றால் என்ன?

➢ பழைய ஏற்பாட்டைப் பிரசங்கிப்பது கிறிஸ்துவை பிரசங்கிப்பதாகும். ஏனென்றால், அவைகள் கிறிஸ்துவைப்பற்றி சாட்சி கொடுக்கின்றன (யோவான் 5:39)

➢ கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது புதிய ஏற்பாட்டை பிரசங்கிப்பதாகும். ஏனென்றால், கிறிஸ்துவின் உபதேசங்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ( II பேதுரு 3:2)

கிறிஸ்தவ வாழ்க்கை

# நான் ஆராதிக்க தவறியபோது

## When I Was Absent From Worship

J. A. MCNUTT

1. அது என் விசுவாசத்தின் உண்மைத் தன்மையை சிலர் கேள்வி கேட்கும்படி செய்தது. ( யாக் 2 : 17 )

2. அது நான் சபைகூடிவருவதை அலட்சியப்படுத்தி, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருந்ததைக் குறித்து ஒரு மோசமான முன்னுதாரணத்தை வெளிப்படுத்தியது (எபி 10 : 25)

3. அது ஆதித்திருச்சபை கர்த்தருடைய நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்ற உதாரணத்தை நான் புறக்கணித்ததை பிறருக்குக் காட்டியது. (அப்போஸ்தலர் 20 : 7)

4. அது முழு மந்தையும் தேவனுடைய வார்த்தையால் போஷிக்கப்படுவதை மூப்பர்கள் செய்யவிடாமல் தடுத்தது. (அப்போஸ்தலர் 20 : 28)

5. அது நான் என் சகோதர சகோதரிகளோடு சேர்ந்து ஆராதிப்பதிலும், சபைகூடும் போது கர்த்தர் நம் நடுவில் இருப்பதாகச் சொன்ன வாக்குத்தத்தைக் குறித்து நான் அக்கறை யற்றவனாயிருக்கிறேன் என்பதையும் காட்டியது (மத்தேயு 18 : 20).

6. அது நான் கர்த்தரோடும் சபை அங்கத்தினர்களோடும் ஐக்கியம் கொள்வதைவிட உலகத்தோடு ஐக்கியம் கொள்வதில் மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்று சிலர் முடிவுக்கு வரக் காரணமாகியது. ( II கொரி 6 : 4)

7. அது நான் என் பிள்ளைகளுக்கு முன்பாகவும், மற்றவர்களுக்கு முன்பாகவும் மோச மான மாதிரியை முன்வைக்கக் காரணமாகியது.

8. அது நான் ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உல்லாசப் பயணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன் என்றும், உலகத்தை அதிகமாக நேசித்து, கர்த்தரை குறைவாக நேசிக்கிறேன் என்பதையும் நிரூபித்தது. (II தீமோத் 4 : 10 ).

9. அது நான் முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நித்திலும், அப்பம் பிட்டுதலிலும், ஜெபம் பண்ணுதலிலும், உறுதியாய்த்த ரித்திருந்ததற்கு எதிராக செயல்பட்டதுபோல் ஆகியது (அப். 2 : 42 – 47 ).

10. அது நான் அந்த நாளிலே வேண்டுமென்றே ஆராதனையைத் தவறவிட்டேன் என்னும் எண்ணத்தை ஏற்படுத்தி நான் சபை அங்கத்தினர்களின் ஐக்கியத்தை விரும்பவில்லை என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. (I யோவான் 1 : 7 )

# யார் அவர்?

# Who Was He?

Royer Rush

பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி : மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் : நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி : யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோ கத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத்தேயு 16 : 13 – 19).

அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்னும் நிச்சயமான பதிலை உடனே அளித்தார். பேதுரு இதை வேறு எந்த மனிதனிடமிருந்தும் கற்றுக் கொள்ளவில்லை, தேவனிடமிருந்தே கற்றுக் கொண்டார். இந்த வெளிப்பாடு பேதுருவுக்கு எப்படி கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை, ஆனால் நம் கர்த்தரின் அடையாளத்தைப் பற்றிய

உண்மை பேதுருவுக்கு எந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தவில்லை. நமக்கும் அது எந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தக்கூடாது.

நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்திருக்கிற காரியங்கள் பேதுருவின் அறிக்கைக்கு வலு சேர்க்கிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பேதுரு அறிக்கையிட்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே அதை ஒப்புக்கொண்டிருக்கிறார். மேலும், இதற்கு யோவான் ஸ்நானனுடைய சாட்சியும் நமக்கு உண்டு. மேலும், குறைந்தபட்சம் மூன்று சந்தர்ப்பங்களில் தேவனுடைய சத்தம் வானத்திலிருந்து உண்டாகிறது. " இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன் '' என்று அறிவித்தது. இயேசுவானவர் பழைய ஏற்பாட்டில் மேசியா சம்மந்தமாக சொல்லப்பட்ட எல்லா தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாயிருக்கிறார். அவர் சொன்னவைகளும் செய்தவைகளும் அவர் யார் என்பதற்கு நிருபணமாயிருக்கின்றன. (யோவான் 5 : 30 – 39).

கிறிஸ்துவின் தெய்வீகம் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது? அவருடைய தெய்வீகத்தை அடிப்படை யாகக் கொண்டுதான் அவர் தம்முடைய சபையைக் கட்டினார். சபை கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்னும் அஸ்திபாரத்தின் மீது தான் நிற்கிறது. "வேறே அஸ்திபாரம் இல்லையே " ( I கொரிந்தியர் 3 : 11 ) சபை பேதுருவின் மீதோ அல்லது பேதுருவாலோ கட்டப்படவில்லை. ராஜ்யத்தின் திறவுகோல்கள் அவரிடத்தில் கொடுக்கப் பட்டன. அவைகளை வைத்து அவர் எல்லோருக்கும் வாசல்களைத் திறந்து கொடுத்தார் ( அப்போஸ்தலர் 2, 10 ) பேதுரு சரீரமாகிய சபைக்கு ஒருபோதும் தலையாயிருக்கவில்லை. சபைக்கு தலையாக எப்போதுமே கிறிஸ்துவே இருக்கிறார். ( கொலோ 1 : 18 ). இந்த அடிப்படை உண்மைகளைக் கூட புரிந்து கொள்ளாத பல நல்ல மக்கள் இருக்கிறார்கள்.

அருமையானவர்களே, தவறு செய்யாதீர்கள். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறார். அவரை விசுவாசித்து, முடிவில்லாத ஆனந்தத்தை அடைய அவருக்குக் கீழ்ப்படியுங்கள். அவரை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் உங்களுக்கு நம்பிக்கையே இல்லை.

✝

கிறிஸ்தவ வாழ்க்கை

# நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்

## You Have Compassed This Mountain Loap Enough

Jeff Archey.

**தே**வன் மோசே மூலமாக தெய்வீக ஆலோசனைகளை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வழங்கினார் " நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள் " ( உபாகமம் 2 ; 3 ) வேறுவிதமாகச் சொன்னால், இஸ்ரவேலே, நீங்கள் இந்த மலை அடிவாரத்தில் பல நாட்களாக சுற்றித்திரிகிறீர்கள், இவ்விடத்தைவிட்டு கடந்து போவதற்கு நேரம் வந்துவிட்டது! என்று இஸ்ரவேலைப் பார்த்து தேவன் சொல்கிறார்.

ஒரு விதத்தில் பார்த்தால் நம் வாழ்க்கையிலும் சில மலைகள் உள்ளன. நாம் அதைச் சுற்றிச் சுற்றி வருகிறோம். அதே பழைய திசையிலேயே திரும்பத் திரும்ப பயணிக்கிறோம். ஆனால், நண்பர்களே நாம் தேவனிடத்திற்கு திரும்பி அதைவிட சிறந்த திசையில் நாம் பயணிக்க முடியும். அப்படிச் செய்ய நாம் ஏன் தீர்மானிக்கக்கூடாது? இன்று நாம் தேவன் எந்த திசையில் திரும்பச் சொல்கிறாரோ, அந்தத் திசைக்குத் திரும்புவோம். நாம் மலைகளைச் சுற்றித் திரிவதை நிறுத்திக் கொள்வதற்கு நேரம் வந்துவிட்டது.

### காலத்தை வீணாக்குவது

நாம் சுற்றித்திரிகிற ஒரு மலை இது. " நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் " என்று தேவன் சொல்கிறார். ( எபே. 5 : 16 ) ராபர்ட்சன் அவர்கள் சொல்லும்போது " நம்மெல்லாருக்கும் ஒரேவிதமாகத்தான் நேரம் கொடுக்கப்படுகிறது. ஆனால், பவுல் நேரத்தை சரியாகச் செலவு செய்தபடியால் திறந்தவெளி சந்தைக்குச் சென்று நேரத்தை அவரால் வாங்க முடிந்தது. நாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தை ஞானமாகவும், சரியாகவும் பயன்படுத்துவது அவசியமா யிருக்கிறது. அப்போஸ்தலர் 24 : 24 – 25 வசனங்களில் நாம் காணும் பேலிக்சைப் போல் நம்மில் யாரும் ஆகாதபடி தேவன் காப்பாராக! தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலை அழைப்பித்து கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லிக் கேட்டான். ஆனால், பவுலின் பேச்சைக் கேட்டு பயமடைந்து, இப்பொழுது நீ போகலாம். எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்று சொன்னான் ; அவன் கிறிஸ்துவினி டத்தில் திரும்பியதாக வேதாகம ஆதாரம் எதுவுமே இல்லை. நாம் நேரத்தை ஞானமாக

பயன்படுத்தாமல் சுற்றி சுற்றித் திரிகிறோம். ஜாக்கிரதையாக திட்டமிட்டு ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**அக்கறையின்மை ;**

இதைக்குறித்து நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மற்றவர்களைக் குறித்து உணர்வில்லாமை, மற்றவர்கள் மீது இரக்கமில்லாமை. வெளிப்படுத்தின விசேஷம் 3 : 14 – 16 வசனங்களில் லவோதிக்கேயா சபை உலகத்தின் காரியங்கள் தங்கள் சௌகரியத்தின் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதித்து விட்டார்கள், கர்த்தர் அவர்கள் மனந்திரும்பும்படி கட்டளையிட்டார். இந்த அக்கறையின்மை என்னும் மலையைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறோம். ஓ ! நண்பரே, வடக்கே திரும்புங்கள்.

**கவலை**

இது முடிவில்லாத மலையாக இருக்கிறது. இதை நாம் பலவிதமான உணர்வுகளுடன் சுற்றி தளர்ந்து விடுகிறோம். " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் " என்று தேவன் சொல்கிறார் ( பிலிப் 4 : 6 ) உங்கள் கவலைகளையெல்லாம் தேவனிடம் திருப்பி விடுங்கள். கவலையைப்பற்றி ஒரு விதியை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; ஒரு காரியத்தில் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றால், கவலைப்படுவதினால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. ஒரு காரியத்தில் உங்களால் ஏதாவது செய்ய முடியுமென்றால் கவலைப்படுவதை நிறுத்திவிட்டு முயற்சி எடுங்கள்.

**அறியாமை**

அறியாமை ஒரு மலையாயிருக்கிறது ( ஓசியா 4 : 6 ). அறியாமை அழிவுக் கேதுவானது. பெரேயா பட்டணத்தார் அறியாமை தங்கள் வாழ்க்கையில் ஊடுருவ அனுமதிக்கவில்லை. ( அப்போஸ்தலர் 17 : 10, 11 ) அறியாமையும், கற்றுக்கொள்ள மறுப்பதும் " எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராத மனநிலையும் (II திமோத் 3 : 7 ) ஒன்றுதான். நாம் அறிவில் வளர்ந்து, அந்த அறிவை நடைமுறைப்படுத்துவோம் (II பேதுரு 3 : 18).

பிரியமானவர்களே! நம் வாழ்க்கையில் காலத்தை வீணாக்குவது, அக்கறையின்மை, கவலை, அறியாமை போன்ற மலைகளைச் சுற்றி திசை தெரியாமல் திரிகிறோம். நாம் பயணிக்கும்படி தேவன் நமக்கு ஒரு திசையைத் தந்திருக்கிறபடியால் அவருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! நண்பரே, நீங்கள் பயணிப்பதற்கு சரியான திசையும், திட்டமும் இருக்கிறதா ?

# உன் கால்நடையை சீர்தூக்கிப்பார்

# *Ponder Your Feet*

John Smith

நீதிமொழிகள் 4 : 26, " உன் கால்நடையைச் சீர்தூக்கிப்பார் ; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக " என்று சொல்கிறது. இங்கே தேவன் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும், நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதையும் சீர்தூக்கிப்பார்க்கும்படி நம்மை எச்சரிக்கிறார். எபேசியர் 5 : 15 , 16 வசனங்கள் " **ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல் நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்** " என்று சொல்கிறது. நாம் தேவனை மகிமைப்படுத்தும்படி எப்போதுமே நம் ஆவிக்குரிய நிலையை சீர்தூக்கிப் பார்த்து தேவைப்பட்டால் சரிசெய்து கொள்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சரிசெய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நாம் சரிசெய்து கொண்டு கர்த்தருக்காகத் தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருப்போம். நாளை என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. அவருடைய ராஜ்யத்திலும் நம்முடைய பகுதியிலும் நிறைய வேலைகள் இருக்கின்றன. என்ன வேலை என்று கேட்கிறீர்களா ?

+ சபையின் எல்லா ஆராதனைக் கூடுகைகளிலும் உண்மையாக கலந்து கொள்ளுங்கள்.
+ தினமும் சில நேரத்தை தனிப்பட்ட வேத பாடத்திற்காக ஒதுக்குங்கள்.
+ இரட்சிப்பின் திட்டத்தை இழந்து போனவர்களுக்குப் போதியுங்கள்.
+ வேதபாட வகுப்புகளில் போதியுங்கள்.
+ ஆராதனையில் பாடல்களில் வழிநடத்துங்கள்.
+ வியாதியாயிருப்பவர்களையும், தேவையில் இருப்பவர்களையும் போய் சந்தியுங்கள்.
+ நம் ஆராதனை வேளைகளில் பார்வையாளர்களாக வருபவர்களை வாழ்த்தி நல்ல வரவேற்பை கொடுத்து அவர்களைப்போய் சந்தியுங்கள்.
+ சபையின் பணிகளுக்கு ஆதரவாயிருங்கள் – சபையின் பாரத்தை சுமந்து என்ன செய்ய வேண்டும் என்று நாடி வேலைகளைச் செய்து முடிப்பதற்கு கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள்.

# சப்பீராள், ஓர் உதிர்ந்த மலர்

# Sapphira, A Withered Flower

Bonnie Rushmore

**வே**தாகமத்தில் சில பெண்கள் இயல்பாகவே தங்கள் வாழ்க்கைத் துணையோடு சம்மந்தப்பட்டிருக்கிறார்கள். நாம் ஏவாளைப்பற்றி நினைக்கும் போது இயல்பாகவே ஆதாமைப்பற்றி நினைக்கிறோம். சாராள் பற்றி குறிப்பிடப்படும்போது, ஒருவர் இயல்பாகவே ஆபிரகாமைப் பற்றியும் நினைப்பார். அதே போல் பிரிஸ்கில்லாளைப்பற்றி குறிப்பிடும்போது நாம் ஆக்கில்லாவையும் நினைக்கிறோம். வேதவாக்கியங்களில் அனனியா வும், சப்பீராளும் இயல்பாகவே சம்பந்தப்படுகிறார்கள். சப்பீராளைப் பற்றிய நம் பாடத்தில் அனனியாவை அவள் செயல்களிலிருந்து பிரிக்கவே முடியாது.

**அனனியா** என்னும் பெயரின் பொருள் **யெகோவா கிருபையாயிருக்கிறார்** என்பதாகும். **சப்பீராள்** என்னும் பெயரின் பொருள் **அழகானவர்** என்பதாகும். இந்த தம்பதிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயருக்கு ஏற்றாற்போல் வாழவில்லை என்பதை நாம் பார்க்கப் போகிறோம். அனனியா மற்றும் சப்பீராளைப் பற்றிய வசனங்களை நாம் பார்ப்பதற்கு முன்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்திற்குப்போய் இதன் பின்னனித் தகவல்களை நாம் கற்றுக்கொள்வோம்.

பெந்தெகொஸ்தே நாளிலே வானத்தின் கீழிருந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அறுவடைப்பண்டிகையான இந்த பெந்தகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடும்படி எருசலேமில் கூடினார்கள். இந்த நாளில்தான் அப்போஸ்தலனாகிய பேதுரு முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். பல யூதர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள். ( அப்போஸ்தலர் 2 : 41 ) அங்கே வந்திருந்த யூதர்களில் பெரும்பாலானோர் எருசலேம் வாசிகளல்ல; பெந்தபொஸ்தே பண்டிகையைக் கொண்டாடும்படி வெளியி லிருந்து வந்தவர்கள்தான் அதிகமாயிருந்தார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த பிறகு கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சபையைப் பற்றியும் அப்போஸ்தலர் களிடமிருந்து கற்றுக் கொள்வதற்காக எருசலேமிலேயே சில நாட்கள் தங்கியிருக்க

முடிவெடுத்தார்கள். அவர்கள் எருசலேமில் தங்கியிருந்த நாட்கள் அதிகமானதால் அவர்கள் கொண்டு வந்த பணமெல்லாம் செலவழிந்து விட்டது. இவர்கள் மீது எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்களுடைய அன்பு தங்கள் உடைமைகளை விற்று இவர்களுடைய தேவைகளை சந்திக்க ஏவியது. (அப்போஸ்தலர் 2 : 45 ; 4 : 34 , 35).

இது நம்மை அப்போஸ்தலர் 4 ; 36, 37 வசனங்களுக்கு கொண்டு வருகிறது. இந்த வசனப்பகுதியில் பர்னபா என்னும் பேர்கொண்ட ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் தேவையில் இருப்பதைக் கண்டான். பின்பு பர்னபா தனக்கு உண்டான நிலத்தை விற்று அதின் கிரயத்தைக்கொண்டு அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தான். அதை அப்போஸ்தலர்கள் தேவையில் இருந்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் ஐந்தாம் அதிகாரம் அனனியா மற்றும் சப்பீராளுடன் ஆரம்பமாகிறது. இவர்களும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகத்தான் இருந்தார்கள். பர்னபா தேவையில் இருந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக தன்னுடைய நிலத்தை விற்று அதின் கிரயத்தை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்ததுபோல் இவர்களும் தங்கள் நிலத்தை விற்று அதின் தொகையை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுக்கத் தீர்மானித்தார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக இவர்கள் தங்களை அதிகம் கொடுப்பவர்களாக காட்ட விரும்பினார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து நிலத்தை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு விற்றதாகவும் அதின் முழுத்தொகையையும் சபைக்கு கொடுத்து விட்டதாகவும் சொல்ல வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் நிலத்தை ஒரு தொகைக்கு விற்று, அதில் ஒரு பகுதியை தங்களுக்கென்று வைத்துக்கொண்டு மீதமுள்ள தொகையை சபைக்கு கொடுத்துவிட்டு நிலத்தை விற்ற முழு தொகையையும் சபைக்கு கொடுத்ததாகப் பொய் சொன்னார்கள்.

அனனியா எருசலேம் சபை கூடிய இடத்திற்கு வந்து பணப் பையை அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். அப்பொழுது பேதுரு அனனியாவிடம் பரிசுத்த ஆவியினிடத்தில் நீ ஏன் பொய் சொன்னாய் அந்த நிலமும், அதன் பணமும் உன்னுடைய தாயிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்தில் இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டார். அங்கே இருந்த வாலிபர்கள் அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய், அடக்கம் பண்ணினார்கள்.

ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்குப்பின்பு, சப்பீராள் நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். அப்பொழுது பேதுரு அவளை நோக்கி : நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் எனக்கு சொல் என்றான். அவள் : ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள். அப்பொழுது பேதுரு அவளை நோக்கி : கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? உடனே சப்பீராள் பேதுருவின் பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்.

அனனியாவும், சப்பீராளும் தேவனிடத்திலும், மனிதனிடத்திலும் பொய்சொன்ன பாவத்திற்கு ஆளானார்கள். மேலும், அவர்கள் தங்களை உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் போல் காட்டியது மூலமாக மாய மாலம் என்னும் பாவத்தையும் செய்தார்கள். ஆனால் உண்மையில், அவர்கள் சாத்தானின் வேலைக்காரர்களாக இருந்தார்கள். இந்த வேதவசனப் பகுதியை நாம் வாசிக்கும்போது, நம் மனதிற்குள் பல கேள்விகள் எழும்புகின்றன. சில கேள்விகளுக்கு வேதாகமத்திலேயே பதில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. சில கேள்விகள் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. இவ்வசனப்பகுதியில் காணப்படும் பாடங்களைப் புரிந்து கொள்ள இக்கேள்விகளுக்கான பதில்கள் அவசியமில்லை.

**இக்கேள்விகளை நாம் சற்று சுருக்கமாகப் பார்ப்போம்:**

1. அனனியாவும், சப்பீராளும் ஏன் வெவ்வேறு நேரங்களில் சபைக்கு வந்தார்கள்? இக்கேள்வியை சபையில் உள்ள ஆண்களிடம் கேட்டால் சிலர், சப்பீராள் சரியான நேரத்தில் புறப்பட ஆயத்தமாயிருக்கவில்லை என்று பதிலளிப்பார்கள். இப்பதில் சில பெண்களுக்கும் சில ஆண்களுக்கும் பொருந்துவதாக இருந்தாலும் கூட இக்கேள்விக்கான பதிலை வேதாகமம் கொடுப்பதில்லை. ஆதிதிருச்சபை தேவாலயத்தில் கூடியது. என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ( அப்போஸ்தலர் 2 : 46 : 5 : 12 ) இது கர்த்தருடைய நாளின் கூடுகை அல்ல, தேவாலயத்தில் தினந்தோறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கூடினார்கள். அல்லவா, அப்படிப்பட்ட கூடுகைகளுள் ஒன்றாகும்.

2. சப்பீராள் தன் கணவனுடைய மரணத்தை மூன்று மணிநேரம் எப்படி அறியா திருந்தாள்? இக்கேள்விக்கு வேதாகமம் பதில் கொடுக்கவில்லை. இருந்த போதிலும், Garega Rease, என்னும் வேதவல்லுநர், அப்போஸ்தலருடைய நடபடிகள் பற்றிய

வியாக்கியான புத்தகத்தில் இரண்டு சாத்தியமான பதில்களைக் கொடுத்திருக்கிறார். பேதுருவோ மற்ற அப்போஸ்தலர்களோ இந்த அற்புத சம்பவத்தைச் சற்று இரகசியமாக வைத்துக் கொள்ளலாம். அதாவது, கொஞ்சநேரத்திற்கு இது வெளியே தெரியாமல் இருக்கட்டும் என நினைத்து சபை அங்கத்தினர்களுக்கு கட்டளையிட்டிருக்கலாம். இச்சம்பவத்திற்கு மற்றுமொரு சாத்தியமான விளக்கம் சபை அங்கத்தினர்கள் அமைதியாக சுயபரிசோதனையில் ஈடுபட்டதன் காரணமாக சபையில் இருந்தவர்கள் அனனியாவின் மரணத்தை சப்பீராளுக்கு அறிவிக்காமல் இருந்திருக்கலாம், மேற்சொல்லப்பட்ட இரண்டு விளக்கங்களுமே சாத்தியமானவைகள் தான்.

3. தேவன் ஏன் இவ்விருரையும் கடுமையாகவும், துரிதமாகவும் தண்டித்தார்? முதலாவது, தேவன் மனுஷருடைய இருதயங்களை அறிந்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ( மாற்கு 2 : 1 – 12 ). இரண்டாவது, சபை அதின் ஆரம்ப கட்டத்தில் இருந்தது. தேவன் தம்முடைய வார்த்தைகளை உறுதிப்படுத்த அற்புதங்களைச் செய்து கொண்டுதான் இருந்தார். மூன்றாவது, இவ்விதமான பாவம் தொடர்ந்து நீடித்தால், அப்போஸ்தலர்கள் மற்றும் கர்த்தருடைய சபையின் நம்பகத்தன்மைக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும். மேலும், இக்கேள்விக்கான பதில் அப்போஸ்தலர் 5 : 11 ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. “ சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று ”.

4. அனனியாவுக்கும், சப்பீராளுக்கும் பாவம் கண்டித்து உணர்த்தப்பட்டு ஏன் மனந்திரும்புவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை? தேவன் அனனியாவை அடிப்பதற்கு முன்பு, பேதுரு அனனியாவிடம் அதைக் குறித்து விசாரித்தார். ஆனால், அனனியா உண்மையை ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், மனிதனுடைய இருதயக் கடினத்தை தேவன் அறிந்திருக்கிறார். ( மாற்கு 3 : 1 – 6 ) அனனியா தன்னுடைய பாவங்களைக் குறித்து முழுமையாக அறிந்திருந்தான். சப்பீராளுக்கும் தான் சொன்ன பொய்யைக் குறித்து சிந்தித்து மனந்திருப்புவதற்கு மூன்று மணி நேரம் கொடுக்கப்பட்டது. பேதுரு அவளை நோக்கி : நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் என்று கேட்டபோதே அவள் தான் சொன்ன பொய்க்காக மனந்திரும்பி இருக்க வேண்டும். ( அப். 5 : 8 ) அவளுக்கு மனந்திரும்பும் வாய்ப்பு கொடுக்கப்பட்டும் அவள் அதை பயன்படுத்த தவறிவிட்டாள்.

தேவனிடம் பொய் சொன்ன இத்தம்பதியினரைப்பற்றிப் படிக்கும்போது மற்றுமொரு

கேள்வி நம் மனதில் தோன்றுகிறது. அனனியா திட்டம் போட்டு கொண்டுவந்த பொய்யை சப்பீராள் சொல்ல மாட்டேன் என்று மறுத்திருக்க முடியுமா? அனனியாவும் சப்பீராளும் கர்த்தருடைய சபையில் அங்கம் வகித்தவர்கள்தான். பெண் ஆணுக்கு கீழாயிருக்க வேண்டுமென்பது சிருஷ்டிப்பில் தேவனுடைய நோக்கமாயிருக்கவில்லை. அவர் ஆணையும், பெண்ணையும் சமமாகத்தான் படைத்தார். இருந்தபோதிலும் தேவன் ஆணுக்கும், பெண்ணுக்கும் வெவ்வேறு பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார்.


சபையிலும், வீட்டிலும் ஆண் தலைமைத்துவமே தேவனால் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. இது தேவனுடைய திட்டம், இதை நாம் எவ்விதத்திலும் மாற்றவும் கூடாது மாற்றவும் முடியாது. எனவே, இக்கேள்வியை நாம் மறுபடியும் கேட்கிறோம். சப்பீராள் அனனியாவின் இப்பாவத்தில் பங்கு பெறமாட்டேன் என்று மறுத்திருக்க முடியுமா?

நிச்சயமாக மறுத்திருக்க முடியும்? அனனியா மற்றும் சப்பீராளின் பாவம் திடீரென நடத்தப்பட்ட ஒரு செயலல்ல. அது திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதி. சப்பீராள் தேவனை நாம் வஞ்சிக்கக்கூடாது என்று தவறுகளைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். அவளால் அனனியாவின் தீமையான திட்டத்தை தடுக்க முடியாவிட்டாலும் கூட அதில் நான் பங்கேற்கமாட்டேன் என்று மறுத்திருக்க முடியும்.

பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின் கீழ் குடும்ப அங்கத்தினர்கள் தங்களுக்கு பிரியமான வர்களுடைய பாவத்தை ஆதரிக்கவும் கூடாது, அப்பாவத்திலே பங்குபெறவும் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தார்கள். ( உபாகமம் 13 : 6 – 8 ) இவ்வசனப்பகுதி சப்பீராளுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 19 : 29 ல் அவர் நிமித்தம் குடும்ப அங்கத்தினர்களை விட்டவன் அதற்கு உண்டான பலனைப் பெறுவான் என்று போதித்திருக்கிறார்.மத்தேயு10 : 37 – ல் கிறிஸ்து நம் குடும்ப அங்கத்தினர்கள் எல்லாவற்றையும் விட நாம் அவரிடத்தில் அன்பு கூர வேண்டுமென்று போதித்திருக்கிறார். நம் வாழ்க்கையில் எந்நிலையிலும் தேவனே முதலில் வரவேண்டும். நாம் மனுஷருக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது “ (அப். 5 : 29 ) இங்கே சப்பீராள் தன் கணவனுக்குக் கீழ்ப்படியவேண்டியது அவசியமாயிருந்தது என்று சொல்லி அவளை மன்னித்து விட முடியாது.வேத வாக்கியங்களின்படி சப்பீராள் அப்போஸ்தலர் 5 : 1 – 11 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற பாவத்தில் விருப்பத் தோடு பங்குபெற்றிருக்கிறாள்.. அழகானவள் என்னும் அர்த்தங்கொண்ட சப்பீராள் மரணத்தின் மூலமாக உதிர்ந்துபோனாள்.

✝

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**
**P.R. சுவாமி : 098440 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## சத்திய வழி



❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் - 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்




❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 - 6:30 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு - 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. P.C. பிலேமோன் ராஜா
❖ தமிழன்/நம்பிக்கைTV : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி
<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. .................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________